வாதகுன்ம ... ... ... ... .... ... ... ... ...
மனம் வார் ... ... .... .... ... குண்டா மென்றது

முடிவு :

மாதளங்கனி விரையிற் கண்ட நிறம்போற்
சிவந்திருக்குந் தொட்டுப் பணவிடை
தேனிலிட தோசமுடனே பல சன்னி
யெட்டிப் பாராதோ டுமென்ன யினிய குதிகை கட்டியிதே ! 21

காலம் :

இல்லை

குறிப்பு :

இதுவும், படித்தறிய இயலாத நிலையில் உள்ளது.

வரிசை எண் : 2941 சுவடி எண் : 1528-g

# தெட்சணாமூர்த்தி மெய்ச் சுருக்கம்

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 400 அளவு : 43×4 செ.மீ.
பக்கத்திற்கு : 12—13 வரிகள் ஆசிரியர் : தெட்சணாமூர்த்தி பொருள் : மருத்துவம் நிலைமை : மிகப் மிகப் பழுது முழுமை : முற்றற்றது
எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சூதமுனி யெந............உள்க் கொண்டு
.................. பொருளைக் கண்டார்க்குப்
பூரணமே காப்பு.

முடிவு :

அஷ்ட்டசித்தி புரியஷ்ட்ட மெட்டிற்
பொருளான பொருள்பெறவும் அருளைப்
பெற்றுப் போற்றுவாய் பரப்பிரம்ம
மெய்ச் சுருக்க முற்றே. —51

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, ஓரளவுக்கு தெளிவான எழுத்துக்களைக் கொண்டதாயினும் நடுப்பகுதி இற்றுப்போயுளது.

வரிசை எண் : 2942 சுவடி எண் : 1528-h

# வயித்தியச் சதகம்

ஏடுகள் : 12 கி. எண்ணிக்கை : 1000 அளவு: 43×4 செ. மீ.
பக்கத்திற்கு: 10—13 வரிகள் ஆசிரியர்: அறியக்கூடவில்லை பொருள் :
மருத்துவம் நிலைமை : மிகமிகப் பழுதடைந்த நிலை முழுமை : முற்றற்றது
எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக.

அரு உருவா யருபமுமா
யடங்காத பொருளுமாகி அடங்கலாக
உருவாய் அண்ட பகிரண்டத்தும்
புறத்துமாகி நின்று
ஒரு உருவாய் வயித்தியத்தின்
சதகத்தை வழுத்த

முடிவு :

உண்டான விண்டாறு ..............
........... ........... ............
உண்டான .......................
வயித்திய சதகம் முகிந்தது
முற்றும்

காலம் :

இல்லை

குறிப்பு :

இதன் ஏடுகள் சல்லடைக் கண்ணாக உள்ளன. 8-ஆம் ஏடும் கடைகி ஏடும் பாதி பாதியே உள்ளன்.

இதன் பின்னர் சில வெற்றேடுகள் உள்ளன்.

வரிசை எண்: 2943 சுவடி எண்: 1529-a

# கம்பளிச் சட்டை கைலாச நாதர் சூத்திரம்

ஏடுகள் : 60 கி. எண்ணிக்கை : 1200 அளவு : 31×3 சென்டி மீட்டர்
பக்கத்திற்கு : 5—6 வரிகள் ஆசிரியர் : கம்பளிச் சட்டை கைலாச நாதர்
பொருள் : மருத்துவம் நிலைமை: மிகப் மிகப் பழுது முழுமை : முற்றுமுளது
எழுத்து : தமிழ்.

தொடக்கம்:

(தலைப்பு இல்லை)

சூத்திர மோதுமுன்னே சொல்லுரேன் கிணேசன் காப்பு
.................................. ங்குந் தானாயி
தோத்திரம் பொருளும் தானாயி
.......................... பூறணம் காப்புத் தானே. —1

முடிவு:

வானான கேசறத்தா லாடும் போது
வாற்தை வந்தால் சாஸ்த்திரமும் சூஸ்த்திரமும் பேசும்
கோனான சின்மயத் ............ காணார்கள் ............
வர்க்கம் வேனான் சூஸ்த்திரந்தான் நூத்தொன்று
வேதாந்த கருணையினால் ............ முத்தே. —201

குருகிடாட்ச முண்டாக வேணும்
கணபதி துணையாக வேணும்
சவுந்தரி துணை.

காலம்:

இல்லை

குறிப்பு:

இதில், தலைப்பு இல்லாததால் பிற சுவடிகளினின்றும் கண்டுபிடித்து தலைப்பிடப் பட்டது. மிக மிகப் பழுதானதால் எழுத்துக்கள் சரியில்லை. இது எமது சுவடி எண் 557/D - 1164 போன்றது.

வரிசை எண் : 2944 சுவடி எண் : 1529-b

# சட்டைமுனி சுவாமி கர்ப்ப சூத்திரம்

ஏடுகள் : 33 கி. எண்ணிக்கை : 700 அளவு : 31×3 செ.மீ
பக்கத்திற்கு : 5—6 வரிகள் ஆசிரியர் : சட்டைமுனிசுவாமி பொருள்: மருத்துவம்
நிலைமை : மிகமிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

யேறுமென்று பலநூலில் கோடா கோடி
யென்னை மெச்சுங் கொங்கணர்தான் பாடிப் போட்டார்
தேறுமென்று கண்டு கொள்ளுமங் கோரக்கர் சொன்னார்
சிவமான மூலகுரு + + + + +
+ + + + + + சித்தி மாண்டார் காணே ! ... 1
காணப்பா காயகற்பம் கொள்ளுவோர்க்கு
கைமுறையாய்க் காட்டுகிற கலந்தளித்தார் பாரே

முடிவு :

காரப்பா குருபதத்தைக் காத்தால் சித்தி
காயசித்தி பாடியதோர் காட்சி முற்றே ! ... 92

கம்பிளிச்சட்டைமுனி சுவாமியார்
கற்பசூத்திரம் தொண்ணூத்தி ரெண்டு
எழுதி நிறைந்தது முற்றும்
குருகிடாட்ச முண்டாகவும்

காலம் :

ஏவிளம்பி வருஷம் மார்கழி மாதம் 29-ந் தேதி பிரமபுர நவனப்பன் சேர்வைக் காரர் குமாரர் சின்னத்தம்பி யெழுதின சட்டைமுனி சுவாமி சாஸ்திரம் கர்ப்பம் தொண்ணூத்தியிரண்டு (எடுத்தவன்) குடுத்துவிடவும். கொடாவிட்டால் சட்டைமுனி சுவாமி சாபம் யெடுத்து ...............றிந்து சாஷ்திரத்தை வைத்திறாமல் குடுத்து விடவும். பறை துணையாகவும்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 352-a/D. 695-ன் வேறாயது போல்காணப்படுகிறது. கடைசிப் பாடல் ஒன்றாக உள்ளது.

வரிசை எண் : 2945 சுவடி எண் : 1529-c

# அகத்தியர் அஷ்ட கர்ம சூத்திரம் - 136

ஏடுகள் : 52 கி.எண்ணிக்கை : 600 அளவு : 31×3 செ.மீ
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் ;

(வானைத்தாவிய) —........... மகத்தான ரிஷியுடைய
............... ........... நேர்மை
பானைத்தாவிய சிவபூசை பரிவாக
... ...... ... ... ... ... ... ... ... ... ...
மீனைத் தாவிய ராசி விளங்கி நின்ற
கன்னிமுதல் வில்லுமேஷம்,

முடிவு :

கூறா ........... முடைய வேடங்கண்டால்க்
குறுக்கையே ரண்டும்
வேறாக வந்த தரத்தாலும் ............... ஷை
யெல்லார்க்கு முண்டு விதமுடையப்
பாடலிவைப் பாடினாரே. — 136
குருபாதந் துணையாக வேணும்
வாலாம்பிகா லெட்சிக்க வேணும்
.................. துணை

காலம் :

யேற்விளம்பி வருஷம் தை மாதம் 2-ந் தேதி பிரமபூஷந வனப்பன் சேறுவைக் காரர் குமாரன் சின்னத்தம்பி எழுதி முகிந்தது. அகத்திய சுவாமி அஷ்ட்ட கற்ம சூத்திரம். யெடுத்தவன் குடுத்து விடவும். குடுக்காதே போனால் அகத்திய சுவாமி சாபம் யிதை யெடுத்தவனுக்குக் கிடைக்கும். இது வறிந்து குடுத்துவிடவும். பொ(ஸ்தகம்) கேட்டு வாங்கினவனுத்கு சாபமில்லை. ரேணுகா துணையாக வேணும்,

குறிப்பு :

இதில் நடு ஏடு ஒன்று பாதியாக உள்ளது. நல்ல பயனுடைய நூலாகக் காணப்படுகிறது. இது, எமது சுவடி எண் 804/D-1612 அகத்தியர் தீட்சா விதி 200 போன்றுளது.

வரிசை எண் : 2946 சுவடி எண் : 1529 - d

# அகராதி நிகண்டு

ஏடுகள் : 63 கி. எண்ணிக்கை : 700 அளவு : 31×3 செ. மீ.
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : போகர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

...... ...... ...... .........
...... ...... ...... .........
...... ...... ...... .........
...... ...... ...... .........
அரிக்கி கடுக்காய்
அக்கற ...... தான்றிக்காய்
அ ............... தான்றிக்காய்
அ ......... தி கோரம் — நெல்லி

முடிவு:

சிம்ப சன்னி
அமனிப்பாது சன்னி
அலட்டுச் சன்னி ஆகச் சன்னிவகை —13
குரு முன்னிற்க வேணும்.

காலம் :

யேற்விளம்பி வருஷம் தை மாதம் 6-ம் தேதி
பிறம பூறநவனப்பன் சேறுவைக்காறர் குமாரன்
சின்னதம்பி யோகர் நிகண்டு, புதன்கிழமை
எழுதி நிறைந்தது முற்றும்.

குறிப்பு :

கடைசி ஏடு பின்பகுதி இல்லை. இது எமது சுவடி எண் 790/D - 1595 போகர் நிகண்டின் வேறாயது. போகர் நிகண்டு என்பதை யோகர் நிகண்டு என்று கடைசியில் எழுதப்பட்டுள்ளது தலைப்பில் 'அகராதி நிகண்டு' என்று மட்டுமே உளது. மூன்று பத்தியாக எழுதப்பட்டுளது.

ரிசை எண்: 2947 சுவடி எண்: 1530

# அகத்தியர் வைத்தியம் - 1500

ஏடுகள் : 233 கி. எண்ணிக்கை: 5000 அளவு: 29 × $3\frac{1}{2}$ செ.மீ
பக்கத்திற்கு 6—11 வரிகள் : ஆசிரியர்: அகத்தியர் பொருள்: மருத்துவம்
நிலைமை: பழுது முழுமை: முற்றற்றது எழுத்து: தமிழ்

தொடக்கம்:

ஹரி : ஓம் நன்றாக
குருவே துணை.

பாகுடனே கினேசன் பாதம்
பணிந்து முக் குணங்க ரைந்து
வாகடச் சுவடி யெல்லாம்
வகை வகை தோய்ந்து பார்த்து

முடிவு:

பாண்டத்து மருந்து மருந்துக்கு சிலமிருதூணி
பாச்சியே காச்சடா நாலொன்றாய்க் குருக்கி
பாண்டத்தில் வடிகட்டி விடுகுருணி யப்பா
பாங்கான (இல்வளவே உள்ளது) —1003

கரலம்:

இல்லை

குறிப்பு:

இது, எமது சுவடி எண் 786-a/D - 1589, அகத்தியர் வாகட சூத்திரம்-1500 போன்றதெனினும் பாட வேறுபாடுகள் மிகுந்து காணப்படுகின்றன. ஏடுகள் தடுமாற்றமாக உள்ளன.

இதன் பின்னர் வேறு வைத்தியம் எழுதிய 5 ஏடுகள் உள்ளன.

வரிசை எண் : 2948 சுவடி எண் : 1531

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 250 கி. எண்ணிக்கிகை: 3000 அளவு: 32 × 3 செ.மீ
பக்கத்திற்கு: 4—6 வரிகள் ஆசிரியர்: பலர் பொருள்: மருத்துவம்
நிலைமை: மிக மிகப் பழுது முழுமை: முற்றற்றது. எழுத்து: தமிழ்.

தொடக்கம்:

………… அடியனைப் போத்தி செய்து
மேதினீர் மனிதருக்கு
வந்தவீ…… சோதியாய் நின்ற
ஏகமஞ்சுருபையின்ங் கிறுபை காப்பு
(ஈ)சுபரன் துணை. மீனாட்சியம்மன் துணை
சுப்பிரமணியன் துணை. சிவமயம்.

முடிவு:

மொத்தம் செகரங் கவுசைகளானதும்
குன்மம் மொடெட்டும் குறித்த நீர்க்கோவையும்
வண்ணமாம் கலையு மாறிடுமென்றே
நன்மையிலரனார் நவின்றனர் மொழியே !

வாலாம்பிகை லெட்சிக்க.

குரு கிடாட்சம்

காலம்:

இல்லை

குறிப்பு:

இது, ஒரு பெரிய சிறந்த சுவடியாகக் காணப்படுகிறது. தொடக்கம் சிதைந்துள்ளதால் தலைப்புக் காண இயலவில்லை.

இதில், சிலேஷ்ம சுரநிதானம், அரக் கெண்ணை, வாத க்ரப்பான், குதிரை வலிப்பு குணம், இதுக்கு மருந்து, வெடிசன்னிக் குணம், குன்மத்துக்கு, எரி குன்மத்துக்கு, வாத சுரத்தின் குணம், நார்த்தங்காய் லோகியம், சுண்ணாம்பு போலே நீர் உறைந்து நீர் கழிந்தால் மருந்து குன்மத்துக்கு, படர்தாமரைக்கு வினோதம் முதலான பல அறிய தலைப்புகள் காணப்படுகின்றன. பின்னர் 5 மருத்துவ ஏடுகள் உள்ளன.

வரிசை எண் : 2949 சுவடி எண் : 1532-௮

# (அகத்திய நாடி சூத்திரச் சுருக்கம்)

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 80 அளவு : 26×3 செ மீ.
பக்கத்திற்கு : 5—6 வரிகள் ஆசிரியர் : (அகத்தியர்) பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரிஓம் நன்றாக குருவாழ்க குருவேதுணை
சிங்கிவா குருசாமியுன் பாதம் துணை.

கணபதி என்றிடக் கலங்கும் .............. கருமமில்லையே !
வாக்குண்டாம் ... — ... ... ... தமக்கு

சரசுபதி துணையுண்டு

கரிமுக னடியை வாழ்த்திக்
கையிதனில் நாடிபார்க்கில்
பெருவிர லங்குலத்தில்
பிடித்துடன் நடுவே தொட்டால்

முடிவு :

வெண்ணையிட்டு மத்தித்து பூரம் போட்டு
மத்தித்து சீலையில் தடவிப் போட ஆறும்.

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, தலைப்பு இல்லாமையால் முதற் செய்யுள் கொண்டு தலைப்பிடப்பட்டது. இது எமது சுவடி எண் 837-a/D-1709 போன்றது. தொடர்ச்சி சரியில்லை. இதன் பின்னர் 2 உதிரி ஏடுகள் உள்ளன.

வரிசை எண் : 2950 சுவடி எண் 1532-b

# அகத்தியர் ரெத்தினச் சுருக்கம் - 360

ஏடுகள் : 113 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 26×3 செ.மீ.

பக்கத்திற்கு : 6—7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது. எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பூறண மாநிறைந்த திறப்பறதாள் போத்தி
புகளுகுறேன் வயித்திய ரெத்தினச் சுருக்கம் தன்னை

முடிவு :

நாமப்பா செம்பருத்தம் பூச்சரத்தாலே
நலமாக நாற்சாம மாட்டிக் கொண்டு
தாமப்பா புரசம்பூ னாலுசாமம்
தப்பாமல்த் தக்குணியின் பழச்சார்க் கேளு
சாமப்பா யிருசாம மாட்டிக் கொண்டு
சமத்தாகப் பொற்கையான் சாறு கேளே ! — 330

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 767-a/D-1549 போன்றது, இதில் 9-ஆம் எட்டுக் குப்பின் உதிரி ஏடுகள் உள்ளன.

வரிசை எண்: 2951 சுவடி எண்: 1532-C

# நாடி சாத்திரம்

ஏடுகள்: 12 (114-125) கி. எண்ணிக்கை: 250 அளவு: 26 × 3 செ.மீ
பக்கத்திற்கு: 5—7 வரிகள்: ஆசிரியர்: அறியக்கூட வில்லை பொருள்: மருத்துவம் நிலைமை: பழுது முழுமை: முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

பூதணாடிக் குணம்
அய்விர லைய்ந்து நாடி
அதுசெய்யும் வகையைக் கேளீர்
மெயிவிர லொன்று வாதம்
மூன்றினி லொன்று பித்தஞ்

முடிவு :

நீரியுடனே தேவிதனை வசியம் செய்தால்
சேதியுடன் வந்து தோரு
ஊளியுந்தான்ச் சொல்லு முன்னே
போகுமடா தும்யம் நீங்கும்
வியாதியுடன் முதனறம் கொனவேந்தால்
என்மகனே ஊளியது ஒதுங்கிப்போமே ! —10

காலம்:

இல்லை

குறிப்பு:

இதில், தலைப்பு தரப்படவில்லை.

வரிசை எண் : 2952 சுவடி எண் : 1532-d

# மரணக் குறிநூல்

ஏடுகள் : 5 (126-130) கி. எண்ணிக்கை : 120 அளவு : 26×3 செ.மீ.
பக்கத்திற்கு : 5—7 வரிகள் ஆசிரியர் : சூதமுனி பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம்:

அவத்தைக் குறி

வாதமது முன்னெழுந்து தாழ்ந்து சற்றே
மயிலதுபோல் நடைநடந்து மங்கு மாகில்
சேதமது யில்லை யென்பத் தாறா மாண்டில்
செப்பலாம் மரணமென்றே தீர்க்கமாக
நாதமது குறைந்து விட்டில் போலே கண்டால்
நாளெட்டில் மறண மென்றே நம்பலாகும்
பேதமது யில்லையிது பிசகிடாது
பெரியவருஞ் சூதமுனிப் பேசுங்காலே ! —1

முடிவு:

கடைதனியே யின்னமொரு சூச்சஞ் சொல்வேன்
கருதரிய நாவதுவே நீழாதாகில்
யிடைதனிலே யேழாநாள் சாவாரென்றும்
யினிதான சூதமுனி யியம்பினாரே ! —13

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், தலைப்பு இல்லை. உடல் இயக்கம் கண்டு இன்ன நாளில் சாவான் என்று கூறுகிறது இந்நூல்.

இதன் பின்னர் மகாவல்லாதி லோகியம் முதலான லேகியம் செய்யும் முறை பற்றிய ஏடுகள் 4 உள்ளன.

வரிசை எண் : 2953 சுவடி எண் : 1532-உ

# அகத்தியர் கர்ம சூத்திரம் - வயித்திய ராசாங்கம் - 300

ஏடுகள் : 100 கி. எண்ணிக்கை : 2200 அளவு : 26×3 செ.மீ.

பக்கத்திற்கு : 6—7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

பூறணமாய் மூலமுத லாறாதாரம்
புரியட்டந் திசைவாய்வு நாடி மூன்று
காறணமாய் யிடைபின்னாய்ச் சுழினை யாகில்
கலந்து நின்ற வாத பித்தஞ் சிலேற்பனமாகி

முடிவு :

சித்தியுண்டாய் மவுனத்தில்ச் சொல்லு வோற்கு
தெளிவான மனதுரிமை பரிவினோடு
பத்தியாய் நிலைத்த பின்பு பாவம் போச்சு
பஞ்சபொறிப் புண்ணாண்மை பறந்து தய்யா
புத்தியாய்ப் பிளைப்பதற்கு சாகரத்தே செல்லு
புகழான மனவாசி வாய்வு வேகம்
முத்தியா யிருவினையு மத்தத் தேசி
முதலான சொற்கபத முத்தி தானே ! — 229

கயிலாசப் பொதிகைமுனி யருளிச் செயித
கற்ம சூஸ்த்திரம் முற்றும்
தெட்சிணாமூர்த்தி துணை
குருசாமி பாதம் துணையுண்டு

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எம்து, சுவடி எண் 592 / D-1210 போன்றது. அதில் 302 பாடல்கள் உள்ளன. இதில் 229 பாடலுடன் முற்றும் என்றுள்ளது,

இதில், மேகராசாங்கத் தயிலம், அப்பிரக செந்தூரம், ரசபற்பம், தாம்பூற செந்தூரம் லேகியம், வலியஞ்சுக்குறாசாங்கத் தயிலம், பாண்டு வரலாறு நிவாரணம் முதலான பல அரிய தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 2954 சுவடி எண் : 1532-f

# அகத்தியர் தாது சிந்தாமணி

ஏடுகள் : 34 கி. எண்ணிக்கை : 800 அளவு : 26 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 6—7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக

ஆதி நிரைஞ்சன மசுன மோன வாலை
யத்துவித சைதன்னிய ஞானதீபச்
சோதி திருவடி தொழுதே அகஷ்த்திய னாதன்சொல்
சீர்த்த வாக்கியத்தை தமிளாய்ச் செயிது
தீதில்லா மதுரை மீனாட்சி பேரில்
திக்குவிசயப் பதங்கள் படித்தோன் றானும்
தாது சிந்தாமணி தனையு முலகில் பாடத்
தந்திமுக னிருசரணம் போற்றி னேனே ! —1

முடிவு :

பதனமுறு வாதமிஞ்சி நடந்தால் வெள்ளை
பாய்ந்து கையி பீசனந்தான்
புதுமஞ்சள் நிறங்காட்டும்
பித்த மேகம். —104

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, அரிய சுவடியாகக் காணப்படுகிறது. இதில் மனித உற்பத்தி நாடி வகை, வாத வகை, நாடி நடை, வியாதி வரத்து, பட்சி ஆரூடம், ராசி ஆரூடம் கிறகாரூடம் சர ஆரூடம், திசை புத்தி சித்திரம், காலச் சக்கரம், கோசரம், பஞ்சபூத குறி, சுவாசக் குறி, சிலேட்டுமக் கூறு, தொந்தக் கூறு, வாதக் கழிச்சல் முதலான பல தலைப்புகள் உள்ளன. ஏடுகள் பிறழ்ந்துள்ளன.

வரிசை எண் : 2955 சுவடி எண் : 1532-g

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 50 அளவு : 26×3 செ.மீ.
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூட வில்லை பொருள் : மருத்துவம் நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பறுதி தனிலுதித்த் திருப்பால்க் கடல்சூழ்
புவியானதிலே பெருகிய மானிடர்க்கு
வந்து புக்கிடும் வியாதி தக்கிடத்தே
அறிந்து குருமுனிவன் மனத னம்புடன்
மானிடர் தினம்புயத்தே திருந்தியே

முடிவு :

கண்டப்பா கொண்டுவரப் பத்தியமாக்
கிவிசையொடு பீலிகையுங் கரைந்து போமே
வன்றப்பா பெருவயறு வாயுவுக் குத்தும்
வயத்துவலி மகோதரங்கள் அத்துப் போமே !

காலம் :

இல்லை

குறிப்பு :

ஏடுகள் பிறழ்ந்துள்ளன. உதிரி ஏடுகள் போல் காணப்படுகின்றன.

வரிசை எண்: 2956 சுவடி எண்: 1533

# கோடா சூழிகை

ஏடுகள் : 115 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 26×3 செ. மீ. பக்கத்திற்கு : 5—9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூட வில்லை பொருள் : மருத்துவம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

...........கோட சூழியைய் யானும்
உலகிலுள்ள வீ —.....................
(உ)ரைக்கிறேன் திரிகடுகு திரிபலாதி
அரிதாரம்........... ...........

முடிவு :

பறங்கியும் வரடும் பவுத்திரம்
கண்டத்தின் மாலையும் மண்டக் குடச்சலும்
வளர்கின்ற கவுசை பீனிசம் யிதுமுதல்
வறாது கை கண்டதே. (இது 111-ஆம் பக்கம்)

(பின்னர்)

பீத ரோகிணி மாத்திரை

சங்கு சுக்கோடு மிளகு திப்பிலி தாரமோ
டதி மதுறமும் புங்கம் வித்தோடு பீதுரோகணி
பெரிய துத்தம் னொ ................

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 401/D-826 சருவகோடா சுளிகையினும் வேறாயது. பொதுவாக வைத்தியத் திரட்டுபோல் காணப்படுகிறது. இதில், பல அரிய தலைப்புகள் உள்ளன.

தலைப்புப் பகுதி ஒடிந்துள்ளதால் பாடல் கொண்டு தலைப்பு இடப்பட்டது.

வரிசை எண் : 2957 சுவடி எண் : 1534 a

# வாகடம்

ஏடுகள் : 24 கி. எண்ணிக்கை : 600 அளவு : 34×3 செ.மீ.

பக்கத்திற்கு : 6—8 வரிகள் ஆசிரியர் : (அகத்யதிர்) பொருள் : மருத்துவம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்,

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருமுன்னிற்க
வாக்குண்டாம் ......................... தமக்கு
குருமுகம்மது முன்னிற்க வேணும்
கிரந்தத்தின்படி தமிழில் எடுத்தெழுதப்பட்ட வாகடம்
அல்லா உதவிசெய்ய வேணும்
குருமுன்னிற்க வேணும்.
............ண்டார்ன் தன்னை மொய்யிட்டளைத்து வந்து
—.........தன்னை தங்கள் போட்டு பரிவுடன்
............குருவாவரன் கண்டீர் —1

முடிவு:

புகலு முன்னிரவில்க் கதித்த வாயு
நடுவிரலில் சதையப் பித்தமிக வுண்டாம்
தாள்ந்த யிரவில்க் கபமங்க ..........

காலம் :

இல்லை

குறிப்பு:

தலைப்புப் பகுதிகள் முறிந்துள்ளன. இன்ன வாகடம் என்று அறிய இயலவில்லை. மொழி பெயர்ப்பு நூலெனத் தெரிகின்றது.

வரிசை எண் : 2958 சுவடி எண் : 1534-b

# நாடி சாத்திரம்

ஏடுகள் : 13 கி. எண்ணிக்கை : 300 அளவு : 34×3 செ.மீ
பக்கத்திற்கு : 6-7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள்: மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை: முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம்:

...............ஒள்ளிய சோதி தன்னில் ............
உள்ளொளி போற்றுமங்கை உன்முகம்
விளங்கத் தோன்றில்
ஒள்ளிய நயனமாகு ...............
கண்டிடாயே. — 1

முடிவு:

முகவாதம் பொருந்தும் கணசூலை
தலைக்கனப்பூக் காத்துப் போலே போய்விடுமே
கழுத்துக்கு மேல்க்களை உள்ள தெல்லாம் — 68

காலம்

இல்லை:

குறிப்பு:

இது, பிறநாடி சாத்திரங்களின் வேறுபட்டுள்ளது. இந்த ஏட்டிலேயே கண் மருத்துவம் தொடங்குகிறது.

வரிசை எண் : 2959 சுவடி எண்: 1534-c

# கண் வயித்தியம்

ஏடுகள் : 35 கி. எண்ணிக்கை: 700 அளவு: 34 × 3 செ மீ
பக்கத்திற்கு : 6-7 வரிகள்: ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை: முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம்:

கண் வியாதிக்கு மருந்து

நெல்லிக்காய்கந்தகம் ஒரு காசிடை கொண்டு வந்து
எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து
ரெண்டு காசு ஈசலிறகுபோல தகட்டித்து

முடிவு :

சுட்ட சாம்பல் நல்ல மஞ்சள் இதுவெல்லாம்
கூட்டி அரைத்து ............... கொண்டு
நாசிக்கு ஒரு கொள் பிரமாணம்
ஏத்தவும் அந்த மருந்துடன் விட்டு
சாரிச்சிரது நத்தை தளல் விடவும்.

காலம் :

இல்லை:

குறிப்பு:

இதில், கண் பூப்படலம், விரணம் பலவுக்கும், குத்துப்பட்டகண்ணுக்கு, கண்ணோக்காடு, கண்வியாதி தொண்ணூத்தாறுக்கும் முதலான பல தலைப்புகள் உள்ளன. தலைப்புப் பகுதி சிதைந்துள்ளதால் பிற தலைப்புகள் அறியக்கூடவில்லை.

வரிசை எண் : 2960

சுவடி எண் : 1535-a

# கொங்கண நாயகர் (வைப்பு முறை)

ஏடுகள் : 13 கி.எண்ணிக்கை : 500 அளவு : 43 × 4 செ.மீ
பக்கத்திற்கு : 10-11 வரிகள் ஆசிரியர் : கொங்கணர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக

ஆதியந்த மில்லாத வெளியுந் தாண்டி
போகருட பதத்தைப் போற்றி
சோதியென்ற சின்மயத்தி னாவிபாதம்
துலங்கியதோர் ரிஷிகளுட பாதம் போற்றி

முடிவு :

நாமப்பா தொட்டிக்கி அறைத்துக் கொண்டு
நலமாகச் சட்டிக்குள் மூடிக் கொண்டு
ஓமப்பா யெரித்திடு நீ சொன்னே னப்பா
உத்தமனே துரைக்கெல்லா மாதி கூட்டே, — 104

முற்றும்
குருவே துணையாக வேணும்

கீர்லம் :

இல்லை

குறிப்பு :

இது எம்து சுவடி எண் 777-b/D 1575 போன்றது அதில் 205 செய்யுட்கள் இருக்கின்றன. இதில் 104 செய்யுட்களே உள்ளன. சுவடியின் தலைப்பு முறிந்துளது பாடல் தொடக்கம் கொண்டு தலைப்பு தரப்பட்டது.

வரிசை எண் : 2961 சுவடி எண் : 1535-b

# வாலைவாகடம் குணமும் மருந்தும்

ஏடுகள் : 16 கி.எண்ணிக்கை : 500 அளவு : 43×4 செ.மீ
பக்கத்திற்கு : 10-11 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை - மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

வாலக்கிறிகக் குணமும் மருந்து
மந்திரமெந்திரமுங் காலக்கறிப்பு நீர் செரியுங்
கட்டுஞ்சிலக் குளையு மெண்ணையுடன்
சொல்

முடிவு :

முதுவெதுப்பி பாவட்டை முளகு
சுக்கோ டரைத்திதனை
...... ...... ......... தன்னில் முலைப்பாலில்
குறையா மணிபோலத்தான் இருத்த
துதிவே பொருமல்க் களியகலும்
துலங்கும் குளிகையிதோ மென்றே ! — 185

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், குழந்தைப் பிணிக்குணம், முட்டுத் தோஷத்துக்கு மருந்து, பறவை தோஷத்துக்கு துவாலை, களிமாந்த மருந்து, மாந்தங்களுக் கெல்லாம் மருந்து, மாருதங்களுக்குப் புகை, அமுர்த குளிகை, இருமல் சளி, சகல வயறூதலுக்கு, மற்றும் தலைப்புகள் உள்ளன.

இது, பிள்ளைகளுக்கு ஏற்படும் நோய்க்கு மருந்து கூறும் நூல்,

வரிசை எண் : 2962 சுவடி எண் : 1535-c

# சுந்தரனார் அதிசயநூல் - 36

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 100 அளவு : 43×4 செ.மீ.
பக்கத்திற்கு : 10—11 வரிகள் ஆசிரியர் : சுந்தரனார் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம்:

சீரான உமைதேவி பாதம் போற்றி
செகம்புகழும் சுந்தரனார் புவிறோமெய்க்கப்
பேரான அதிசெயநூல் முப்பத் தாறும்
பிரியமுடன் பாடுதற்கு ............ போற்றித்

முடிவு :

இருவருடைய பேரையு மெழுதி வைத்து
ஆயிரத் தெட்டுருச் செவித்து அவாளிருக்கு
மிடத்தில் கொண்டுபோய் முன்னெறப்பில்
வைக்கவும். அந்தச் சாம்பலை அவாள்
நடக்குமிடத்தில் தூத்திவிட்டு வரவும்
பிரியும். கை கண்டது.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், தலைப்பு அரித்துள்ளது. உள்தலைப்புகள் இல்லை. சில வினோதங்கள் காணப்படுகின்றன.

வரிசை எண் : 2963 சுவடி எண் : 1535-d

# அகத்தீசுரர் சொன்ன லேகியம்- பூரணாதி

ஏடுகள் : 1½ கி. எண்ணிக்கை : 80 அளவு : 43×4 செ.மீ

பக்கத்திற்கு : 9 - 10 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஆதியந்த மூலிகையைக் கற்பங் கூட்டி
அறைவிரேன் புலத்தியனே லெட்சயங்கள்
சித்தியோ விந்தப் பனிரெண்டா மாண்டிற்கஞ்சா
உத்தமனே வேறமேறாயப் பிடில் கீத்தூக்கித்

முடிவு :

யோடியதோர் வாசியென்ற வோட்டாத்தாலு
முதித்தெழுந்த ரவியினுட தினத்தினாலுங்
கூடியதோர் வயசெல்லாங் குறைந்து மாண்டாள்
கூறுரேன் குளிகையினிக் கூறுரேனே. — 19

காலம் :

இல்லை

குறிப்பு :

நூல் முற்றுப் பெற்றதாகத் தெரியவில்லை. குளிகை கூறுகிறேன் என்று கூறப்பட்டுள்ளது. அடுத்து வேறுநூல்உள்ளது.

வரிசை எண் : 2964 சுவடி எண் : 1535-உ

# சட்டைமுனி பூரணாதி

ஏடுகள் : ½ கி. எண்ணிக்கை : 25 அளவு : 43×4 செ.மீ
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : சட்டைமுனி பொருள்: மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

தாயான பராபரையைப் பூசை பண்ணச்
சாதகமாய் வாமத்தில் பூசை பண்ணும்
ஓயாமல் கிடைக்குமே மது வில்லாட்டா
லுத்தமனே சொல்லுகிறேன் லகுவாய்க் கேளே.

முடிவு :

கோறத்திலே கிண்டியது மெழுகு பதமானால்
கொள்ளமட்டு முறுட்டியதைத் தியானஞ்செய்து
காறத்திலே யுன் மனையைப் புருவ மையத்துள்ளே
கைமுறையாய்ப் பூசித்துப் பொசித்திடாயே! — 3

சிவமயம்

காலம்:

இல்லை

குறிப்பு:

இதில், மூன்று செய்யுட்களே உள்ளன.

வரிசை எண்: 2965 சுவடி எண்: 1535-f

# திருமூலநாயனார் பூரணாதி

ஏடுகள் : 2½ கி. எண்ணிக்கை: 2½ அளவு: 43 × 4 செ.மீ
பக்கத்திற்கு 8—9 வரிகள் : ஆசிரியர்: திருமூலர் பொருள்: மருத்துவம்
நிலைமை: மிகப் பழுது முழுமை: முற்றுமுளது எழுத்து: தமிழ்

தொடக்கம்:

சிவமயம்

கோரக்கர் மூலிகை குருவினுப் தேசம்
நேரொக்கக் கூட்டநிலை யறிவாரில்லை
நேரொக்கக் கூடநிலை யறிவான் றனக்குச்
சீரொத்து நிற்குஞ் சிவபதந் தானே! — 1

முடிவு:

தீரும் பத்தியஞ் சிறந்த யெரிகுணம்
தீருஞ் சயமுதல் சேர்ந்த பிரமியந்
தீருங் கிராணியுஞ் சேர்ந்திடும் வாயுவும்
தீருஞ் சடத்துள்ள தீவினை யாவுமே! — 26

திருமூல நாயற் முற்றும்
தேவிசகாயம்.

காலம்:

இல்லை.

குறிப்பு:

இதன், பாடல்கள் திருமூலரின் திருமந்திர செய்யுளமைப்பில் உள்ளன.

வரிசை எண் : 2966 சுவடி எண் : 1535-g

# கோரக்கர் பூரணாதி

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 100. அளவு : 43×4 செ. மீ
பக்கத்திற்கு : 8—9 வரிகள் ஆசிரியர் : கோரக்கர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

வணங்கியே குருமு......ற..........க் கற்பங்கூட்ட
வகைசொல்வேன் வருஷமொரு மூன்று நின்ற
குணம்பெரிய கோரக்கர் மூலி தன்னை
கருப்........ ..................டந்தா னிறங்குன் றாமல்

முடிவு :

நாணுஞ்சு தக்வாய்வு சத்தி பித்தம்
கயரோக்ங்களும் போம் நாடித்தின்ன
பேணியிந்த லேகியத்தைச் செய்தா யாகில்
பேரின்ப ஞானசித்துப் பிலக்கும் தானே ! ... 10

குருவே துணை

காலம் :

இல்லை

குறிப்பு :

இதன், தலைப்புப் பகுதி அதிக்மாக் பூச்சியரித்துள்ளது.

வரிசை எண்: 2967 சுவடி எண்: 1535-h

# அன்பது திரட்டுவாகடம்

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 200 அளவு : 43×4 சென்டி மீட்டர் பக்கத்திற்கு : 8—9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம் நிலைமை: மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம்:

வாதந்தா னென்பதாமே யருகின்ற பக்கவாதம்
சீதமே நடுக்குவாதம் சிவந்திடு முடக்குவாத
சூதந்தான் சந்து வாதம் தோன்றிய முகத்து வாதம்
யேதமாம் வாதந் தீரப் பேசிடு மருந்து கேளே ! — 1

முடிவு:

உரைத்திடு முத்து வெள்ளி
யுயரருத் தாம்பூரஞ் சரக்குதா
டரைத்திடுந் துரிசு துத்தம்
............... யோடும் பொன்னூர்
திரைத்திடும் பீத ரோனி
சேர் பங்கு நிம்பச் சாறாரு
வரைத்திடுங் கன்னில்த்
தொண்ணூற் றாறுமே யழிந்து போமே ! — 49

காலம்:

இல்லை

குறிப்பு:

இது, எமது சுவடி எண் 755-1/D - 1508 அகத்திய மூர்த்தி ஐம்பது போன்றது பாடவேறுபாடுகள் காணப்படுகின்றன.

இதில், வாதத்துக்கு மருந்து, பித்தத்துக்கு மருந்து, சேஷ்மத்துக்கு மருந்து கிராமாலைக்கு மருந்து, சூலைக்கு மருந்து முதலானவை காணப்படுகின்றன. 50-வது செய்யுள் இல்லை.

இதன் இறுதியில் மருந்து விகை எழுதப்பட்டுள்ளது.

வரிசை எண் : 2968 சுவடி எண் : 1535-I

# தன்வந்திரி கருக்கிடை சூத்திரம் - 200

ஏடுகள்: 23 கி. எண்ணிக்கிகை: 1000 அளவு: 43 × 4 செ.மீ.
பக்கத்திற்கு: 8—9 வரிகள் ஆசிரியர்: தன்வந்திரி பொருள்: மருத்துவம்
நிலைமை: மிகப் பழுது முழுமை: முற்றற்றது. எழுத்து: தமிழ்.

தொடக்கம்:

............ காண்டு............ குருவறையான் —1
படிக்நிறமும் பவளச்செவ்வாயும் .......... கவி —2
வாவாவென்னாயகனே .........கருணைபுரிவா —3
ஆயக்லைகள் ......... ...... .......... இடர் —4
முந்தியாவரு ............... கை தொழுவாம் —6

நூல்

ஆதியந்த மல்லாம லகண்ட பரிபூரணமாய்ச்
சோதியந்தம் வான்மயிலே .........
வாதியெந்தன் பங்கிலுறை வார்.

முடிவு :

வார்சப்பா மேல்க்குகைதான் வலுவாய் மூடி
வலுவான ............ சீலைமண் செய்து
நார்சப்பா புடம்போட்டு எடுத்துப் பாரு
நலமான வெண்ணீறால் நவிலக் கேளே! —159

கேளப்பா நீ குகையை யுடைத்துப் பாரு
கெடியான பற்பத்தை ............

காலம் :

இல்லை

குறிப்பு :

தலைப்பு உள்ள பகுதி ஒடிந்துள்ளது. பாடல் தொடக்கம் கண்டு இதன் தலைப்பு கொடுக்கப்பட்டது.

இது எமது சுவடி எண் 563-b/D - 1171 தன்வந்திரி கருக்கிடை சூத்திரம் -200 போன்றது.

இதன் பின்னர் ஒரு உதிரி ஏடு உள்ளது.

வரிசை எண்: 2969 சுவடி எண்: 1536

# குணவாகடம்

ஏடுகள்: 83 கி. எண்ணிக்கை: 1800 அளவு: 31 × 2½ செ. மீ.

பக்கத்திற்கு: 5–6 வரிகள் ஆசிரியர்: அறியக்கூட வில்லை பொருள்: மருத்துவம் நிலைமை: மிகப் பழுது முழுமை: முற்றற்றது எழுத்து: தமிழ்

தொடக்கம் :

எல்லையில் லெழுந்த நாடி
எழுபத்தீ றாயிரத்தில்
வல்லவர் வகுத்த நாடி
பத்துதில் லேழு நீக்கி
சொல்லிய மூன்று நாடி
சுருபத்தின் வழியே தென்ன
நல்லவர் வகுத்துக் கூற
நயந்து நீ ரறிந்து சொல்லே! —1

முடிவு :

பித்தசுரம் தவிற மத்த சுரத்துக்கு யெல்லாம்
பசுவின் மோரில் எழச்சி குடிக்கவும்
தயிரும் சாதம் சாப்பிடவும்
வீக்கம் கண்டால் மிது பாவக்காய்
புளியில்லாமல் சமைத்து சாப்பிடவும்.

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, பிற குண வாகடம் போல் அல்லாமல், மருந்து முறைகளையே கூறுகின்றது. முதலில் மூன்று ஏடுகளும் நூலின் பின்னர் மூன்று ஏடுகளும் அட்டவணை உள்ளன. அதன் பின்னர் உள்ள ஏடுகள் வைத்தியத் திரட்டுபோல் காணப்படுகின்றன.

இதில், கோடா சூளி, ஆனந்த வயிரவன் மாத்திரை, தாளிசப் பத்திரிச் சூரணம், சுராங்கிஷ மாத்திரை முதலான மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2970 சுவடி எண் : 1537-a

# வைத்திய நூல்

ஏடுகள் : 47 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 39×3½ செ. மீ.
பக்கத்திற்கு: 7—8 வரிகள் ஆசிரியர்: அறியக்கூட வில்லை பொருள்: மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ப்பட்டை சாரணை சாரணை வேர்
பிரண்டை வேரில் .............. வேர்ப்பட்டை
கொடுவேலி வேறுப்டு அமுக்கிரா
மலக்கிழங்கு ............ லைக் கிழங்கு
.............................. நன்றாகக் கூறினேன். —702

முடிவு :

தீட்டியே நாளொன்று எரித்து வாங்கி
நினைவாகத் திருப்பியதைக் கல்வத்திட்டு
மூட்டியே தங்கமொன்று லிங்க மொன்று
முறையோடே பொன்னுமொரு களஞ்சி கூட்டே. —999

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், தொடக்கமும் இல்லை, முடிவும் இல்லை. அதனால் வைத்திய நூல் எனப் பெயர் தரப்பட்டது. ஏடுகள் 1, 2, 3 என்று தொடர்ந்து இருப்பினும், பாடல்கள் 702 முதல் 999 வரை உள்ளன. இதில், ...... ரடலேகியம், அளிட்ட சூரணம், அசுவ கெந்தாதிச் சூரணம், குக்கிட சூரணம், பரங்கிப்பட்டை பதங்கம், குளுமை எண்ணெய், தாளிச பத்திரி சூரணம் முதலான பல தலைப்புகள் உள்ளன.

இதன் பின்னர் ஒரு உதிரி ஏடு உளது.

வரிசை எண் : 2971 சுவடி எண் : 1537-b

# அகத்தியர் இந்திரசால நிகண்டு - 200

ஏடுகள் : 7 கி. எண்ணிக்கை : 700 அளவு : $37\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ.மீ.
பக்கத்திற்கு : 10—15 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக. குரு வாழ்க
குருவே துணை

உன்னிய பொதிகை வாழும் குருமுனி அருளைப் போற்றி
யின்னிலம் நிகண்டு பாட இந்திர ஜால நூலைப்
பன்னிய பாகை தோன்ற பண்டித வேத ன-வு
கன்னியும் உமையும் மீசன் கந்தனுங் காப்புத் தானே ! —1

முடிவு :

பச்சிலை மூலம் பாடினோங் கேளும்
அச்சுவை தச்சை அடிப்பது போலே
மச்சிலே வைத்தப் பொருள்போல் வாலை
சச்சி கொண்டு திறவுகோல் பூட்டே. —199

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, ஒரு அறிய சுவடி. ஒரு பக்கத்திற்கு 15 வரிகள் உள்ளன. இதில், தலைப்பு இல்லாததால், செய்யுள் தொடக்கம் கொண்டு தலைப்பு கண்டுபிடிக்கப் பட்டது.

இது, எமது சுவடி எண் 484 c/D - 434 போன்றது. 2-வது ஏட்டில் ஊமத்தங்காய் என்ற தலைப்பு காணப்படுகிறது.

வரிசை எண் : 2972 சுவடி எண் : 1537-ௐ

# சாலகாண்ட சூத்திரம் - பஞ்சபூத நிலை

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 500 அளவு : $37\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ.மீ.

பக்கத்திற்கு : 13—14 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம் :

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம்

பூரணமாய் மும்மூலக் கருவைப் போற்றி
புகழான ஜாலத்தை அஷ்ட கர்மம்
காரணமாய் மையிதிலதம் அடக்கஞ் சேர்வை
கருத்தான தியானமொடு தந்திரங்கள்

முடிவு :

யிய்ந்திடவே யென்னூல்போல் யிரனூறும்
ஆயிரத்தில் சுருக்கஞ் சொன்னேன்
ஆய்ந்தோய்ந்து அடக்கமாய் செய்ய வேணும்
அவனியுள்ளோர் அறியாமல் செய்ய வேணும்
சேர்ந்தொரு பொருள்முடிக்கும் போதி லப்பா
தேவியுட பூசை செவ்வாய் திரமாய் யிப்போ
மாந்திரீகம் பலவகையுஞ் செய்து கொண்டு
.......... .......... .......... .......... —64

காலம் :

இல்லை

குறிப்பு :

பக்கத்திற்கு 14 வரிகள் உள்ள இச்சுவடி அறியதே, தலைப்புக்கள் காணப்படவில்லை

இதன் பின்னர் பக்க எண் 4, 5 என்ற இரண்டு உதிரி ஏடுகள் மருத்துவம் எழுதப்பட்டு காணப்படுகின்றன.

வரிசை எண் : 2973 சுவடி எண் 1538-a

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 75 கி. எண்ணிக்கை : 7500 அளவு : 42×4 செ.மீ.

பக்கத்திற்கு : 5—14 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது. எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஓம் சரக லோகியம்

கைக் கனியைக் கொண்ட கயமுனைத் தாடொழுதே
யிக்காடி சாகயிலேகியத்தை - மைக்குயிலே
செய்வீரேல் நூறுபலஞ் செய்ய கயிடகமும்
பொய் ………… ட்டம்பு …… முதலாய்

முடிவு :

ஆகருஷணை

பார்த்து ஙங்கே யளைத்தாலும் ராசாக்கள் வருவார்கள் —6
சிறியாநங்கை உதைய காலத்தில் காப்புக் கட்டிச்
சறுவசிசா சாகருஷணி சறுவமோகினி
சறுவகருசணி சிவா என்று புடுங்கி …………

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், வில்வாதி லேகியம், அருத்திராதி லேகியம், மாதளங்காய் லேகியம் முதலான லேகியங்கள், கூஷ்பாண்ட கிறுதம், முதலான கிறுதங்கள், இந்திராணி தயிலம், குருந்து தயிலம், சந்தனாதித் தயிலம் முதலான தயில வகைகள், அசுவ கந்தாதிச் சூரணம் முதலான சூரணங்கள், வசியம் முதலியன காணப்படுகின்றன.

வரிசை எண் : 2974 சுவடி எண் : 1558-b

# வாகட அகராதி

ஏடுகள் : 40 கி.எண்ணிக்கை : 4500 அளவு : 42×4 செ.மீ

பக்கத்திற்கு : 10-17 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : அகராதி

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஊடைப்பத்தியிற் இரிவுக்கு வகை
முல்லை மருதம் விளுங்கல் அயம் பொதி
× × × × × ×

அகத்தி — திப்பி

அனந்த — முடக்கொற்றான்

அன்னத்தம் — அரத்தை

அகரதங் கட்டின தண்ணீர்

முடிவு :

கோலக்கிராத — நிலவேம்பு
கோடதி — சுக்கு
கொலோமி — வெள்ளருகு
கொண்டங் — குரிஞ்சா
கொட்டைமான் — உளுந்து
கொகுடன் — கோரை
கோவிதம் — செம்முள்ளி

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், ஏடுகள் தலைதடுமாற்றமாக உள்ளன. வரிசையாக இல்லை.

இதுவும் ஒரு அரிய சுவடி. மிக மிகச் சிறிய எழுத்துக்களால் ஒரு பத்திக்கு 17 வரிகள் எழுதப்பட்டுள்ளன. இதில் தொகை அகராதியும் காணப்படுகிறது.

வரிசை எண் : 2975 சுவடி எண் : 1539

# அகத்தியர் கலைக்கியானம் - 1200

ஏடுகள் : 160 கி. எண்ணிக்கை : 7000 அளவு : 35×3 செ.மீ

பக்கத்திற்கு : 7—8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

முடிவு :

காலம் :

இல்லை

குறிப்பு :

இது எமது சுவடி எண் 783/D.1586 தெட்சிணாமூர்த்தி கலைக்கியானம்-1200 போன்றது.

ஏடுகள் தலைதடுமாற்றம். தொடர்ச்சி இல்லை.

வரிசை எண் : 2976 சுவடி எண்: 1540

# வியாதி வரலாறு

ஏடுகள் : 70 கி.எண்ணிக்கை : 1500 அளவு : 28×4 செ.மீ.

பக்கத்திற்கு 5 – 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக
மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம்
× × × × × ×

வியாதி வரலாறு

ஆங்கார கோபத்தாலும் அடிவெயில் காயலாலும்
பாங்கியர் புணர்ச்சியாலும் பாய்ந்ததோர் விரணத்தாலும்
தாங்கொணாச் சுமைகளாலும் சருசிலை யூரலாலும்
தேங்கிய சலக்கட்டாலும் சுற்றமும் சுரமுமாமே !

முடிவு :

சிறுக்கீரைவேர் வேப்பீர்க்கு விஷ்ணுகாந்தி இது
$5\frac{1}{4}$ வராகனிடை கிசாயம் வைத்து இந்த பஸ்பம் 5 பணவிடை
சேர்த்து குடுக்கவும் கிராணிக்கி வென்னீரில் சுக்குகிசாயம்
மிளகு கிசாயம் யிதுகளில் 5-பணவிடை குடுக்கவும்
யெலுமிச்சங்காயில் சாதிக்காய் பிடம்வைத்துக் குடுக்கவும்

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், பலவிதமான வியாதி வரும் காரணங்களும், அப்படி வந்த நோய் களுக்குக் கொடுக்க வேண்டிய மருந்துகளும் தரப்பட்டுள்ளன.

இதில், பித்தக் கூறு, வாதக்குணம், நாடி நிதானம், பறங்கிப்பட்டை பதங்கம், மூலம் 14-க்கும் மருந்து, சயம் 16-க்கும் அவிழ்தம், சகலவிஷத்துக்கும், உச்சிப் பிளவைக்கு மருந்து சிறு பிள்ளை வாந்திக்கி, சிவக்கியானி பண்டிதர், சிவ தேவ சோழனுக்கு செய்த அவிழ்தம் முதலிய அறிய தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 2977 சுவடி எண் : 1541

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 150 கி. எண்ணிக்கை : 7000 அளவு : 27×4 செ.மீ.

பக்கத்திற்கு : 10—11 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : கிரந்தம்+தமிழ்

தொடக்கம் :

700 க்கும் அட்டவணை

66 - தாம்புர பஸ்பம்

70 - வெள்ளைப் பாஷாண பதங்கம்

100 முதல் 111 வரை செம்பு சத்தெ பார்க்க

துருசு செம்பு சத்து பாற்க

முடிவு :

ஷி களங்கத்தால் குப்பிச் செந்தூரம்

கருவங்க முள்ளது சேர்ந்த - 489

செ. 48 முதல் 73 வரை கடினம்

உத்தமம்

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், யோனி தோஷத்துக்கு, ஷரத்தவீ லட்சணம், நேத்திர வியாதிக்கு, விரண பீனிசம், நிவாரணம், திராவகம், சேங் கொட்டை திராவகம் முதலான பல தலைப்புகள் கிரந்தத்தில் உள்ளன.

வரிசை எண் : 2978 சுவடி எண் : 1542

# வாகட (வைத்திய) நிகண்டு

ஏடுகள் : 39 கி. எண்ணிக்கை : 800 அளவு : $26\frac{1}{2} \times 4$ செ.மீ.
பக்கத்திற்கு : 8—9 வரிகள் ஆசிரியர் : சட்டமுனி ? பொருள் : நிகண்டு
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க. குருவே துணை.
திருச்சிற்றம்பலம்

ஆதியந்த மில்லாத பூரணத்தை நோக்கி
அடுக்கின்ற யுன்மனைத்தாய் பதத்தைப் போற்றி
பாதியந்த மாகநின்ற யுமையாள் சொல்ல
பாங்கான சின்மயத்தின் கருணை யாலே
ஓதியந்த வாதமென்ற நூலுக் கெல்லாம்
யுசரவைத்த நாகமணிக் கிரீடம் போல
சாதியந்த குணத்தோடு நிகண்டு சொல்ல
சச்சுதா னந்தவெளி காப்புத் தானே ! —1

முடிவு :

தேடினேன் அண்டத்துச் சாத்திரங்க ளெல்லாம்
திறமாக என்னூல்போல் செப்பக் காணேன்
ஓடினேன் மைந்தா மலைகளெல்லாம்
உத்துப்பார் நூல்களெல்லா மொளிப்புத் தானே ! —34

வாகடம் நிகண்டு முற்றிற்று. முற்றும்.
சிவமயம்.

காலம் :

விஷு வருஷம் ஆனி மாதம் 17-ஆம் தேதி

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 608/D-1227 கைலாசச் சட்டைமுனி மூர்த்தி நிகண்டு, சுவடி எண் 820/D-1637 சட்டைமுனியார் நிகண்டு - 205 முதலானவை போன்றது. எழுத்துக்கள் அழகாக உள்ளன. தலைப்புக் கொடுத்து செய்யுட்கள் பாடப்பட்டுள்ளன.

இதன் பின்னர் 'சரநூல் அட்டவனை' என்று எழுதிய ஏடு உள்ளது தொடர்கள் புரியாத அளவில் ஒரு பாடல் போல் காணப்படுகிறது.

வரிசை எண் : 2979 சுவடி எண் : 1543-உ

# வைத்யத் திரட்டு

ஏடுகள் : 133 கி எண்ணிக்கை : 1800 அளவு : 26×3 செ.மீ.

பக்கத்திற்கு : 3—7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூட வில்லை பொருள் : மருத்துவம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது

எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

புருடு கரிய மருந்து
குஷ்ட்ட வியாதிக்கு மருந்து

முழுகி ……….. றண்மென்றறிய ……….
………. வள் ஆனென்றறிய ……….

முடிவு :

எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்து ……….
……….டுப்பு தீரும். யிது கைகண்டது.
யிச்சா பத்தியம்.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், எலிகடிக்கு, மூக்கில் ரெத்தம் விழுந்தால், தலைநோவுக்கு மருந்து, வயிறு கழிச்சலுக்கு, வயித்தில் செத்தபிள்ளை கீழே விழ முதலான பல அறிய தலைப்புகள் உன்ளன. தலைப்புப்பகுதி மிகவும் செல்லரித்துள்ளதால், பல தலைப்புகள் காண இயலவில்லை. முதல் 3 ஏடுகள் இல்லை.

வரிசை எண் : 2980 சுவடி எண்: 1543-b

# வைத்திய அகராதி

ஏடுகள் : 16 கி. எண்ணிக்கை : 250 அளவு : 26×3 செ மீ

பக்கத்திற்கு: 6-7 வரிகள் ஆசிரியர்: அறியக்கூடவில்லை பொருள்: அகராதி

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

அ......த — நாகமல்லி
அலைப்பாற்று — கையாந்தகிரை
அமுதவல்லி — சீந்தி
அச்சுவம் — அவ...
அரோகம் — மருது
அதளை — அத்தி
அல்லனம் — வில்லைப் பத்திரி

முடிவு :

அக்கினி
செம்பு
கெற்பம்
லிங்கம்
வாளம்
நாகம்

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 392-b/D. 809 வைத்திய மலை அகராதி போன்றது.

இதன் பின்னர், அட்டவணை எழுதிய ஏடுகள் 5 உள்ளன. மை பூசப்படாமல் உள்ளன. முன்சுவடியின் மருந்து அட்டவணையாகுமிது.

வரிசை எண் : 2981 சுவடி எண் : 1544-a

# மலையகராதி

ஏடுகள் : 47 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 27×4 செ.மீ

பக்கத்திற்கு : 8—9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : அகராதி

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி: ஓம்

மூலிகை சரக்கு விவரம்

அகம் — கெந்தி தகரம்

அகத்தி — உபால முலைப்பால்

அனாகம் — அகில் கட்டை

அதிக்கரம் — வெள்வேல்

அக்குவாங் — பலகாறம்

முடிவு :

வையகுண்ம் — தும்பை

வையகாந்தம் — கெந்தகம்

வைகோல் — நெல்லு

வைத்தேக்கு — திப்பிலி

வையம் — பூமி

வையளம் — தாமரை

ஆறுமுகந்துணை

தெட்சணாமூர்த்தி துணையாகவும்

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவ்டி எண் 392-b/D-809. வைத்திய மலை அகராதி போன்றது, முழுமையாக இருப்பினும் இடையிடையே ஏடுகள் இல்லை.

வரிசை எண் : 2982 சுவடி எண் : 1544-b

# மறைபொருள் நிகண்டு

ஏடுகள் : 8 கி.எண்ணிக்கை : 200 அளவு : 27 × 4 செ.மீ.

பக்கத்திற்கு : 8 - 9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : நிகண்டு

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம்:

மரைபொரு ளரிய நிகன்று

அட்டியும் ரெட்டியும் அதிமதிரமாகும்
மட்டி யென்பது நீலமுஞ் சிப்பி
நாக்கோல மென்பது ஏலக்காய்
கச்சை வாரக மகிளவிந்தம் மஞ்சளின் பெயர்

முடிவு :

சுதாமி - அராவி ஊத்தை - தாழை
நீர்கட்டி - கருப்புக்கட்டி காத்தோட்டி - ஆதண்டை
யிறுவேலி - வெட்டிவேர் பூச்சாறு - பட்டைவேர்
காங்கோவை - குறட்டை தேவர் - விடத்தேர்
அயி.........தி - சிவதை தலைப்பிறுளி - பெறுமருந்து

தெட்சணமூர்த்தி துணை

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, மருத்துவத்தில் செய்யுளில் கூறப்படும் மறைமுகச் சொற்களுக்கான பொருள் கூறுவது.

வரிசை எண் : 2983 சுவடி எண் : 1544-c

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 9(73-81) கி. எண்ணிக்கை : 200 அளவு : 27×4 செ.மீ.

பக்கத்திற்கு : 6—8 வரிகள் ஆசிரியர் : அறிவதற்கில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பெறும்பாட்டுக்கு மருந்து

ரொம்பநாள் சென்ற மாம்பட்டை யிடித்து
யௌநீரில் பிசைந்து வடிகட்டி 1/4 படிசார்
எலுமிச்சம் பழச்சார் விட்டு கலக்கி
குடுக்கவும்

முடிவு :

முளகு திப்பிலியில் கொள்ள
அண்ட வாதந் தீரும்
வசம்பு பொடியுடன் கொள்ள
புத்தியுண்டாம்
நிலையாவரையில் கொள்ள
நரைதிரை மாறும்
காறாட்டுக் கோமியத்தில் கொள்ள
நரைதிரை மாறும்.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதற்கு முன் 61 முதல் 72 வரை உள்ள ஏடுகள் இல்லை. இதில் வாயுவுக்கு, தீபனமில்லாத் துக்கு, உஷ்ண ெயுவுக்கு, மேகவறட்சி, குஷ்ட்டத்துக்கு, வெட்டைக்கு. பாபு சூரணம், தாளக பஸ்பம் சலை சுரத்துக்கு, ஊண் வளந்த புண்ணுக்கு மருந்து முதலான பல மருந்துகள் காணப்படுகின்றன.

இதன் பின்னர் வைத்தியம் எழுதிய ஏடு ஒன்று உளது.

வரிசை எண் : 2981 சுவடி எண் : 1545

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 64 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 24½ × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 7—8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் :
மருத்துவம் நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது
எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

அயத்தகடு பஸ்பம்

.......... .......... .......... .......... பாரே. —9
நுண்மையாம் அயத்தகடு நெல்கனமாய்த் தட்டி
நூதனமாய் சாணகல சாணீளந்தான்
வண்மையாம் வீழிவேர் பலந்தா னொண்டு
வளமெழுகு போலரைத்துப் பூசிப் போடு

முடிவு :

குறையாமல் வெடுயுப்புச்ச .......... வங்கம்
கூசாமல்ச் சீனமது காலங்கூட்டி
முடிவான வெண் கருவு .......... ..........
நெய்யு முலராமல்ச் சிறுதீயா லெரிந்துக் கொண்டால்
மரிவாக யுருகியல்லோ ..........

காலம் :

இல்லை

குறிப்பு :

தலைப்பு ஏடு இல்லை. 3-ஆம் ஏட்டில் தொடங்குகிறது. இடையிடையே ஏடுகள் இல்லை.

இதில், காந்த பஷ்பம்; கற்பூர சராயித்து, அப்பிரக சத்து செந்தூரம், தாளக நீரு, சூத கற்பம், அண்டசத்துச் செந்தூரம், யீளை யிருமலுக்கு லேகியம், அப்பிரகச் செந்தூரம், மூப்புச் சுண்ணம், சிப்பிச் சுண்ணம் முதலான மருத்துவங்கள் காணப் படுகின்றன.

வரிசை எண் : 2985

சுவடி எண் : 1546

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 115 கி. எண்ணிக்கை : 1300 அளவு : 16×3 செ. மீ.
பக்கத்திற்கு : 3—8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூட வில்லை பொருள் : மருத்துவம் நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது
எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

முத்துசங்கு யிலை சாத்தில் ரெண்டு நாள்
ஊறப்போட்டு சுத்தியாம். வென்னீரில் கழுவவும்

பகள சுத்தி

பகளம் பழச்சாத்தில் ஊறப்போட்டால்
சுத்தியாம் வென்னீரில் கழுவ சுத்தியாம்

முடிவு :

......... ந்திரன் கையில் சக்கரத்தை வாங்கி யிறதியெ .........
......... ப்பேன். குஞ்செ அளிப்பேன் முட்டையைத்
தகப்பேன் ......... பிணிமூப்பு காப்பு. எப்படிப்பட்ட
வியாதியும் போந்திர ......... ங்கிப்போக சுவாகா.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில் பச்சைக் கல் சுத்திமுறை, பால்துத்தம் சுத்தி, கெந்தக சுத்தி, வங்கி சுத்தி, சுரத்துக்கு சிந்தாமணி யோகாந்த சுரக் குளிகை, அற்ப வாதம் சிவங்க வாதம் சகலத்துக்கும், மாந்தத்துக்கு மருந்து முதலியன உள்ளன.

கடைசியில் ஒரு உதிரி ஏடு உள்ளது.

வரிசை எண் : 2986 சுவடி எண் : 1547-a

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 113 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 21×4½ செ.மீ. பக்கத்திற்கு : 10 – 11 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம் நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

துவறெண்ணை

ஆவாரம் பட்டை, ஆலம் பட்டை, அத்திப் பட்டை,
அரசம் பட்டை, இலந்தைப் பட்டை, ஒதியம் பட்டை,
நாவல் பட்டை, வரப்பூலாப் பட்டை, மருதம் பட்டை,
ஓர் நிறையா கிஷாயஞ் செய்து.

முடிவு :

அறுகம் புல்லு

அறுகம்புல்லு பலமன்பது, மாவுலிங்கயெலை பலம் பத்து,
பூவரசம் பட்டை பதுமூன்றும் வெவ்வேறு மூன்று தாளியிலிட்டு
சுட றென்னீர் வைத்து புல்லு வெண்ணீ.........ன்னெயிட்டு
யிரண்டா நாள் பூவரசு நீர் விட்டு மூன்று நாள் மாவு
லிங்.........ற் விட்டு குளிப்பாட்டி அன்று தொட்டு மூன்று
வாரமிப்படியே மூள்கி வர சகல நோய் தீரும்.

காலம் :

இல்லை

குறிப்பு :

மிக அகலமான ஏடுகளில் எழுதப்பட்டுள்ளது. இதன் பின்னர் இதன் அட்டவணை எழுதிய ஏடுகள் உள்ளன.

மருந்துகளின் அட்டவணை: அயிவேதி சூரணம் - 63, அயசெந்தூரம் - 92, கண்புனாகளுக்கு - 62, கோடா சூளி மாத்திரை - 30, தங்க பற்பம் - 44, தாளக செந்தூரம் - 46, மாதவிடாய் வலிக்கு - 58, வல்லாதி லேகியம்-79. மிருக ரேத்திர சஞ்சீவி - 105, பறவை நேத்தியத்துக்கு - 105 இப்படி அகரவரிசையில் உள்ளது.

வரிசை எண் : 2987 சுவடி எண் : 1547-b

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 19 கி. எண்ணிக்கை : 500 அளவு : 21×4 செ.மீ

பக்கத்திற்கு : 9—10 வரிகள் ஆசிரியர் : அறியக்கூட வில்லை பொருள் : மருத்துவம் நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது

எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

மேக வெண்ணை

| | |
|---|---|
| கோவைச் சாரு | சீந்தித்தண்டுச் சாறு |
| காணிச் சாரு | அரசம்பட்டைச் சாரு |
| வல்லாரைச் சாரு | அத்திப்பட்டைச் சாரு |
| செருப்படிச் சாரு | வகைச்சி படி $1\frac{1}{2}$ |
| ஆண்நெழிஞ்சிச் சாரு | முத்தெண்ணை $1\frac{1}{2}$ |

முடிவு :

நேத்திர நீரடி நிற்கும் இருதயந் திடங் கொடுக்கும்
அன்னத்தை செரிப்பிக்கும். கிருமி செத்துப் போகும்
இடுப்பு வலி தீரும். கல்லடைப்பு வாங்கும்.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், ஆறாத ரெணத்துக்கு, லிங்க செந்தூரம், வீற ரசம் குஷ்டத்துக்கு, வலி குன்மமேக வெட்டைக்கு, செவி நோவுக்கு, கிரந்தி புண்ணுக்கு, அயக்காந்த செந்தூரம், பேதிக்கு எண்ணெய், வங்க செந்தூரம், அன்னபேதி செந்தூரம் முதலான பல தலைப்புகளுக்கு மருந்துகள் உள்ளன.

வரிசை எண் : 2988 சுவடி எண் : 1548-a

# சமயாதீத விளக்கம்

ஏடுகள் : 15 கி. எண்ணிக்கை : 500 அளவு : 22×4 செ.மீ

பக்கத்திற்கு : 10—12 வரிகள் ஆசிரியர் : கோரக்கர் பொருள் : தத்துவம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

............... ............ தன்னைப் போற்றி
யுண்மையாய்ச் சதாசிவமே டுமையும் போற்றி
............ ......... னவன்றள் பாதம் போற்றி
\+ + + + + + +
அட்டமா சித்தியோடு மனந்தமாங் கோடி பேர்க்கு
மெட்டாத முடிவு கூறி ......... ............ கப்பால்
கோரக்க ரிசைந்து கூறு
.........ட்டாத பராபரத்தின் ...............

முடிவு :

கனமான மேருமுதல் ............ தேறிப் போனங்காளு
முமையாளு மவனுமாகி
பெருமையாய்ப் பேருலக மண்ட ............த வகையேது
ஆரணங்கள் முடிந்த பத்தப் பாலைக் கப்பால்
னாதிநிடப் பரிந்து......ப் பொனாசறாமே. — 80

முற்றும்
மீனாட்சி துணையாக வேண்டியது

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எம்து சுவ்டி எண், 823-e/D-1645 கோரக்கநாதர் சமயாதீத விளக்கம் போன்றது.

வரிசை எண்: 2989 சுவடி எண்: 1548-b

# அகத்தியர் யோக பட்சணி

ஏடுகள்: 9 கி. எண்ணிக்கை: 250 அளவு : 22×4 செ.மீ
பக்கத்திற்கு: 10—12 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : யோகம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை: முற்றுமுளது எழுத்து: தமிழ்

தொடக்கம் :

ஆதியிலே .............. ...—......
மறியச் சொன்னேன் ...............
சோதியிலே கருவூரை ...............
சொல்ல வொண்ணா ...............
நீதியிலே சதா.......... — ............

முடிவு :

மணியான நவமணியைத் தகடாய்த் தட்டி
வளமான தயிலமதை மேலோச்சி
பணியான அகலில்வைத்துப் புடத்தைப் போடு
பரமகுரு செந்தூர மாகும் பாரு
கனியான கனிபோலே செந்தூரம் வாங்கிக்
கமலமறச் சிமிள் தனிலே பதனம் பண்ணி
வனிகனமாய் மதிதனிலே தாக்கிப் பாரு
மக்களே ஆயிரத்தி னெட்டு மாற்றே ! — 50

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, மிக மிகப் பழுதடைந்துள்ளதால் செய்திகள் அறியக்கூடவில்லை.

வரிசை எண் : 2990 சுவடி எண் : 1548-c

# அகத்தியர் பரிபூரண சூத்திரம் - 215

ஏடுகள்: 37 கி. எண்ணிக்கிகை: 1300 அளவு: 22 × 4 செ.மீ.
பக்கத்திற்கு: 9—10 வரிகள் ஆசிரியர்: அகத்தியர் பொருள்: மருத்துவம்
நிலைமை: மிக மிகப் பழுது முழுமை: முற்றுமுளது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

கார்செரி மெய்யன் வெண்மைக்
கடவுளுங் காணாப் பாதம்
போர் பொரு ளுமை ...............

முடிவு :

தாமிந்த சூக்ஷத்தை கெணியார்க் கீய்ந்தால்
தலைதெரித்துப் போகுமடா சத்தியஞ் சொன்னேன்
நமிழ்ந்தப் படி சொன்னோம் யோகிக் கீய்வாய்
நலமான பூரணசூஷ்த் திரந்தாள் முற்றே ! — 215

கும்பமுனி பரிபூரண சூஷ்த்திரம்
எழுநி முகிந்தது முற்றும்
குருபாதம் துணை
ஆண்டவமார் பாதாரவிந்தந் துணை
சிவபாதம் மறவாதே மனமே !

கிரல்ம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 601-i/D-136 அகத்தியர் பூரண சூத்திரம் - 216 பான்றது.

வரிசை எண் : 2991 சுவடி எண் : 1548-d

# தெட்சணாமூர்த்தி கேசரி வித்தை 100

ஏடுகள் : 20 கி. எண்ணிக்கை : 500 அளவு : 22×4 செ.மீ.
பக்கத்திற்கு : 9—10 வரிகள் ஆசிரியர் : தெட்சணாமூர்த்தி பொருள் : மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

திருவரு ளௌரத்தை ............
............ ............ ...................
முதலா யெட்டு கேசரி வித்தையாமே !

முடிவு :

மநைத்திட்டு உரைத்தோமென் றெண்ண வேண்டா
மணிமந்திர .............. சொன்னோ மன்னஞ் சொன்னோம்.
துறைத்திட்ட துறைத்தப்பாய்ச் சொல்ல வில்லை
சொல்லறிவாய் கேசரத்தின் சூஷ்த்திர முற்றே —100

வாலம்பிகை துணை
அகஸ்த்தீசுபர நாயன் துணை

காலம் :

இல்லை

குறிப்பு :

இது எமது சுவடி எண் 426-b/D-886 அகத்தியர் கேசரி வித்தை போன்றது. மருத்துவ நூல்களில் தெட்சணாமூர்த்தியும் அகத்தியரும் ஒன்றாகப் பேசப்படும் மரபு உண்டு.

வரிசை எண் : 2992 சுவடி எண் : 1548-e

# அகத்தியர் வகார சூத்திரம் - 100

ஏடுகள் : 19 கி. எண்ணிக்கை : 500 அளவு : 22×4 செ. மீ.
பக்கத்திற்கு : 9—10 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

துரிசுச் சுன்னம்

ஆறாணமஞ் சுளினைநடுக் கமல மீதே
புகழ்பெரிய முக்குணப் பதியே காப்பு
காறணமா யெனையாண்ட பரனைப் போற்றி
கட்டாக வாதத்தில் லெட்சங் காப்பு

முடிவு :

சாதக்மாய் சாஸ்திர ......................
.........ங்கி நின்றால் மனம்வேறாய் மாறாது
சித்தி முத்.........................
...............சூஷ்த்திரம் நூறு முற்றே...........
...............மேகதி
பதினெண் சித்தர் நாயமார்கள்
பாதமே சரணஞ் சரணம்.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், தேவி பூசை, நாகச் செயநீர், உப்புக் கட்டுக் குளிகை வழலைச் சுன்னம், வங்க பற்பம், நாக பற்பம், செந்தூரம், நவலோக மாறணம், செந்தூரச் செயநீர், சாரக்கட்டு மூலிகை வகை முதலான பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண்: 2993 சுவடி எண்: 1548-f

# அகத்தியர் - 16

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 200 அளவு : 22×4 செண்டி மீட்டர்

பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை: மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

முடிவு :

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 432 o/D - 925 அக்த்தியனாரருளிச் செய்த (வகிரம்) பதினாறு போன்றது.

வரிசை எண் : 2994 சுவடி எண் : 1548-ஜ

# அகத்தீசர் சுருக்கம் - 8

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 100 அளவு : 22×4 செ.மீ.

பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

முடிவு :

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 347-ம/D - 688 அகத்தியர் சூத்திரம்-8 போன்றது. சுவடி எண் 248-ஜ 'அகத்திய எட்டு' என்பதின் வேறாயது.

வரிசை எண்: 2995

சுவடி எண்: 1548-h

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 200 அளவு : 22×4 செ. மீ.
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : அறியுமாறு இல்லை பொருள் : மருத்துவம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது
எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

அயம் உருக்க

செந்து அயம் உருக்க ஒரு வித்தை கேளு
திரமாக படல..............லுகினி போல்க்கட்டி
வார்ந்துரைத்த வாளையின் கிழங்கில் வைத்து
மறுகிழங்கு மண்போட்டு மூடி வைத்து

முடிவு :

யள்ளவே நாகமது கட்டிப் போகும்
துடியான கருவங்கக் ............ய்க்க...கு
மள்ளவே துரிசயது வெள்ளை யாகு
மாதியாம் பறுநீரும் பரிந்து பாரே !

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், அயம் உருக்கும் பகுதி ஒரு பாகமாகவும் லிங்க செந்தூரம் செய்முறை ஒரு பாகமாகவும் உள்ளன.

வரிசை எண் : 2996 சுவடி எண் : 1549

# திருமூர்த்தி வாகடநூல்

ஏடுகள் : 155 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 23×3½ செ மீ.
பக்கத்திற்கு : 7—8 வரிகள் ஆசிரியர் : திருமூர்த்தி பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

.............. தொல்புவி புல்லுமாறு
பொறுப்பவு மீள்பவு சொல்லு நோயுங்
குணமு மருந்து ............... ............
கெடிக்க வலத்தி ......... ரோதினான் — 1

முடிவு :

வைத்து தன்ஞ்சாறு கொண்டு அதைக்
குளம்பாய்க் குறுக்கி ஒன்றில் பதனம் செய்து
வைத்துக்கொண்டு திலத மிடப் போற காரியம்
செயம்.

வேறு

சுறாப் பொடியும் ஊமத்தம் பூவையும் ஒருபிடி
பறித்து வந்து யிடித்துத் தனஞ்சாறு ..........

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், 71 ஆம் ஏடுவரை ஏட்டெண் உள்ளது. பின்னர் ஏடுகள் பிறழ்ந்துள்ளன. 128-ஆம் ஏட்டில் ஹரி ஓம் நன்றாக் குருவாழ்க் குருவே துணை என்றெழுதியது காணப்படுகிறது. தொடர்ந்து, 'அஞ்சுமுகந்தோன்றி' ஆறுமுகந் தோன்றும் என்ற பாடல் காணப்படுகிறது.

வரிசை எண் : 2997 சுவடி எண் : 1550-a

# சீத்தா சக்கரம்

ஏடுகள் : 21 கி. எண்ணிக்கை : 400 அளவு : 16×3 செ.மீ

பக்கத்திற்கு : 6—8 வரிகள் ஆசிரியர் : அறிவதற்கில்லை பொருள் : சோதிடம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை
முந்தின எழுத்து மூன்றெழுத் தறிந்த முகண்ணனே
தொந்தி வயறும் பூணநூலும் தரித்த தொப்பைக் கணபதியே
× × × × × × ×

முடிவு :

| | | |
|---|---|---|
| 8 | 1 | 6 |
| 3 | 5 | 7 |
| 4 | 9 | 2 |

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவேதுணை
சீதா சக்கரம்
ஒன்றதைத் தொட்டு நின்று யுன்னிய கருமங்கேட்கில்
நன்றாதயப் பொருள் வந் தெய்தும்
நினைத்த காரியம் கைகூடும் நன்று
உத்தமம். சீத்தா சக்கரம் முற்றும்
அருணாசலந் துணையுண்டு
சஷ்ரபதி துணையுண்டாக வேணும்
குருசாமி துணை.

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, தொடுகுறி சாத்திரமாகும் ஒன்பது வரை உள்ள எழுத்துக்களில் ஏதேனும் ஒன்றைத் தொட்டால் அதன் பலன் கூறுவது பஞ்சாங்கங்களில் பேசப்படும். முதலில் உள்ள சக்கரத்தில் உள்ள எண்களை எப்படிக் கூட்டினாலும் 15-வரும்.

வரிசை எண் : 2998 சுவடி எண் : 1550-b

# ருது சாத்திரம்

ஏடுகள் : 36 கி. எண்ணிக்கை: 700 அளவு : 16×3 செ மீ·
பக்கத்திற்கு: 6—7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள்: சோதிடம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை: முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக
ருதுவு சாந்திப் பலன்

சித்திரை மரதம் ருதுவாகில் புருஷனுக்கு ஆகாது இதுக்குப் பிராச்சித்தம் புருஷனும் பெண்சாதியும் ஒரு புடவையாகக் கட்டிக்கொண்டு ஆயிரம் சில்லுவிட்டு ஒரு கலசம் தலைமேலே வைத்து அதுலே சலம் விட்டு அந்த சலத்துனாலே ஷ்தானம் பண்ணி.

முடிவு :

இதுக்கு நன்மையான பேர்க ஆகாத விதமானால் அந்தப் பிடவையை ஒருவருக்குத் தானம் பண்ணவும். அன்னதானங் குடுத்தால் சகல பாவமுந் தீர்ந்து போ மென்றவாறு. அன்னதானமே தனம் மென்றவாறு.

ருது பலன் முற்றும்

யீசுபரன் காந்திமதியம்மன் துணை.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், வாரப்பலன், திதி பலன், நட்சத்திர பலன், லெக்கின பலன், நவக்கிரக பலன், துணிக் குறி, சடங்கு செயிரது, சாமக் குறி, கோரிக்கை லட்சணம் பிடவை யறிய, சீலை, காணுதற் குறி ஆகியவை தலைப்புகளாக உள்ளன.

இது, எமது இலக்கியச் சுவடி எண் 703 f/D - 363-ன் வேறாயது.

வரிசை எண் : 2999 சுவடி எண் : 1550-c

# கௌரி பஞ்சாங்கம்

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 80 அளவு : 16×3 செ.மீ.
பக்கத்திற்கு : 8—9 வரிகள் ஆசிரியர் : அறிவதற்கில்லை பொருள் : சோதிடம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

நாயத்துக் கிழமை

| | |
|---|---|
| உத்தியோகம் | — $3\frac{3}{4}$ |
| லாபம் | $3\frac{1}{4}$ |
| விஷம் | $3\frac{3}{4}$ |
| அமுர்தம் | $3\frac{3}{4}$ |

முடிவு :

| | |
|---|---|
| அமுர்தம் | $3\frac{3}{4}$ |
| கலகம் | $3\frac{3}{4}$ |
| லாபம் | $3\frac{3}{4}$ |
| சோரம் | $3\frac{3}{4}$ |
| ரோகம் | $3\frac{3}{4}$ |

கௌரி பஞ்சாங்கம் முற்றும்.
மீனாட்சியம்மன் துணை.

காலம் :

இல்லை

குறிப்பு :

இன்னின்ன கிழமைகளில் $3\frac{3}{4}$ நாழிகை அதாவது $1\frac{1}{2}$ மணி நேரம் இன்னின்ன பலனைத் தரும் என்பது கூறுகிறது.

இது, எமது சுவடி எண் 224-a/D - 201 போன்றது.

வரிசை எண் : 8000 சுவடி எண் : 1550-ஈ

# சுரநூல்

ஏடுகள் : 8 கி. எண்ணிக்கை : 150 அளவு : 16×3 செ.மீ

பக்கத்திற்கு 7—8 வரிகள் ஆசிரியர் : அறிவதற்கில்லை பொருள்: சோதிடம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

ஆகுமப்பா சுரதோஷத் தாண்மை யெல்லாம்
அரைந்திட்டேன் முன்பேதா னடக்கம் விட்டு
ஓமப்பா நட்சேத்திர பலத்தைத் தொந்த
முத்தநாள் புலஷ்த்தியனே தச்சமுனி நீங்கள்

முடிவு :

பருக்காகுந் தாகமொடு சோகந் தானும்
பத்தியே பஞ்சடைந்து பார்வை குன்றி
இருக்காகு மென்றரைநாள் தன்னில் மாள்வர்
யியம்பிரேன் திரிநாடி தொந்தந் தானே! — 13

காலம் :

இல்லை

குறிப்பு :

இன்ன நட்சத்திரத்தில் சுரம் வந்தால் இன்ன பலன் என்று கூறுகிறது.

வரிசை எண் : 3001 சுவடி எண் : 1550-c

# கௌரி - தும்மல் (பலன்)

ஏடுகள் : 7 கி. எண்ணிக்கை : 80 அளவு: 16×3 செ.மீ

பக்கத்திற்கு : 6—7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள்: சோதிடம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

நாயறு

கிழக்கு — ஆகாது
கீழ்த்திசை — ஆகாது
அக்கினி — சாவு வார்த்தை
தீவுத்திசை — கிலேசம்
தெக்கு — சுகம்

முடிவு :

யீசானியம் — கேடு வார்த்தை
தீவில் — அசல் வீட்டுச் சண்டை வரும்
பூமியில் — சுப சோபன வார்த்தை வரும்
ஆகாசத்தில் — நினைத்த காரியாம் மத்திபம்

குருசாமி துணையுண்டு

காலம் :

இல்லை

குறிப்பு :

இன்ன திசையில் பல்லி சொன்னால் இன்ன பலன் என்று கூறுவது. தும்மலுக்கும் அதேபலன் கூறுகிறது.

வரிசை எண் : 3002 சுவடி எண் : 1550-f

# லக்கினத்து மேல் கௌளி சாத்திரம்

ஏடுகள் : 1 கி. எண்ணிக்கை : 20 அளவு : 16 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 7—9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

யேழு வாற மேழம் — பற்கூசல்
ரிழபம் — கலகம், குடிபோக்கும், நழுவார்
மிதுனம் — நோயுண்டாம், கழுவார்.

முடிவு :

இந்த ஏழு வாரத்துக்கும் நாளிகை வற
ஒண்ணுக்கு மின்னாலே போட்டு
யிருக்கிற நாளிகை மட்டு
லெக்கண சுத்து.

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, இன்ன லக்கினத்தில் பல்லி சொன்னால் இன்ன பலன் என்று கூறுகிறது. முழுமை போல் தெரிகிறது.

வரிசை எண் : 3003 சுவடி எண் : 1550-g

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 50 அளவு : 16×3 செ. மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

நாக்குப் பூச்சி எண்ணை
பண்ணும் விபரம்

விளக்கெண்ணை படி ½
முடக்கொத்தான் சாறு படி ½
விழுதியிலை சாறு பா ½
கேவையிலை சாறு படி ½

முடிவு :

கன்னி குடும்பை வலதளிக்கும் திண்டே
விடுக வேணுமென்றுச் சிறந்து பலத்தைத்
தின்னவிடும் வின்றே சொல்லும் மட்டு வெளம்
விடு காணா ன்ஞ் சொன்னே னே !

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், விக்கலுக்கு முதலான மருந்துகள் உள்ளன.

வரிசை எண் : 3004 சுவடி எண் : 1551

1

# தேவீ மகாத்மியம்

ஏடுகள் : 54 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 19×5½ செ. மீ.

பக்கத்திற்கு : 12—13 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மான்மியம் நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : கிரந்தம்.

தொடக்கம் :

முடிவு :

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, கூந்தற் பனை ஓலைச் சுவடி, தேவியின் புகழைப் புகழ்ந்து கூறும் 12 அத்தியாயங்கள் உள்ளன.

பயனற்ற நிலையில் ஏடுகள் உள்ளன.

வரிசை எண் : 3005 சுவடி எண் : 1552

# அகத்தியர் வைத்தியம்

ஏடுகள் : 150 கி. எண்ணிக்கை : 2500 அளவு : $14\frac{1}{2} \times 2$ செ. மீ.

பக்கத்திற்கு : 6—8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஓம் சாரிம ....................

கௌ உம் ....................

வற வறதா ....................

வசமாநய சுவாகா.

பண்டித நிறை

காணப்பா வயிந்தியர்கள் நிறையைக் கேளு
காத்தறிந்து பலநூலின் கருவுங் கொண்டு
பூணப்பா தத்துவமுஞ் சரநூல் கண்டு
போக்கோடே தூதனுட லெ ............

முடிவு :

ஒரு பாக்களவு லேகியமும் ஒரு மாத்திரையும் குடுக்கவும்
கறப்பு பிளிப்பு தவிறவும். வேறு (133-வது ஏடு)

× × × × ×

துணியாலே சுத்தி குகையாபிடி உ. புடம்போத
வுத்து அது கௌள·

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், பல அறிய தலைப்புகள் உள்ளன. சந்தனாதி, கைகால் எரிச் சத்துக்கு, கிரந்திக்கு, மூலத்துக்கு வில்வாதி, வயிறு இசுவு, பொறுமல், தலையிடி கண்ணோவுக்கு புகை முதலியன பல உள்ளன.

21-வது தொகுப்பு 101

வரிசை எண் : 3006 சுவடி எண் : 1553-a

# அகத்தியர் வைத்திய ரெத்தினச் சுருக்கம் - 360

ஏடுகள் : 95 கி. எண்ணிக்கை : 2500 அளவு : 22×3 செ.மீ

பக்கத்திற்கு : 8—9 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் மருத்துவம்

நிலைமை : பயனற்றது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

முடிவு :

காலம் :

இல்லை

குறிப்பு :

இது. பயனற்ற சுவடி. எமது சுவடி எண் 249/D-439 போன்றது.

வரிசை எண் : 3007 சுவடி எண் : 1553-b

# அகத்தியர் நீலகண்டம்

ஏடுகள் : 19 கி. எண்ணிக்கை : 500 அளவு : 22×3 செ.மீ
பக்கத்திற்கு : 6—8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

நாடியதோர் ......... பூரணமாய் நின்ற
நாதமுருகிணேச னொடு கந்தன் காப்பு

முடிவு :

பெரும்பாட்டுக்கு மருந்து குளிகை

வெள்ளைச் சராணை வேர் கொண்டுவந்து
சிறுக நறுக்கி விராகனிடை பெருங்காயம் சுக்கு
திப்பிலி இந்த நால்வகையும் நேக அரைத்து —.......
டை செய்து கிளச்சிக்காய் மரியாதி மூணு நாள்
குடுக்கவும். தீரும், கைகண்டது.
இதுக்கு காரசார மாகாது.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், நீலகண்ட செந்தூரம்,அரிதாரபற்பம் அரையாப்புக்கு, கெற்ப நோய்க்கு கர்ப்பமுறை முதலியன உள்ளன,

வரிசை எண் : 3008 சுவடி எண் : 1553-c

# (அகத்தியர்) வைத்தியம்

ஏடுகள் : 15 கி. எண்ணிக்கை : 300 அளவு : 22×3 செ.மீ
பக்கத்திற்கு : 6—7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக
மாக சஞ்சீவி எண்ணை

விளக்கெண்ணை படி ¼
மூணு வராகனிடை
வாழு நஞ்சு போக்கி

முடிவு :

(மிகப் பழுது)

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், வீரமெழுகு, குன்மமெட்டுக்கும் முதலான தலைப்புகள் உள்ளன. பிற்பகுதி ஒட்டிக் கொண்டிருக்கிறது.

வரிசை எண் : 3009 சுவடி எண் : 1554

# பிரம்மமுனி அருளிச்செய்த முன்னூற்றுச் சில்வானம்

ஏடுகள் : 105 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 24×4 செ. மீ
பக்கத்திற்கு : 6—8 வரிகள் ஆசிரியர் : பிரம்மமுனி பொருள் மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக

சீரரு ளான யாதி
சின்மய மான சோதி
யாரணி கொன்றை சூடி
யாரணிந் தானைப் போற்றி

முடிவு :

ஆமெலுற வசம்புள்ளி கடுக்காயம்
அப்பனே அரைத்தந்தக் கருமேல் பூசி
போமென்ற ரவிதனிலே உலரச் செய்து
பொடி செய்து பேய்ச்சுரையின் குடுக்கையிலே யடையே. — 366

அடைத்திடுநீ யில்லாட்டால் தயிலம் வாங்கி
அதுக்கிதுதான் நேத்தி மெத்த வழலையு மீத்...

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 314-a/D-572 பிரம்மமுனி கருக்கிடை சூத்திரம்-400 சுவடி எண் 634/D-1257 பிரம்மமுனி கருக்கிடை சூத்திரம் 384 போன்றது.

வரிசை எண் : 3010

சுவடி எண் 1555

# திருமூலர் வைத்தியம் - நாடி - 102

ஏடுகள் : 21 கி. எண்ணிக்கை : 700 அளவு : 20×3½ செ.மீ.

பக்கத்திற்கு : 6—8 வரிகள் ஆசிரியர் : திருமூலர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுள்ளது. எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

முதல்நாடி - வியாதக் குறிப்பு-உற்பத்தி

உன்னிய கெற்பக் குழியாம் வெளியிலே
பன்னிய நாதம் பகர்ந்த பிரிதிவியாம்
வன்னியும் வாயுவு மாயுறுந் சுக்கிலம்
மன்னிச் சமனாய் வளக்கு முதகமே. — 1

முடிவு :

தின்றிட நோயெல்லாம் திசைகெட்டு ஓடிப்போம்
பண்டிட வாய்வு பக்கத்திற் சேராது
கண்டிட லோகற்கு தானாகச் செய்முறை
மண்டிய சித்தரே மகாவியாதி போகுமே ! — 112

திருச்சிற்றம்பலம்

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 386-e/D-792 திருமூலர் கெர்ப்ப வாகடம், சுவடி எண் 745-j D-1475 திருமூலர் நாடிப்பரீட்சை - வாகடம் போன்றது. முன்னதில் 112 பாடல்களும், பின்னதில் 114 பாடல்களும் உள்ளன.

பாடவேறு பாடுக்ள் காணப்படினும் எழுத்தமைதி நன்றாக் உள்ளது. அந்தாதி யாகப் பாடப்பட்டுள்ளது.

வரிசை எண் : 3011 சுவடி எண் : 1556-a

# தனிப்பாடல் திரட்டு

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 10 அளவு : 42×2½ செ.மீ

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : இலக்கியம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி: ஓம்

கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை

+ + + + + +

கணாதி யென்றிடக் கவலையொன் றில்லையே !

அள்ளற் கடல்விடம் நீங்காத கண்டாருணை வெற்பிற்
பிள்ளைப் பிறையைச் சிலையை யொப்பாம் நுதற் பெய்வளையாம்
வள்ளைப் பெருகுழை கண்ணுக்குத் தோத்தம்பு வாருதி நீர்
கள்ளற் கயற்கொடி ராசியில் மீனுங் கடைபட்டதே.

முடிவு :

இளந் தத்தையே நல்லமுற்றத்தையே வுன்றிருக்கரத்தில்
வளர்ந் தத்தையேது மகிழ்ந்தனையோ மையலாகி நெஞ்சந்
தளந் தத்தையே நம் திருவரங்கேசர்க்குச் சாற்று கென்றால்
அளந் தத்தையே அளந்தாய் மற்றும் வேறொன்றறிந்திலனே !

காலம் :

இல்லை

குறிப்பு :

நல்ல பாடல்களாக இரண்டு பாடல்களே உள்ளன.

வரிசை எண் : 3012 சுவடி எண்: 1556-ா

# சட்டத்திர பாட்டு?

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 100 அளவு : 42 × 2½ செ.மீ

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : இலக்கியம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

தேன்பொழியும் வாயான் திருவேங்கடத் தானுடனே
யேன்பிறந்தான் கண்ணுக் கினியான் — தான்பிறவா
சீதேவி யாருடனே செய்யதிருப் பாற்கடலில்
மூதேவி யேன்பிறந்தாள் முன்.

முடிவு :

உத்திரத்துக் கீரானாள் ரோகணிக்குப் பத்தாநாள்
யெத்திசைக்கு நேரோ சிறந்தனாள் — யெத்திசைக்கு
காராறாம் பூஞ்சோலை கண்ணபுரம் வாழ்சவுரி
நாரா யணன்பிறந்த நாள்.

காலம் :

இல்லை

குறிப்பு :

சட்டத்திர பாட்டு என்பது விளங்கவில்லை. இதுவும் தனிப்பாடல்கள் போல் காணப்படுகின்றன.

வரிசை எண் : 3013 சுவடி எண் : 1556-c

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 15 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 42×2½ செ.மீ

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

................ வித்ததீயும் தனைக் கேளே. —149

கேளு திரிகடுகு பொடி னொச்சிச் சாத்தில் கிளரி
யிதில் செந்தூரங்கூட்டி யுண்ணக் காளகண்ட
வாத முதல் லெண்பத்து நாலு ...........

முடிவு :

நீரிழிவு மேகத்துக்குக் குளிகை

கொள்ளுமே தினமோ ராலரைத்து குண ...............
ளல்க் குழப்பி அமுதாயிதை நீர் கொள்வீராய்
கள்ளவிழி யார் தமையும் விட்டுக் கசப்புப் பிளிப்புத்
தான்றுறந்து மெள்ள யிருபது நாள்...............

காலம் :

இல்லை

குறிப்பு :

தொடக்கம் இல்லை. 28-ஆம் ஏடுமுதல் தொடங்குகிறது. இதில், பீனிசத்துக்கு நசியம், ரெத்த சன்னிக்கி நசியம், கோடாசூளி மாத்திரை, மேகத்துக்கு கிருவித எண்ணெய், கரப்பான், மாந்தம் முதலான தலைப்புகள் உள்ளன.

பாடல் எண்கள் 152 முதல் 240 வரை காணப்படுகின்றன. கடைசி ஏட்டின் முன் பகுதியில் ''ஸ்ரீ சிவகாம சௌந்தர்யை நம'' என்று கிரந்தத்தில் எழுதப் பட்டுளது.

வரிசை எண்: 3014 சுவடி எண்: 1557-a

# அகத்தியர் - 16

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை: 100 அளவு: 27 × 3 செ.மீ

பக்கத்திற்கு 5—6 வரிகள் : ஆசிரியர்: அகத்தியர் பொருள்: மருத்துவம்

நிலைமை: பழுது முழுமை: முற்றற்றது எழுத்து: தமிழ்

தொடக்கம்:

முடிவு :

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 414-c/D-852 போன்றது 9 செய்யுட்களே உள்ளன.

ஏடுகள் பயனற்ற நிலையில் உள்ளன.

வரிசை எண் : 3015 சுவடி எண் : 1557-b

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 5 கி.எண்ணிக்கை : 100 அளவு : 27×3 செ.மீ

பக்கத்திற்கு 4 - 5 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

குரு பதங்க பஸ்ப்பம்

ரசம் அரிதாரம்
வீரம் பூநீர்
துருசு காடி
பூரீம் காரம்
லிங்கம்

முடிவு :

சோகை பாண்டு விழ பாண்டு சூதகத்தால்
ஏற்படும் வீக்கம் காமாலை, நீர் கஷசை
மகோதரம் முதலிய சகல வியாதிகளும் நீங்கும்.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், பாண்டு சோகை வீக்கத்திற்கு, தேங்காய் லேகியம் ஆகியவை உள்ளன.

வரிசை எண் : 3016 சுவடி எண் : 1557-c

# நவலோக மாரணச் சுருக்கம் - அகத்தியர் - 16

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 100 அளவு : 27 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை: முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

முடிவு :

காலம்

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 414 c/D - 852 போன்றது. முழுமைப் போல் காணப்படினும், குறைபாடுடையது.

வரிசை எண் : 3017 சுவடி எண் : 1557-d

## அகத்தியர் - 205

ஏடுகள் : 72 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 27×3 செ.மீ.
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

வாதத்தில் சீதரோகம் தேறாத அய்த்தித்தால்
கபமாம் ரோகம்
திரண்டெழுந்த வாயுவினால் மூன்று மாச்சு
கூறாத திரள்வாயுவு தொந்தங் கொண்டு
கொடிய கனல்ச் சீதமுடன் விந்து வாச்சு

முடிவு :

நோய்மிகுந்து சாவில்லை ஒருநாளுந்தான்
நுண்மையாய்ச் சரக்குகளை நீத்திக் கொண்டு
உபாயமுடன் எண்ணை யொடு கிறுதஞ் செய்து
வைத்திடுவாய் அனுபானம் வயித்திய முத்தே ! —205
ஹரி ஓம் நன்றாக

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எம்து சுவடி எண் 768 c/D - 1553 போன்றது. முதல் ஏடு இல்லை. இறுதியில் பாடல் கொண்டு தலைப்பு கண்டுபிடிக்கப்பட்டது. பாட வேறுபாடுகள் பிழைகள் மிகுதி. இடையிடையே ஏடுகள் இல்லை.

இதன் பின்னர் மருத்துவம் எழுதிய ஏடு ஒன்று உள்து.

வரிசை எண்: 3018 சுவடி எண்: 1557-e

# ஊழி வைத்தியம்

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை: 100 அளவு: 27 × 3 செ.மீ
பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர்: அறியக்கூடவில்லை பொருள்: மருத்துவம்
நிலைமை: மிக்ப் பழுது முழுமை: முற்றற்றது எழுத்து: தமிழ்

தொடக்கம் :

சாமனா தேவி

கேளப்பா ஊழியென்ற காத்துச் சொல்வேன்
கெடியான சாமளா தேவியாலே
நாளப்பா மைப்போலே கறுத்து நிற்குங்
கண்ணுக்குத் தோற்றாது கடினமெத்த

முடிவு :

செத்தினிலே வந்தொரு ஊழியுந்தான்
சொல்லுமுன்னே போகுமடா துன்பம் நீங்கும்
வியாதியுடன் மூதண்டங் கொண்டு வந்தால்
யெங்கெனே ஊதியது...............

கூர்லம் :

இல்லை

குறிப்பு :

இது எமது சுவடி எண் 465-a/D-1030 ஊழி வைத்தியம், போன்றது. ஊழிக்காற்று பற்றியும் பேசப்படுகிறது. இதில் பாட வேறுபாடுகள் காணப்படு கின்றன. தலைப்பு இல்லை. செய்யுள் அமைதிகொண்டு தலைப்பு காணப்பட்டது.

வரிசை எண் : 3019 சுவடி எண் : 1558

# வழலை வாகடம் ?

ஏடுகள் : 57 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 28×2½ செ.மீ

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

............லும் யிதினாலே சித்தியில்லை என்றாயானால்
ஆறுநின்ற ............ ............... — ........ யஸ்
சாஸ்த்திரங்கள் யொய்யாயிப் போச்சு
வாறுகின்ற ............ ............ ........ ......

முடிவு :

............ம பூரணத்தி னொனாடு
வழலையென்ற நாதவிந்தால் மாட்டிக் கொன்று
மதிய......... ... ......... ஈலை யாட்டி
வழலையென்ற முப்பூவே பஞ்ச கர்த்தாள் ............
வழலையென்று மத்தைக் கண்டோம் கண்டோம்
வளமான ...............ன மார்க்க மெல்லாம்
வழலை என்ற அன்றமிது தேவிபூசை மாதவின தயி........

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, தொடக்கம் முடிவு இல்லாதது. 94-ஆம் ஏட்டில் தொடங்கி 153-ஆம் ஏட்டில் முடிகிறது. இடையிடையே ஏடுகள் இல்லை. கடைசிபாடல் கொண்டு தலைப் பிடப்பட்டுள்ளது. முன்னுள்ள ஏடுகள் இரண்டும், கடைசி ஏடும் பாதியாக உள்ளன.

வரிசை எண் : 3020 சுவடி எண் : 1559-a

# தொண்டை மண்டலத்து வேளாளர்

# உற்பவம்—மறைபாலர் சூடாமணி

ஏடுகள் : 17 கி. எண்ணிக்கை : 600 அளவு : 18×6 செ.மீ.

பக்கத்திற்கு : 13,14 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள்: வரலாறு நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்

தொடக்கம் :

இந்த சக்கரம் ஓலையில் எழுதி வாயில் போட்டுப்பேச வழக்கு வெல்லும். சக்கரம் இருக்கிறது) இன்னும் 5 சக்கரங்கள் உள்ளன.

ஹரிஓம் நன்றாக

வேகமா நெறிசேரும்...... ... போற்றுவாம்
தொண்டாயுதபாணி துணை

நூல்

புள்ளேறு மாதவனை புகழ்ந்து பணிந்தேற்றி
வெள்ளோனையும் விரும்பியடிதொழுது—கள்ளாறு
மலர்பொழில் சூழ் கையினில் வந்துதித்த
வெள்ளாளர் தம் பெருமை யெடுத்துரைப்பாம்.

முடிவு :

ஆவென்றார் மேலும் அதனைச் செம் மொழிசஞ்செய்
ஆவென்றே வந்து முன்னின்றாடு சித்தி முத்நே —32.

பாடசூத்திரமுற்றும்

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, கூந்தற்பனை ஓலைச்சுவடி. இதில் ஒன்று ஒன்று என்று இரண்டு ஏடுகளிலும் 2,2 என்று இரண்டு ஏடுகளிலும் இப்படியே எல்லா ஏடுகளிலும் எண்கள் உள்ளதால் சற்று குழப்பமாக உள்ளது 1—என்ற ஏட்டில் மேல் தலைப்பும், அடுத்த 1-என்ற ஏட்டில் 'அகத்தியர் மூலிகை வண்ணம்' என்றும் எழுதப்பட்டுள்ளதால் நூல்கள் ஒன்று விட்டு ஒரு ஏட்டில் தொடர்கிறதோ என அறியப்பட உள்ளது.

வரிசை எண் : 3021 சுவடி எண் : 1559-b

## அகத்தியர் மூலிகை வண்ணம்

ஏடுகள் : 17 கி. எண்ணிக்கை : 600 அளவு : 18×6 செ. மீ.

பக்கத்திற்கு : 13 – 14 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுள்ளது எழுத்து : தமிழ்.

குறிப்பு

இது, கூந்தற்பனை ஓலைச்சுவடி. ஒரே, எண் இரண்டிரண்டு ஏடுகளில் எழுதப்பட்டுள்ளன. அதனால் முன்னுள்ள தொண்டைமண்டல வேளாளர் வரலாறு ஒன்று விட்டு ஒரு ஏடு வருகிறதோ என அறியக்கிடக்கிறது

இது, எமது சுவடிஎண் 642/D.1265 போன்றது

வரிசை எண் : 3022 சுவடி எண் : 1559-

## சித்தராரூட நொண்டி

ஏடுகள் : 29 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 18×6 செ. மீ.

பக்கத்திற்கு : 13-14 வரிகள் ஆசிரியர் : சித்தர்கள் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, கூந்தற்பனை ஓலைச்சுவடி. ஒரே எண் இரண்டிரண்டு ஏடுகளில் சுவடி முழுதும் இடப்பட்டுள்ளது.

இது, எமது சுவடி எண் 301-b/D. 533 போன்றது. இதனைச் சர்ப்பாரூடமெனவும் கூறுவர். பாம்புகளின் பிறப்பு முதலானவற்றைக் கூறுவது

வரிசை எண் : 3023 சுவடி எண் : 1559-d

## தேவியாரூடம்

ஏடுகள் : 19 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 18×6 செ மீ.

பக்கத்திற்கு : 13-15 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, கூந்தற்பனை ஓலைச்சுவடி

இது, எமது சுவடி எண் 613/D-1234 சத்தியாரூடம் போன்றது. இங்கு 'தேவியாரூடம்' எனப் பெயர் பெற்றுளது.

வரிசை எண்: 3024 சுவடி எண்: 1559-e

## (அகத்தியர்)— 205

ஏடுகள்: 18 கி. எண்ணிக்கை: 1000 அளவு : 18×6 செ.மீ

பக்கத்திற்கு: 11—15 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை: முற்றற்றது எழுத்து: தமிழ்

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 768-e/D-1553 போன்றது இதன் தலைப்பில் 'ஹரி ஓம். பற்பமுறை, தயிலம் — 205 என்றுளது. பாடல்கள் தொடக்கமும், முடிவும் அகத்தியர் 205-க்குச் சரியாக உள்ளதால் இது அகத்தியர் 205 என்று தலைப்பிடப் பட்டது. ஏடுகள் தலைதடுமாற்றம்.

வரிசை எண் : 3025 சுவடி எண் 1559-f

# அகத்தியர் சூத்திரம்- 5

ஏடுகள் : 15 கி. எண்ணிக்கை : 80 அளவு : 18×2 செ.மீ

பக்கத்திற்கு : 15 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : யோகம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சொல்லக்கேள் சமாதியிலே யிருப்பே னென்று
துடியாக மண்டலந்தான் குகைக்குள் ளாக
வெல்லுதற்கு நாயுருவி விரையை வாங்கி
விழுதுபட வேயரைத்துப் பாலில் கொள்வாய்

முடிவு :

மாரப்பா யோகத்தில் செய்ய வேணும்
மனத்திடங் கொண்டு மலைமீதி லேற வேணும்
காரப்பா குகையிலே யிருக்க வேணும்
கற்பத்தால் சமாதியிலே யிருக்க லாமே ! — 5
அகத்தியர் சூத்திரம் முற்றும்.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், ஏடுகள் தலை தடுமாற்றம். இது யோகம் செய்யும் வழியினைத் கூறுகிறது.

வரிசை எண் : 3026 சுவடி எண் : 1559-g

# கௌளி சாத்திரம்

ஏடுகள் : 12 கி. எண்ணிக்கை : 500 அளவு : 18×6 செ.மீ

பக்கத்திற்கு : 11—15 வரிகள் ஆசிரியர் : பாற்கரணவீரக்கவிராயர்

பொருள் : சோதிடம் நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது

எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை
வல்லியுமை கேட்க்க மகிந்தரனார் தாமுரைக்க
கொல்லில கில்தொகுத்துரைக்கப் — பல்லிநூல்
பாரில்பல ருவப்பப் பாடினான் பாற்கண
வீரகவி ராசவேந்து.

முடிவு :

ஓதக் கரிய நிலப்பல்லி
உரைத்த உரையே கொள்ளார்கள்
சீதக் கெவுள் சேறு மாத்திரச்
சிறந்தமனையில் மனைச் சுவற்றில்
போதக் கொன்வீர் பெரியோர்கள்
பொருந்தக் கெபள்வீர் புலவீரே ! — 52

கணபதி சகாயம்
கெவுளிக் காதல் முற்றும்
சிவமயம்

கீர்லம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 102 - a / D - 136-ன் வேறாயது. இடை யிடையே ஏடுகள் இல்லை இதில். பல்லி வகைகள் முதலியன கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3027 சுவடி எண் : 1560-a

# ஆயுர்வேத அர்த்த சங்கிரகப் பிரபந்தம்

ஏடுகள் : 7 கி. எண்ணிக்கை : 500 அளவு : $26 \times 3\frac{1}{2}$ செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : சற்றே பழுது முழுமை: முற்றுமுளது எழுத்து : தெலுங்கு

காலம்

காளயுத்தி வருஷம் தை மாதம் 9-ஆம் தேதி வியாழக்கிழமை அப்பு சாய புக்கு வரதய்யா எழுதிக் கொடுத்தது,

குறிப்பு :

இது, தெலுங்கு எழுத்துக்களில் உள்ளது.

வரிசை எண் : 3028 சுவடி எண் : 1560-b

# அகத்தியர் நாடி

ஏடுகள் : 7 கி. எண்ணிக்கை : 300 அளவு : 26×3½ செ மீ.
பக்கத்திற்கு : 7-8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

கரிமுக நடியை வாழ்த்திக் கையிதனில் னாடி பார்க்கில்
பெருவிர லங்குலத்தில் பிடித்துடன் நடுவே தொட்டால்
ஒருவிரல் லோடிவாதம் மத்திருவிரளோடிப் பித்தம்
தெரிவிரல் மூன்றுமோடில் சிலேடுட்டும நாடி யாமே!—!

முடிவு :

மாற்புடன் மூக்கு தொடர்புள் வணங்கையிகால்
செவி குளுந்தே
காற்செறி குழலாள் யுச்சி கனலென
வெதும்பிக் காய்ந்தே
நேர்பட நடக்கும் நாடி
நிகண்டுநின் றியங்குமாகில்
பாரினில் மரணமஞ்சு நாழிகை
யறிந்து காணே/
குருவே துணை

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, முடிந்த்துபோல் காணப்படினும் குறைபாடுடையதே. இன்னும் செய்யுட்கள் உள்ளன. இது, கையில் நாடிபார்த்து பித்தம், வாதம், சிலேட்டுமம் ஆகிய வகையறிந்து பலன் கூறுவது.

வரிசை எண் : 3029 சுவடி எண் : 1560 c

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 200 கி. எண்ணிக்கை : 7000 அளவு : $26 \times 3\frac{1}{2}$ செ.மீ.

பக்கத்திற்கு : 7-8 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

| | |
|---|---|
| அண்ணாக்கு | —3 |
| கள்ளரோகம் | —5 |
| தொண்டையடைப்பன் | —5 |
| யோனியடைப்பன் | —10 |
| கல்லடைப்பன் | —6 |
| துடிப்புவகை | —5 |

முடிவு :

———— லைச்சார் விட்டு காலமெரி
மாதலக் கொண்டு சாயந்திரங் வரைக்கும்
அரை ———— இப்படி மூணு நாளிரை ———
அரைத்து பாதி ——— ருபாதியளவு மாத
...... ..... ...... ..... ...........

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், எண்ணெய் வகைகள், லேகிய வகைகள் முதலானபல மருந்துகள் காணப் படுகின்றன. தொடர்ச்சி இல்லை. சில ஏடுகள் மை பூசப்பட்டும், பல ஏடுகள் மை பூசப்படாமலும் உள்ளன.

வரிசை எண் : 3030 சுவடி எண் : 1561

# அகத்தியர் - 208

ஏடுகள் : 45 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 35×3 செ.மீ
பக்கத்திற்கு : 5—7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவேதுணை

ஆவாரம் பட்டைவேர்
ஓரிலைத் தாமரை வேர்
× × × × × × ×
............க்கால வாவமாமோ நானே-வே
ஒன்றுமில்லை வேதுமில்லை அறுபத்து நாலுஞ் சொல்வ
ரரவாரெனவே என்பூத மோடிப் போகும்,

முடிவு :

............ திறந்கி விட்டான்
வளமான ராமனவன் மறைத்து வைத்தான்
காரெ............ம கனகமதாய்ப் பொழிந்து
விட்டார் நூல்க்ள் தோறும் — 200
நூலான்நூல் .........ாயனுனுக் கிவைதா
நூல்கள் தொறும்
வரலான அக்த்தியள்றன் நூலைப்பா.........
கடைக்காண்டம் பாடு
சாலான சகமிஃ காகரத்தில் கடாட்ச
சாமப் பெருளெல்லாம் .........
............னுடைய நாலாங் காண்டம்
நலமாக சகல முந்தான் யான்சொன்னேனே.........

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில் தொடக்க ஏடுகள் இல்லை. இதில் கிரந்திக்கு மாத்திரை கலிக்க் மாத்திரை சன்னி மாத்திரை, மேகராசாங்கத் தெண்ணை, நடுக்கு வாதம், முடக்கு வாதம், சயத்துக்குத் தயிலம் முதலான பலதலைப்புகள் உள்ளன.

வரிசை எண்: 3031 சுவடி எண்: 1562

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 64 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 19×3 செ மீ

பக்கத்திற்கு : 4 — 7 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள்: மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

நாரிபாகன் சாத்து அரைத்து
பொடி பண்ணி சிமிளில் அடைத்து
வைத்துக் கொண்டு முன் சரக்குகளால்
ஐந்து பணவெடை போட்டு

முடிவு :

கண்ணு வெள்ளெளுத்துக்கு

வெத்திலைச் சாறு யிந்துப்பு கூட்டி மத்திச்சு
பல்லு ஊத்தையும் காது குரும்பையும்
மத்திச்சு கண்ணில் யிட வெள்ளெழுத்து போகும்.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில் பலவித மருந்துகள் கூறப்பட்டுள்ளன. நடுவில் கெந்தக் ரசாயனம் உள்ளே நிலையில் உள்ளது. நம் சுவடி எண் 214-c/D-340-ன் வேறாயது. வாக்கியங்கள் பிழையாக உள்ளன. சொற்கள் பிழைபட உள்ளன.

வரிசை எண் : 3032 சுவடி எண் : 1563-a

# அகத்தியர் நாடி நிதானம்

ஏடுகள் : 33 கி. எண்ணிக்கை: 500 அளவு : 16×3 செ மீ·

பக்கத்திற்கு: 6—7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள்: மருத்துவம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை: முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹ்ரி ஓம் நன்றாக

எல்லையி லெழுந்த நாடி

எழுபத்தீ ராயிரத்துட்

பல்லியல் பயின்ற நாடி

பத்தினி லேழுநீக்கி

சொல்லிய வாத பித்தந்

தொகுத்த சேற்றும மீம் மூன்று

முடிவு :

பசியினூடு பருகுஞ்சை யோகந்தானே—37.

சையோகஞ் செய்யும் போது தனிநினித்த

சுளியே ———— வமுர்தந்த

காலம் :

இல்லை

குறிப்பு :

இச்சுவடியில் பிற ஏடுகள் கலந்தும், ஏடுகள் பிறழ்ந்தும் உள்ளன. சரியாக் கூற இயலவில்லை

வரிசை எண் : 3033 சுவடி எண் : 1563-b

# அகத்தியர் வாகட சூத்திரம்

ஏடுகள் : 13 கி. எண்ணிக்கை : 50 அளவு : 16×3 செ.மீ
பக்கத்திற்கு : 5—6 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரிஓம் நன்றாக குருவாழ்க குருவேதுணை

சீரிலங்கு தென்பொதிகை
× × × × ×
காரிலங்கு மேனிக் கணபதியுங் காப்பாமே —1

நூல்

பாகுடன் கிணேசன் பாதம்
பரிந்து முக்குணங்க ளாக
வாகடச் சுவடியெல்லாம்
வகைவகை தொகுத்துப் பார்த்து

முடிவு :

காண்பிணிதீரம் ..............
தயிலம் நாந்துளாக வைகுண்ட ..........

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவ்டி எண் 786-a/D-1589 போன்ற தெனினும் முழுமையில்லை.

வரிசை எண் : 3034 சுவடி எண் : 1563-c

# அகத்தியர் வைத்தியப் பள்ளு

ஏடுகள் : 9 கி. எண்ணிக்கை : 200 அளவு : 16×3 செ.மீ
பக்கத்திற்கு : 6—7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்கக ருவேதுணை

தென்பொதிகை ——— வளிபவ ரிறையவர்
சீர்மணக் கோலந் தெய்வ ——— பவர்
சிறந்த காவேரியருள் ———
பார்பெரியவர் திருவடிதொழுதே

முடிவு :

தானென்ற சீதருட்சை
சார்ந்திடுந் தப்பில்லாத! —19
தப்பில்லாத் தோசந்தானுஞ்
சாமந்திடும் வாறு

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, வைத்தியக்கும்மி போல, பள்ளு இலக்கிய பாணியில் வைத்தியத்தைப் பாடிப் பதியவைப்பது

முழுது மின்மையாலும், ஏடுகள் சல்லடைக்கண்ணாக இருப்பதாலும் விபரங்கள் அறிய இயலவில்லை.

வரிசை எண் : 3035 சுவடி எண் : 1568-உ

# நஸ்யவிதி (மூக்குப் பொடிவிதி)

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 60 அளவு : 38 × 3½ செ.மீ
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : கிரந்தம்

தொடக்கம் :

நஸ்ய காலஸ், நஸ்ய லட்சணம

விசேஷதோ துர்பலமானவோபி

முடிவு :

கண்டூஷ மிஷ்டம் கபளக் கிரமம்வா
கதந்தி வக்த்ராத் தொதோஷ சாந்தே
சண்டுஷ வர்ஜ்யா

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், மூக்குப்பொடி போடுகின்ற விதிமுறைகள் கூறப்பட்டுள்ளன. கிரந்தி எழுத்தில் வடமொழியில் எழுதப்பட்டுள்ளது.

வரிசை எண் : 3036 சுவடி எண் : 1564-b

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 46 கி. எண்ணிக்கிகை : 2000 அளவு : 38 × 3செ.மீ.
பக்கத்திற்கு : 7—8 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

வாதத்தில் பித்தமாகில்
வாயது குளறிப் பேசும்
பேதித்துக் குளிருங் காலில்
வீக்கமும் ..................

முடிவு :

உணரும் வண்ண மனுபவத்தில் வந்திருமோ
ருண்மை வாசக் முணர்த்துகே
மாதினாலற மனைத்தினும் பசுவினைப் படுந்
தனல் வளர்த்திடுமே யாகமெல ..........

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், ஏடுகள் தடுமாற்றம், தொடக்க ஏடுகள் இல்லை. வேறு இலக்கியச் சுவடி கலந்திருக்கலாமென்று கருதப்படுகிறது இதில், பல அரிய மருந்துகளின் தலைப்புகள் உள்ளன.

வரிசை எண்: 3037 சுவடி எண் : 1564-c

# வைத்திய சங்கிரகம்

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 200 அளவு : 38 × 3 செ.மீ

பக்கத்திற்கு 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : கிரந்தம்

தொடக்கம் :

விஷார்த்திகம் திமிரே சானிலாத் மானாரோகீ
தந்ததாவன விதி. தந்ததாவன காஷ்ட்டானி

முடிவு :

யேதே பவேத் சப்த விதா : ப்ரசஸ்தா : காஷ்ட்டம்
விசுஷ்க சஷிதம் சபூதித :
வித்வேலம், ததே விசோத

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், தூமபானம் (புகை பிடித்தல்), செய்கிறவர்களுக்கு, தூமபான குணம், அஞ்சன விதி, பல்தேய்க்கும் குச்சி வகை முதலியன கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3038 சுவடி எண் 1565

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 51 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 17×3 செ.மீ
பக்கத்திற்கு : 5—7 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது. எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

வாய்வு யெண்ணை

வெங்காயம் ச .........ச்சி யெலை யெட்டேயாகும்.
வெளங்கெண்ணை ஒருபடி சுத்தியான சிங்காரத்
தந்திவேரைப் பலமே காலுச்சி விந்துக்
கல்ப்பூரம் பலம் யரைக்கால்ப் பங்காக யரைத்து

முடிவு :

அரத்தை சதை குப்பையோடே
முக்குக்கரவு கோஷ்ட்டம் உரத்தக்
குளவிந்தமோடு றோசாணி குரும்பைச் சாக.......

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், முதல் 7 ஏடுகள் ஒரு பகுதியாகவும், பின்னர் 1 முதல் 44 ஏடுகள் வரை ஒரு பகுதியாகவும் வைத்தியங்கள் மருந்துகள் காணப்படுகின்றன.

வரிசை எண் : 3039 சுவடி எண் : 1566

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 16 கி. எண்ணிக்கை : 700 அளவு : 34 × 3 செ. மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : தன்வந்திரி பொருள் : மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

............ சன்னியெந்த ............
.........த்தியிலைச் சாத்தில்லிட
... ...... வென்னீறும் சாதமும்......
......... கொட்டை பலம் 30.

முடிவு :

புருஷன் பெண்ஞ்சாதி சேராத பேருக்கு மருந்து

மறுள் ஊமத்தங்காயி அசை ............
படி சாத்தில் சிறுநீர் விட்டு ............
எண்ணையில் கலந்து ................
கவும். சேருவாள்

காலம் :

இல்லை

குறிப்பு :

ஏடுகள் ஒடிந்துள்ளன. இதில் 44-ஆம் ஏடு முதல் உள்ளன. மூலத்துக்கு, சுவாச காசத்துக்கு மருந்து, வகுத்தாலே தண்ணீராயி கழியிறதுக்கு, விஷ பாகத்துக்கு, மகோதரத்துக்கு, பயித்தியவாயுவுக்கு, பரிதாபபுண்ணிற்கு, தன்வந்திரி வாகடம், நாடிப்பரீக்ஷை அறியும்படி, காமாலை, மஞ்சள் காமாலைக்கு, பிரமியத்துக்கு, அமிர்த சந்தனாதித் தைலம், அரையாப்புக்கு, நீர்கட்டுக்கு, நீர் அடைப்புக்கு கல்லடைப்புக்கு, விறையிழுத்துக் கொண்டு போன பேர்க்கு, வெள்ளைகாணுதற்கு மருந்து முதலியன உள்ளன.

வரிசை எண் : 3040 சுவடி எண் : 1567

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 60 கி. எண்ணிக்கை : 700 அளவு : 18×2½ செ. மீ.
பக்கத்திற்கு : 4—6 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கு ........ாமரை கொண்டு ........
தக்குகைக்குள்ளே............
ாடப் பஷ்ப்பம்...........

முடிவு :

வீரம் வாகனிடை 2½
பிள்ளந்து தலைவலிக்கு
சித்தகத்நி சாறு
மொளகு வெள்ள வெங்காயம்
சாபு எண்ணை சரிசமனாயிட்டு
சத்தரு போட்டு காச்சி முழுக.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், பரங்கிப்பட்டை ரசாயனம், வில்வப்பழ லேகியம் மூலச் சூட்டுக்கு, வல்லாதி லேகியம், சகல கரப்பனுக்கும் எண்ணை, மண்டைக் கபாலக் குத்துக்கு. சிரசில் மேக நீருக்கு, சகல வாதத்துக்கும் மருந்து, மேகவாதம் வாயுவுக்கு, கெந்தக மெழுகு, அரையாப்பு கடிசையிது ரெண்டுக்கு மருந்து, தாளக பற்பம், பலசூத சிந்தாமணி முதலியன உள்ளன.

வரிசை எண் : 3041 சுவடி எண் : 1568-a

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 14 கி. எண்ணிக்கை : 200 அளவு : 18×2 செ.மீ.

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கடவுள் வணக்கம்

அணுவிலெழு புவிபடைத்த ஆதி
அகண்டபரி பூரணமாய் நிரைந்த தனாதி
மனமருள் கமழ்போலே நிறைந்த சோதி
மனுவுக்குள் நாரவடிவாய் யுதித்த நீதி

முடிவு :

வைத்தவுன் சாரத்............ம் பொடு
மறுநாள் தான் காய்ந்த பின்பு
வாட்டுக............வொண்ணாது
சாரந்தானப்பா கொடு.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், தங்கச் சுன்னம் என்ற ஒரே தலைப்பு காணப்படுகிறது. தொடக்கத்தில் நூற் பெயர் இல்லை.

வரிசை எண் : 3042 சுவடி எண் : 1568.b

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 15 கி. எண்ணிக்கை : 300 அளவு : 18 × 2 செ.மீ
பக்கத்திற்கு : 5—6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக
அரிதார பற்பம்

அரிதாரத்தைக் கற்பூர வள்ளிச்சாறு விட்டு
ரெண்டுசாமம் அரைத்து வில்லை பிடித்து
உணத்தி அந்த இலையைக் கீழு மேலும்
நாலு நாலு யிலையை வைத்து

முடிவு :

சீலைமண்செய்து ......க்கிடமிடப் பற்பமாம்
.........ம்பில் துட்டிடைக்கிப் பணவிடை
குடுக்க மாத்து எண்பது பத்து
கண்டு கொள்ளவும்

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், ரசவேதை, வெள்ளைப் பாஷண செந்தூரம், கல்லடைப்புக்கு முதலியன இரண்டு பத்தியாக எழுதப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3043 சுவடி எண் : 1569-a

## ரோமரிஷி பாடல் - 16

ஏடுகள் : 10 கி. எண்ணிக்கை : 200 அளவு : 19×2 செ.மீ
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : ரோமரிஷி பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு.

இது எமது சுவடி எண் 817/D-1625 போன்றது,
தலைப்பில் 'ராமதேவர் சக்கரம' என்றும் உளது.

வரிசை எண்: 3044 சுவடி எண்: 1569-b

## அகத்தியர் வைதித்யம் - எண்பது

ஏடுகள் : 39 கி. எண்ணிக்கை : 800 அளவு : 19×2 சென்டி மீட்டர்
பக்கத்திக்கு : 5 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

காலம் :

ஸ்ரீ முக வருஷம் வையாசி மாதம் 22 - தேதி முகிந்தது,
பண்ணப்பட்டு கோவிந்த பிள்ளை.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 756 - b/D - 1511 போன்றது

வரிசை எண் : 3045

சுவடி எண் : 1570-a

# அகத்தியர் பற்பம் - 105

ஏடுகள் : 34 கி. எண்ணிக்கை : 800 அளவு: 16×3½ செ.மீ

பக்கத்திற்கு : 7—9 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

பூரணமாய் மும்மூலம் பொறியில்ச் சூடாய்
புகையெழுத்து மேகமதாம் சிரசில் சூடாம்
காரணமாய் நீர்கலந்து கண்ணில்ச் சூடாய்
கனலெழும்பி வாயுவினால்ச் சூலை ரோகம்

முடிவு :

பறையென்ற பறைபோட்டேன் வீதிக் குள்ளே
பண்போலப் பாடிவிட்டேன் பலறி லெல்லாம்
நிறையென்ற துறையெல்லாஞ் சுருக்கிச் சொன்னேன்
செய்செய மின்னூலுக்குள் மிகாக் காணே — 1"5

அக்த்தியர் சுவாமிகளுடைய பற்பம் நூத்தஞ்சு
எழுதி முகிந்தது. முற்றும்
குமரகுருபர முருக்சரவண முருகையன் துணை
அகத்தி அய்யா துணை ஸ்ரீனிவாச அய்யா துணை

கூற்று :

அக்த்திய அய்யா அடிமை மறக்கடை செங்கமலத்தா பிள்ளை குமாரன் சுப்பு பிள்ளை சேவடி; ஹயான் கையெத்து பொஷ்த்தகத்தை எடுத்தவர்கள் பிழைபாத்து குடுக்க வேண்டியது வேணும். சிவகிருபை. வாலாம்பிகை துணை யுண்டு.

குறிப்பு :

இதில், அயபற்பம், காந்தபற்பம், தாம்பிரபற்பம், ரசபற்பம், வெள்ளிபற்பம் காரீயபற்பம், வெங்காரபற்பம், கல்காரப்பற்பம், தங்கபற்பம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 3046 சுவடி எண் : 1570-b

# அகத்தியர் தயிலம் — 100

ஏடுகள் : 39 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 16 × 3½ செ.மீ

பக்கத்திற்கு : 7—8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

நிகரில்லா மேகத்தின் தைலம் கேளு
நிசமான சந்தணமிலா மிச்சோடு
வகையான் ஆவாரையின் பட்டை ஓமம்
வகைபத்துப் பலமாக வாங்கி யேதான்
பிசகாமல் தூணிநீ ரெட்டொன் றாக்கிப்
பெருமையொத்த கிஷாயத்தை வாங்கி யேதான்.

முடிவு :

ஈவதிந்த நூலிதுதான் னிருநூத் தஞ்சில்
இகத்துள்ளோர் பிழைக்கவென்று இரங்கிச் சொன்னேன்
தாயிருந்த பிள்ளைக்குக் கலக்க மில்லா
தன்மைபோ லின்னூலைச் சாத்தி னேனான்
நோய்மிகுந்து சாவில்லை யொருநா ளுந்தான்
நுண்மையாய் இச்சரக்கையெல்லாம் நீந்திக் கொண்டு
உபாயமோடு எண்ணையோடு கிறத்........

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 674 b/D - 1316 அகத்தியர் வைத்தியம் 205-ன் 106-வது ஈற்றுச் செய்யுளைக் கொண்டு தொடங்குகிறது. சுவடி எண் 768-c/D 1553 அகத்தியர் 205-ன் ஈற்றுச் செய்யுளுடன் முடிகிறது. எனவே இந்நூல் அகத்தியர் 205-ன் பிற்பகுதி.

இதில், வேங்கைத் தயிலம், வெட்டிவேர்த்தயிலம், வேம்பினம்பட்டைம் தயிலம், சீரகந் தயிலம், சூரிய வித்துத் தயிலம் முதலான தைல வகைகளுத் மருந்துகளும் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3047 சுவடி எண் : 1571-a

# சொரூபானந்தர் ஆனந்தக் களிப்பு

ஏடுகள் : 16 கி. எண்ணிக்கை : 400 அளவு : 23×3 செ.மீ.

பக்கத்திற்கு : 6—7 வரிகள் ஆசிரியர் : சொரூபானந்தர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

அந்திக்கு முன்வந்தா னோடே
யதிகால மேவந்த அய்யனைக் கண்டு
சந்தித்த வய்யகந் தாங்கி — நாதந்
தாங்கிய போதினிற் தன்னுடின் பொதித்து
விந்துதன் பதியினிற் கூடி — அப்பு
மேல்நின்ற தீபத்தை மேவாத நகளுஞ்
சிந்தைத் துயரது நாலேச் — சில
வாதிகள் கூடித் திரிந்தான்டி தோழி —1

முடிவு :

சந்தத மோங்காரங் கூடி — யெங்குந்
தானாயிருந்திடுஞ் சத்தியின் தீட்சை
வந்தக்கால் தேகமுஞ் சித்தியிது
மாந் துளிர்போலவே மொழ்ய தாகும் —51

சொரூபானந்தசுவாமி ஆனந்தக் களிப்பு
முற்றும்

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எம்து சுவடி எண் 675 - e/D - 1321 போன்றது தொடக்கத்தில் அட்டவணை எழுதிய ஏடு ஒன்றும், மருத்துவம் எழுதிய ஏடு ஒன்றும், அதற்கு முன் மூன்று ஏடுகளும் உள்ளன.

வரிசை எண் : 3048 சுவடி எண் : 1571-b

# மச்சமுனி நயினார் சூத்திரம் - 82

ஏடுகள் : 9 கி. எண்ணிக்கை : 500 அளவு : 23×3 செ. மீ.

பக்கத்திற்கு : 9—11 வரிகள் ஆசிரியர் : மச்சமுனியார் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

நடுமய்ய காரத்திறையமே தொல
கடவிகடத்தனைக் கரிமுகவன் காப்பு
குருபாதம்.

திடமான சாரத்துறையுஞ் தனிநூ சூடன்
தடமான தண்ணீறாங் காரத்துறைக் கனகங்
கடங்கானல போனணி மூலர் போக்கி ரசவாதம்
நடநன் னயமாய் நாட்டினான் பாட்டள் —1

முடிவு :

அப்பான ஆயிரமா மிதனைக் கண்டவன்
எப்போதுஞ் சாகா திருப்பன் சிவனவன்
யப்பாய வாத்தாண்ட வெழுத்தைச்
செப்பச் சிவாமாஞ் சேர்வு முற்றே. —82
மச்சமுனி நயினார் சூத்திர
முற்றும்

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 231 - d/D - 381 போன்றது.

வரிசை எண் : 3049 சுவடி எண் : 1571–c

# சட்டைமுனி நயினார் சூத்திரம்

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 200 அளவு : 23×3 செ.மீ.
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : சட்டைமுனி (சிவவாக்கியர்) பொருள் : மருத்துவம் நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பூமி நாத மேகமே
புனல் சொரிந்த பூவதா
மாமடாவி முகத்தி
லாயிருந்த யிந்தடா
சோம னாத மீறியே
சுருபன் வைத்த சத்தியாம்
யேம வித்தை பூரண
மிருக்க அட்ட சித்தியே ! —1

முடிவு :

ஓதி மம் போல் நந்தியு
முபதே சமே செப்புவார்
ஆதி யான பூரணம்
அறிந்து பாரு சோதியே —25

சூத்திர முற்றும்.
குருபாதமே கெதி

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எம்து சுவ்டி என் 823 - d/D - 1644 சிவ வரிக்கியர் சூத்திரம் போன்றது. இங்கு சட்டைமுனி என்ற பெயரால் உள்ளது.

வரிசை எண் : 3050 சுவடி எண் : 1571-d

# பிரம்மமுனி வகாரத் திரைய சூத்திர வெண்பா

ஏடுகள் : 7 கி. எண்ணிக்கை : 200 அளவு : 23×3 செ.மீ.
பக்கத்திற்கு : 5—10 வரிகள் ஆசிரியர் : பிரம்மமுனி பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

தொட்டது கண்ணோட்டஞ் சுழிமுனையைப் பற்றி நிற்க
மெட்டுரண் டோங்காரத் திறலறியப் — பட்டதொரு
சித்தியுடன் தீட்சையினாற் சிதையுறு மண்டலமேற்
சுத்தவெறும் பாளே துணை.

முடிவு :

பாரப் பிரமகுலம் பரசித்த விந்தாலே
சாரப் பிரமமுனித் தானேறே — வாரகுரு
நந்தியா சனமுள் கூப்பிட்டுக் கியானமுற
வருள்வாழி சித்தன்பத்து முற்றே. —52

பிரமமுனி நயினார் சூத்திர முத்தும்.
குருபாதமே கெதி
தேவிசகாயம்.

காலம் :

இந்த சூத்திர மெழுதினேன் சிதம்பரம்பிள்ளை மகன் நல்லக்கண்ணு பிள்ளை. 976-ஆம் வருஷம் வைகாசி மாதம் 12-ந் தேதி
சிதம்பரம்பிள்ளை புண்ணியம்

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 632/D - 1255 போன்றது. அது, பிரம்மமுனி பாடல் 50 என்ற தலைப்பை மட்டும் கொண்டுள்ளது. பிழைகள் அதிகம்.

பின்னிரண்டேடுகள் புதிதாக எழுதிச் சேர்த்து நிறைவு செய்யப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3051 சுவடி எண் : 1571-e

# சட்டை முனியார் சூத்திரம்

ஏடுகள் : 43 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 23 × 3 செ மீ

பக்கத்திற்கு : 10—11 வரிகள் ஆசிரியர் : சட்டைமுனியார் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

சூத்திரம் மோதுமுன்னே சொல்லுறேன் கிணேசன் காப்பு
சாத்திரம் நிறைந்து பொங்கி சராசர மெங்குந் தானாய்
தோத்திரப் பொருளுந்தாய சொல்லற்று மனமு மற்று
போற்றுரம் பிரம புள்ளர் பூரணங் காப்புத் தானே

முடிவு :

கோனான சின்மயத்தின் பிள்ளை நாங்கள்
குறியேது கயிலாச முத்தி வர்க்கம்
வேனான சூத்திரந்தா னிரனூற் றொன்று
வேதாந்தக் கருணையினால் விளங்க முற்றெ ! — 202

சூத்திரம் முற்றும்
குருவே துணை

காலம் :

இல்லை

குறிப்பு :

இது எமது சுவ்டி எண் 755-c/D-1507 கம்பிளிச்சட்டை கயிலாசநாதர் சூத்திரம் - 200 போன்றது. பாடவேறு பாடுகள் காணப்படுகின்றன.

வரிசை எண் : 3052

சுவடி எண் : 1571-f

# கோரக்கர் சூத்திரம்–100

ஏடுகள் : 11 கி. எண்ணிக்கை : 400 அளவு : 13×3 செ.மீ.

பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : கோரக்கர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து தமிழ்.

தொடக்கம் :

கார்கொண்ட குருவின் போக்கும்
    கறியுப்புக் குருவின் போக்கு
வீரத்தின் சுண்ணப் போக்கும்
    விளங்குகுரு வண்டின் போக்கும்
வார்கொண்ட சத்திப் போக்கும்
    வளர்நீல வுப்புப் போக்கும்
சீரான நந்திசொல்லத்
    திறஞ்செங் ஐங்கரனே காப்பு — 1.

முடிவு :

குருவண்டு கோச பீசம் குறித்ததோர் வீரஞ்சூடன்
குருவண்டி நிலவுப்புக்குங் கொள்கைகறி யுப்புங் கூட்டி
குருநின்ற கறியுப் போடுங் கொண்டவர் குருவாஞ் சீடன்
குருபதந் தொழுதுவாதங் கூறிய பொருள்கண் டாரே! — 100
கோரக்க நமினார் பாடல் முற்றும்
    குரு புண்ணியம்
பிரம்ம முனி ஆசாரியார் குரு.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், உதகம், பூனாகம், குருவண்டு, கறியுப்பு, ரோமச்சுண்ணம், கடல் நுரைச்சுண்ணம், கல்லுப்புச் சுண்ணம், துரிசுநீறு, லிங்க மெழுகு, காந்தயியம், நவச்சாரக்கட்டு, சாரச்சுண்ணம், நாகம்கட்ட, நாகச்செந்தூரம், முதலான தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3053 சுவடி எண் : 1571-g

# இடைக்காட்டு நாயனார் சூத்திரம்

ஏடுகள் : 8 கி. எண்ணிக்கை : 300 அளவு : 23×3 செ.மீ.

பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : இடைக்காடர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

நாகக்கூட்டு

காருலவு மேகமே நல்கங்கை சத்தியோ சிவம்
பாரில்வளர் வீட்டுப்புச் சுத்தி பணம்பு உவர்ப்புவாக நீர்
சீருலவுங் கங்கையால் தெளிந்த வெள்ளை யுப்பிலே
நீர்கலந்த போதுதழல் நீருலாவு சுண்ணமே! —1.

முடிவு :

சித்தனாங் கெவுனசித்தி தேகங்கள் வச்சிரகாயம்
முத்தியா யறிந்து வாதம் முன்னிக்கச் சிதம்பரத்தைப்
புத்தியாப் பூசைசெய்தால் புகட்டுவார் மதுவீன் றாற்போல்
உத்தமா யுனக்குப் புத்தி யுயரடி யுவந்து காரே! —67.

இடைக்காட்டு நயினார் பாடல் முற்றும்.
குருபாதமே துணை.

காலம் :

இல்லை

குறிப்பு:

இதில், பூனாகச் சத்து, சத்துரு மித்துரு, உப்புச்சுண்ணம், துருசுச்சுண்ணம், ரசித குரு, தங்கச்சுண்ணம், கடல் நுரைச்சுண்ணம், உப்புக்குரு, அண்டநீறு, துருசு நீறு, சிப்பி நீறு, கீழ்க்காய் நெல்லிக் கற்பம், கட்டுச் செயநீர் ஆகியவை உள்ளன.

வரிசை எண் : 3054 சுவடி எண் : 1571-h

# சுந்தரானந்தர் சூத்திரப் பாடல் - 110

ஏடுகள் : 30 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 23× 3செ.மீ.

பக்கத்திற்கு : 9—10 வரிகள் ஆசிரியர் : சுந்தரானந்தர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஆதியந்த மிகநிறைந்த சட்டநாதர்க்
கன்பான சேயென்றே பிள்ளை யாகிச்
சோதியந்தத் துள்ளிருக்குஞ் சுடனரப் போற்றி
சுந்தரமென்றே பேரு மிட்டார் எங்கள் நாதர்

முடிவு :

தானென்ற கற்பமதை யுண்ண வேணுஞ்
சாதகமாய்த் தீட்சைவிதி கற்க வேணுந்
தானென்ற பூசைவிதி யறிய வேணுஞ்
சாத்திரத்தில் விதிநூற்றுப் பத்து முற்றே! —110

சுந்தரானந்தர் சூத்திரம் முற்றும்
திருச்சிற்றம்பலம்
குருவே துணை.

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 342 - b/D - 669 சுந்தரானந்தர் பாடல் சூத்திரம் போன்றது.

வரிசை எண் : 3055 சுவடி எண் : 1571-i

# போகநாதர் சூத்திரம்

ஏடுகள் : 9 கி. எண்ணிக்கை : 400 அளவு : 23 × 3 செ.மீ

பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : போகநாதர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

சீர்மிகுந்த பேரனெங்கள் நந்தீ சரப்பா
வாரமுட னெனைவளர்த்த மூலரென் தந்தை
பாரில்வளர் கருவூரன் கொங்கணரென் பிள்ளை
காரமுடன் சாரவிதங் கையறிவார் மெய்யே ! —1

முடிவு :

உரைத்தேன் கருக்கள் குருக்க ளொளியாமல்
நிரைத்தேன் சிவனுமையாள் நீதமுறைவானை வைத்தேன்
பரைக்கே நீ பூசை பண்பாகச் செய்துக் கொண்டால்
குருக்காணுமப்பா குறையாது பூரணமே ! —67

குருபாதமே துணை.
சங்கரானந்த குரு தேசிகர் பாதாரவிந்தமே துணை.

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 418 - e/D - 867 போகர் சூத்திரம் - 68 போன்றது. பாட வேறுபாடுகள் காணப்படுகின்றன.

வரிசை எண் : 3056 சுவடி எண் : 1571-j

## கொங்கணர் சூத்திரத்துக்கு உரை

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 200 அளவு : 23×3 செ.மீ.
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : கொங்கணர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

சவுக்காரம் ஒரு சீலையிலே கட்டி
ஒரு கலசத்திலே ரண்டுபடி கல்ச்சுண்ணம்
போட்டு நடுவே கிளியை வைத்து மேலே
ஒருபடி கல்ச் சுண்ணம் போட்டு
கொஞ்சம் தண்ணீர் விட்டு

முடிவு :

யிந்தச் செந்தூரத் திராவகத்தைச்
சுருக்குக் குடுக்கச் செந்தூரமாம்
இந்தச் செந்தூரம் செம்பு $1\frac{1}{2}$
மஞ்சாடி குடுக்க மாத்து எட்டு
தேவிபூசை செய்யச் சுத்தியமாம். வேறு

குருபாதமே துணை

காலம் :

இல்லை

இதில், இரும்பு உருக்க வகை, கெந்தி செந்தூரிக்க, வழலைச் சுண்ணம் மூன்றாவது வழலை, சுண்ணத் திராவகம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 3057 சுவடி எண் : 1471-k

# கைலாசச் சட்டைமுனி சோடசம்-50

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 300 அளவு : 23×3 செ.மீ.

பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : சட்டைமுனியார் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சோதியெனும் துரியவெளிக் குருவே அய்யா
சொற்பெரிய கயிலாய மயமே ஞான
தாதியே கடாளே ஞான மார்க்கந்
தாத்தேயென்று ரைத்தால் ஆர்தான் காண்பார்

முடிவு :

வாமப்பா ரெண்டு கண்டம் வாதத் துக்கு
மகத்தான சூத்திர மிருநூறு சொன்னேன்
தாமப்பா சூத்துரமும் நிகண்டு சோடசஞ்
சாத்திரமும் ஏத்தவர்க்கு முத்தி யாமே ! — 53

கயிலாசச் சட்டமுனி நாயன்
சோடச முற்றும்
குருபாதமே கெதி.

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 823 - c/D - 1643 சட்டைமுனி சோடச சூத்திரம் போன்றது.

இதன் பின்னர் 17,18 ஆகிய உதிரி ஏடுகள் சிதைந்தவை உள்ளன.

வரிசை எண் : 3058 சுவடி எண் : 1572

## மாந்திரீகம்

ஏடுகள் : 20 கி. எண்ணிக்கை : 300 அளவு : 16×3 செ.மீ

பக்கத்திற்கு : 5—10 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள்: மாந்திரீகம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பாரு பாரே — 9

பாரப்பா குருவோடு யகாரஞ் சேரில்
பாருலகில் நினைத்த தெல்லாம் வசியமாகும்
ஆரப்பா யகாரம் நடு வெடுத்தே லொட்டையிலிட
அழைப்பு வித்தை பாகுமாகும்

முடிவு:

உச்சாடினம் பேதனம் மாரணம்
மூன்றுக்கும் ஒங் மங் உச்சாடாயா
மாரண மோகன மளைப்பு ஆகிருசனம்
தம்பனத்துக்கு ஓம் இறீங் வசி சிங் சிவாய

காலம் :

இல்லை

குறிப்பு:

இதில், ஆதித்தன் பேதனம், புதன் அளைப்பு, வியாழன் வசீகரம், சுக்கிரன் மோகனம், சனி தம்பனம், ராகு மாரணம், கேது மாரணம் முதலியன உள்ளன. சக்கரங்களும் உள்ளன. முதல் 3 ஏடுகள் இல்லாததால் தலைப்பு தெரியவில்லை. ஏடுகள் தலைதடுமாற்றம்,

வரிசை எண் : 3059 சுவடி எண் : 1573

# தொடுகுறி சாத்திரம்

ஏடுகள் . 15 கி. எண்ணிக்கை : 400 அளவு : 9×3 செ.மீ

பக்கத்திற்கு : 7—8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க
குருவே துணை

ஒன்றுடந் தனங்கள் போம்
ஒருபிணி ரெண்டுங் கேடா
மூன்றிய மூணத் தொட்டால்
மிகவுமே கருமம் நன்றாம்

முடிவு :

அதற்குச் சிங்காரனிடத்தில் தெளிந்து
அந்தக் கருப்பை விலக்க வேண்டியது
மனையில் ஒரு பெண் தேவதைச்
சீலைக்காரிக்கி தாயாதிகளுடன் நேத்திக்கடன்
செலுத்துகிற துண்டு

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், 1,2,3 எழுதிய சதுர சக்கரம் ஒன்று இருக்கிறது அதில் ஏதாவ தொன்றைத் தொட்டால் அதற்குரிய பலன்கள் பேசப்படுகின்றன.

வரிசை எண் : 3060 சுவடி எண் : 1574-a

# அகத்தியன் குழம்பு

ஏடுகள் : 1 கி. எண்ணிக்கை : 5 அளவு : 7×2 செ. மீ.

பக்கத்திற்கு - 5 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : நல்லநிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பெருங்காயம் திப்பிலி வகைக்கு விராகனெடை — 1
இந்துப்பு ரசம் வாளப்பருப்பு ,, — 10
கடுகுரோகினி நாவி காட்டாமணக்கு " — 5
வெங்காரம் மனேசிலை எண்ணை கசியுமட்டு
கருஞ்சீரகம் தாரம் மரைத்துக் கொண்டு

முடிவு :

சிமிளில் அடைத்து வைத்துக் கொண்டு
சுரத்துக்கு அரத்தையும் சுக்கும் கிசாய மிட்டுக்
கொடுக்கவும், மற்ற வியாதிக்கு அனுப்பான மறிந்து
கொடுக்கவும்.

காலம்:

இல்லை

குறிப்பு :

இதில் ஒரே மருந்து பேசப்படுகிறது.

இது, எமது சுவடி எண் 594-/D. 1212 - ன் வேறாயது.

வரிசை எண் : 3061 சுவடி எண் : 1574-b

# திரிலோக செந்தூரம்

ஏடுகள் : 70 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 7×2 செ மீ
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்லநிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கேளப்பா திரிலோக செந்தூ ரந்தான்
கெடியான லோகமுட னப்பிரகங் காந்தம்
நாளப்பா மூன்றையுந்தான் சுத்தி செய்து
நலமாகச் சமன்கூட்டிக் கல்வத்திட்டு

முடிவு:

டி மருந்தைக் கல்வத்திட்டு தேறும் நெய்யும்
விட்டு நாலு சாமம் நன்றாயரைத்து சாடியில்
வைத்துக் கொண்டு இருபது நாள் கிளர்ச்சிக்காய்
பிரமாணம் அந்தி சந்தி சாப்பிட்டு வரவும்
பத்தியம் இல்லை. இச்சா பத்தியம். கைகண்டது.

காலம்:

இல்லை

குறிப்பு:

இதில், அயத்தாம்பிர செந்தூரம். சூடச்சூரணம் தாம்பூரக் களங்கு, மூலம் அட்ட குன்மம், கிராணி, மந்தார காசத்துக்கு அணில் நெய், சுரநாசத்தைலம், சாதி லிங்கக் குளிகை, அபின் மெழுகு, குழந்தைகள் கணத்தெண்ணை, சிலேத்தும துரத்தலுக்கு முதலான பல அரிய மருந்துகள் உள்ளன.

வரிசை எண் : 3062 சுவடி எண் : 1575-a

## கயிலாயமூர்த்தி ஞானம்—100

ஏடுகள் : 43 கி. எண்ணிக்கை : 1200 அளவு : 9×3 செ. மீ
பக்கத்திற்கு : 7—9 வரிகள் ஆசிரியர் : கயிலாயமூர்த்தி பொருள் : மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுள்ளது எழுத்து : தமிழ்.

தொடக்கம்:

கயிலாச பராபரத்தி லென்னை யாண்ட
கடவுளெனும் தெட்சணா மூர்த்தி பாதம்
கயிலாசத் தெனையீன்ற மாயி பாதங்
கருணையுடன் போற்றி நித்தம் ஞானம் சொல்வேன்

முடிவு:

மவுனமென்ற ஞானம் பொய் யென்று சொல்ல
வாகான சேகண்டி போட்டே னூற்றில்

மவுனமன்றோ சமரசந்தான் மக்காள் மக்காள்
வாகான ஞானமுறை முற்றும் காணே ! — 100

கயிலாசாசட்டைமுனி ஞான வாக்கியம்
முற்றும்
குரு பாதமே கெதி

குறிப்பு:

இதில், ஓரங்கள் எலிகடித்துள்ளன உள் தலைப்புகள் இல்லை

வரிசை எண்: 3063 சுவடி எண்: 1575-b

# சட்டைமுனி முஞ்ஞானம் — 100

ஏடுகள்: 34 கி. எண்ணிக்கை 1200 அளவு : 9×3 செ.மீ

பக்கத்திற்கு: 8—9 வரிகள் ஆசிரியர் : சட்டைமுனி பொருள் : மருத்துவம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

மூலமுத லாறுதலங் கீழே தள்ளி
முதிர்ந்துநின்ற மேலாறு மடுத்து நோக்கி
கோல்முட றுன்மனையைத் தான்டி யேறி
கொடியதொரு ஞானசத்திக் குள்ளே மைந்தா

முடிவு :

ஆகவப்பா இருபத்து எழுநூறும் அறிந்த மட்டும்
சொல்லிவந்தே னறிந்த வல்லோ
ஆகவப்பா பாத்துரைத்தா லிறபரமுஞ் சித்தி
ஆதியென்ற குருவருளால் சொன்னேன் முத்தே ! ... 102

காலம் :

சட்டைமுனி ஞானம் வெள்ளிக்கிழமை முகிந்தது
முற்றும்
வீரவிநாயகன் துணை
குமரன் துணை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 863-ꟼ/D-1805 போன்றது. ஓரங்கள் ஒடிந்துள்ளன,

வரிசை எண் : 3064 சுவடி எண் : 1576

# (அகத்தியர்)_200

ஏடுகள் : 55 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 26×3 செ.மீ

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர்? பொருள் : மருத்துவம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

காரமுடன் சாரமிகு கல்........... போ........
.........யே கரிமுகனே பன.
ஆதியான மணக்கோலஞ் செய்யும் நாளில்
அதிமூல தேவரிஷி கூட்ட மாச்சு
வேதியனு மாலோனும் தானாய் நின்ற
விமலனார் விசுமனுக்குப் பாத்தை யீய்ந்தார்

முடிவு :

வருத்துவேன் சாகாம லிருக்கச் சொல்லி
வளமான கற்பத்தைக் கொண்டு யேறு
யிருத்துவேன் சமாதியிலே தீட்சை யெல்லா
மிறையளவு தப்பாமல ...........

காலம் :

தேவப்பிரசாத முப்பதேசியா ருடையது
............யிருநூறு தேவப்பிரசாதன் ஏடு ...........
......... 33-ஆம் வருஷம் ஏப்ரல் 25-ந் தேதி எழுதி முகிந் .......
.........சி சுதிரை மாதம் 15-ந் தேதி

குறிப்பு:

இதில், தலைப்பு முறிந்துள்ளது. அதனால் தலைப்பு கொடுக்கப்பட்டது. இது, ஒரு உபதேசியார் சுவடி என்றதனால் ஒரு கிறித்தவர் வைத்திருந்ததாகக் கருதப் படுகிறது.

இதில், துரிசுச் சுன்னம், சரக்கு வங்கம், உப்ரசத்தின் வங்கம், அஞ்சு சுண்ணம் கெந்தக மெழுகு பாஷாணக்கட்டு முதலான பல தலைப்புகள் உள்ளன. ஏடுகள் முறிந்து, ஒடிந்தும் அரித்தும் உள்ளன,

வரிசை எண் : 3065 சுவடி எண் : 1577-a

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 110 கி. எண்ணிக்கை : 6000 அளவு : $26 \times 3\frac{1}{2}$ செ.மீ.

பக்கத்திற்கு : 10—12 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது. எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

............ வாங்கிப் புண்ணியனே
தண்ணீரில் கரைத்துக் கொண்டு
............ப் பேற்றி யெரித்திடாயே — 184

முடிவு :

மவுனமென்ற வீடறிந்து மதியைத் தள்ளி
மகத்தான ரவி பெருகி ஒளியில் .........
......... ............ ......... ... — 1163

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில் தொடக்கம் முடிவு இல்லாததால் வைத்தியத் திரட்டு எனப்பட்டது. இது. ஒரு பெரிய நூலின் நடுப்பகுதி ஏடுகள் ஒடிந்தும் பிறழ்ந்தும் தலைதடுமாற்ற மாகவும் உள்ளன.

முன்பகுதி ஏடுகள் 23 பாதியாக முறிந்துள்ளன.

வரிசை எண் : 3066 சுவடி எண் : 1577-b

## அகத்தியர் பாடல் சூத்திரம்

ஏடுகள் : 13 கி. எண்ணிக்கை : 800 அளவு : $26 \times 3\frac{1}{2}$ செ.மீ.

பக்கத்திற்கு : 11–12 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

பூரணமாய் முலமுத லாறா தாரம்
புகழான திசவாய்வு ............
............ ........... ...........ன
வாதபித்த சிலேற்பனமாகி
மாரணமாய்ச் சடத்தினுள்ளே

முடிவு :

தாமரைப் பிஞ்சு பணிச்சைப் பிஞ்சு
நஞ்சாள மாதிளம்பிஞ்சு விளாத்திப்பிஞ்சு
நலமாக வகைக்கு ... ... ... மாய் வாங்கி
துஞ்சவே யிடித் ......... ... ... ....... 219

காலம் :

இல்லை

குறிப்பு :

ஏடுகள் பிறழ்ந்துள்ளன. இது, தலைப்புப் பகுதி இல்லாதுளது.

வரிசை எண் : 3067 சுவடி எண் : 1578

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 28 கி. எண்ணிக்கை : 500 அளவு : 13 × 3½ செ மீ.
பக்கத்திற்கு : 7-8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம், மந்திரீகம் நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது
எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சிறுபிள்ளை மாந்தத்துக்கு
திருநீற்றுப் பச்சையை சட்டியில்போட்டுக்
கருக்கி எருமைமோர் வார்த்து வெள்வெங்காயம்
ஒன்றைப்பூடு வசம்புந் தட்டிப் போட்டு காச்சி
யிரக்கிக்கொண்டு கொடுக்கவும்

முடிவு :

வெண்குங்கிலியம் பொடி போட்டு
மறுநாள் கடைந்து வெண்ணை யெடுத்துக்
கூட்டவும். இவ்விதம் ஒன்பது நாள்
பிறமேகம், எலும்புருக்கி, பெரும்பாடு தீரும்

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், வெட்டைக்கு, நீர்ச் சிகப்புக்கு, ஓடு பாம்பு சருவ விசத்துக்கும், வீக்கத்துக்கும் மருந்து, வசியம், அளைப்பு, திலதம், சகல புண்ணுக்கும், பிள்ளையுண்டு, கூடிவாழும், நீர்விளக்கு, பகைவர் வசியம், கண்திட்டி மந்திரம், வசியம், குளிர்சுரத்துக்கு, கல்லடைப்புக்கு முதலானவை உள்ளன.

வரிசை எண்: 3068 சுவடி எண்: 1579

## வாகடப்பிள்ளைத் தமிழ்

ஏடுகள் : 53 கி. எண்ணிக்கை: 1300 அளவு: 16×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7-8 வரிகள் ஆசிரியர்: வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்
நிலைமை: மிகப் பழுது முழுமை: முற்றற்றது எழுத்து: தமிழ்

தொடக்கம் :

சீர்மலிந்து வளந்தோங்குந் திருமலி ........
............ கைல் வளர்தேவதேவா
பாரிலங்கும் ...........ர் சரங்களெல்லாம்
நோயகல ...........ஞ் செஞ்சொல்பி
பேரிலங்கு ...........
........ரு சரீணங்காப்புத்தானே!

நூல்

செந்தூரம்

கவசக்தி கெவுரியரி தாரமொடு லிங்சுமுஞ்

சில வெள்ளைத் துருசு துத்தஞ் செய்யபொரி

சாரமொடிணங்க மொடு சீனமுஞ்

சேர்வகைக் கோர் கழஞ்சு

முடிவு :

வந்தமே கம்பரங்கிப் பத்துமே மேலூரல்

மாளுகிறத்தி குட்டம் வாதமுரு

கையால் முடக்குத் திமிர் சூலையொடு

மயக்க முதலானதெல்லாஞ்

சிந்தையுறு புளியுப்பு கத்திடுந்திருமுனி

சிறுதே ருருட்டி யருளே!

சிவமவுனயோகமே யகத்தியர் குருமுனிவர்

சிறுதே ருருட்டி யருளே! 10. (100)

காலம் :

இல்லை

குறிப்பு :

குறிப்பு: இது, பிள்ளைத்தமிழ் இலக்கணப்படி, காப்பு, செங்கீரை, தாலம், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்ற பத்துப் பருவத்திற்கும் பத்துப்பத்து பாடல்கள் விதம் 100 பாடல்கள் வைத்தியம் பாடப் பெற்றது

இதில், செந்தூரம், வீரபற்பம், அரிதார செந்தூரம், லிங்கசெந்தூரம், நாகபற்பம், சிந்தாமணிக்குளிகை, ரசமாத்திரை, சூரியப்பிரபை, படர்தாமரைக்கு மருந்து முதலான பல மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

இதன் பின்னர் 7 ஏடுகள் இதன் அட்டவணையும், மருந்துகளும் எழுதப் பட்டுள்ளன.

'அகத்தியர் பிள்ளைத்தமிழ், என்று கூறலாம். (ஆண்பாற் பிள்ளைத்தமிழ்.)

வரிசை எண் : 3069 சுவடி எண் : 1580

# அகத்தியர் கருமான சூத்திரம்

ஏடுகள் : 26 கி. எண்ணிக்கை : 500 அளவு : 16 × 3 செ .மீ

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள்: மாந்திரீகம்

நிலைமை : பழுது முழுமை: முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

கருமானஞ் சாத்தாவின் கோவில்
வைத்த காரிகையே
சூனியத்தின் குணமேதென்னில்
சுருபமிது பூனைபோல நாய்போலக் காணும்.
சுரம்பிடிக்கும் கண் குளியும்
கண்மஞ்சாகும்.

முடிவு :

சொரித்தவளைபோல மேலாகும் மக்குடனே
சீபோகுந் தடிக்கும் காது சாதகமாவொரு
காது மந்தமாகும். பார்க்கில்லை யொருநயனம்
பார்வை குன்றும் பரிவான மண்டையிடி யடைக்குஞ்சி
பராசத்தி துணை.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதன்பின்னர் மித்திரரும் கை மயக்கப் வைத்தியம்' என்று தொடர்காணப்படு கிறது.

இது, மந்திர பில்லி சூனியம் கூறுவது.

வரிசை எண்: 3070 சுவடி எண்: 1581

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 35 கி. எண்ணிக்கை : 700 அளவு : 13½×3 செ மீ

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள்: மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

சகலபுத்து, சகல கிரந்தி, புண், ஆப்பு முடக்கம்

திருமால் தேவி கெவுரி வெள்ளை
சித்திரமூலந் துத்தமும்
சேருந் துருசி வூறு நாக்கண்டமுங்
கண்டங் கத்திரி
வரும் வழுதலை சூதமோடு வந்த
கெந்தியு மணிந்தையாய்

முடிவு :

பத்தவே நசுக்கியதை மெத்தென வெள்ளைத்
துணியில் பரப்பியே புளிந்து சாரைப்புடனுரி
மெத்தவே யமுரியித்த யிடையதாய்ச் சேர்த்து
மூக்கில் மென்மையாப் புளியச் சன்னிக்
கூர்மை போமாண்டே.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், 3-வது ஏடு இல்லை, பேதி, மூலத்துக்கு, ஆக்ராணம், கிராணி, மூலம், ஆகிய தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3071 சுவடி எண் : 1581-A-a

# வைத்திய அட்டவணை

ஏடுகள் : 106 கி. எண்ணிக்கை: 1200 அளவு : 12×3 செ.மீ

பக்கத்திற்கு: 8—9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள்: மருத்துவம்

முழுமை : முற்றறது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சீரகச் சூரணம்

கரிப்பானஞ் சார் முசுமுசுக்கைச் சார்
நெல்லிக்காய் சார் தூதுவளைச் சார்
நிம்பு பட்டைச் சார் தும்பை யிலைச் சார்
பொடுதலைச் சார்

முடிவு :

நொருங்கயிடித்து அடை சுட்டு கையிலெடுத்துத்
திம்பிறாயி களைக்க வேண்டாம் கண்டாயே.

பத்தியம் : இச்சா பத்தியம்
வெங்காரம் பனவெல்லம் கடை நெய்யில்
\+ \+ \+ \+ \+ \+ \+ \+

ரத்த பிரமியத்துக்கு

பொடுதலைச்சார் நல்லெண்ணை சமன் கூட்டி காத்தொட்டிச் சார்
கல்லெண்ணைய் சமன் கூட்டி பாலும் சோறும்

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், சுரத்துக்குக் கிசாயம், காது வியாதிக்கு எண்ணை, காது வலிக்கு எண்ணெய், பூரக்கட்டு, நஞ்சுக்கு முறிவு, பேதி மாத்திரை, விரோசன சிந்தாமணி மெழுகு, விரைவாதத்துக்கும், மெத்தன வாயுவுக்கும் மருந்து முதலான பல தலைப்புகள் உள்ளன.

நடுவில், சுறநூல் மரணகெண்டி என்ற ஒரு ஏடு உள்ளது.

வரிசை எண் : 3072 சுவடி எண் : 1581-A-b

## சுரநூல் மரணகண்டி அறியும்படி

| | | |
|---|---|---|
| ஏடுகள் : 3½ | கி. எண்ணிக்கை : 50 | அளவு : 12×3 செ.மீ |
| பக்கத்திற்கு 7 வரிகள் | ஆசிரியர் : அறியக்கூடவில்லை | பொருள் : மருத்துவம் |
| சோதிடம் | நிலைமை : மிகப் பழுது | முழுமை : முற்றற்றது |
| எழுத்து : தமிழ். | | |

தொடக்கம் :

அசுபதியில் சுரம் தோன்றில் 13 நாளில் விடும்
மாசம் மூன்றில் விடும். பரணி - 5 கண்டம்
11 - நாள் விடும்.

முடிவு :

சலதயம் 6 - மரிக்கும்
11 - கண்டிதம் மாதம் 3-ல் மரணம்
பூரட்டாதி - 7 - விடும்
ரேபதிக்கி 11 - விடும்
சுரநூல் முற்றும்

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில் இன்ன நட்சத்திரத்தில் சுரம் கண்டால் இத்தனை நாளில் விடும் என்று கூறப்பட்டுள்ளது.

வரிசை எண் : 3073 சுவடி எண் : 1581-A-c

# வைத்தியத்திரட்டு

ஏடுகள் : $2\frac{1}{2}$ கி. எண்ணிக்கை : 100 அளவு : 12×3 செ.மீ
பக்கத்திற்கு : 5—6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

விஷபேதி

லிங்கம் வாரகனெடை — 1
பால் சாம்பிராணிணு பலம் ... 1
சூடம் ,, — 1
சாம்பிராணி னுக்கி லிங்கத்தை சேர்த்து
அரைக்க மெழுகு

முடிவு :

யெடுத்துக் கொண்டு தங்கம் சேர்ந்து
வெள்ளி — 4, தாம்பூரம் — 5 - க்கு குடுக்கவும்

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், ரணத்துக்கு மேல் பூச லிங்க மெழுகு, வெட்டைக்கு, கிரந்தி புண் மருந்து, கருவங்கபற்பம், கண்மாசிக்கும், மேக நீருக்கும், அண்ட வாயுவுக்கு முதலான தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3074 சுவடி எண் : 1581-A-ð

## பூச்சிமுனி பாடல்

ஏடுகள் : 35 கி. எண்ணிக்கை : 150 அளவு : 12×3 செ.மீ

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : பூச்சிமுனி பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்

தொடக்கம் :

திரிலோக அக்கினி குமார செந்தூரம்

| | | |
|---|---|---|
| கெந்தகம் வராகனெடை | | — 9 |
| சூதம் | ,, | — 5 |
| ஊசிக்காந்தம் | ,, | — 7 |
| வெண்காரம் | ,, | — 8 |
| பூமி உப்பு | ,, | — 4 |

முடிவு :

அக்கிக்கி வென்னீர் விட்டு அறப்பிட்டு
முளுகவும். 3 நாள் செய்யவும் தீரும்
அறணை கடி விஷம் வெண்குஷ்டம்,
செங்குஷ்டம், கருங்குஷ்டம், சொரி,
சிறப்பூ, படுதாமரை
10 ராட்டியில் புடம் போடவும்

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், ரணத்துக்கு பிளாஸ்திரி, மேகத்துக்கு எண்ணெய், தாளக செந்தூரம் லிங்க வெள்ளை, தலைவலி, மேகநீர், தாம்பூர பற்பம் முதலான பல தலைப்புகள் உள்ளன.

................

வரிசை எண் : 3075 சுவடி எண் : 1582

# மச்சமுனி பெருநூல் பாடல்—800

ஏடுகள் : 170 கி. எண்ணிக்கை : 6000 அளவு : 32×3 செ.மீ.
பக்கத்திற்கு : 6-7 வரிகள் ஆசிரியர் : மச்சமுனி பொருள் : மருத்துவம், மாந்திரீகம் நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

உப்புநீரு

......... வைப்பீறாதே! .................74.
வைப்பீரே பிண்டத்தைத் தானிச் சட்டி
வத்தவைப்பீர் சுண்டவுமே ஆடைச்சாத்தி
லப்பீரே பொடியாக்கி வைத்துக்கொண்டு
வரிதான வழலைகுரு .........ர னபேரை

முடிவு :

............ ............ தானே
வெவிவிடாதே வேதாந்த மனோன்மணித்தாங் பாத
.......... பெருநூலப்பர சிவஞானத்தங்குகின்ற
பெரியோர்க்காகும் ................. ண்ணி வைத்தாலு
மவர்க்கு முத்தி வாய்க்கு வாய்க்கும் பத்தருக்கு
... சதமெட்டான பதிலாகும் பெருநூல் மெஞ்ஞான
முற்றே ...... ... 801

குருபாதமே துணை

......... மீ 5-தேதி முற்றும்

மச்சமுனியார் பாடல் 800 முற்றும்.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், தொடக்க ஏடுகள் 20 இல்லை. இடையிடையே ஏடுகள் இல்லை. இதில் பெரிதும் மாந்திரீகம் வசியம் முதலான துகள் பேசப்படுகின்றன.

---

வரிசை எண் : 3076 சுவடி எண் : 1583–a

## யாகோபு 300

ஏடுகள் : 46 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 37×8 செ. மீ.
பக்கத்திற்கு : 7—8 வரிகள் ஆசிரியர் : யாகூபு பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 393/D-810போன்றது. பாடவேறுபாடுகள் காணப்படுகின்றன. நல்லநிலையில் உள்ளது.

---

வரிசை எண் : 3077 சுவடி எண் : 1583-b

## யாகோபுசுன்னம் 600-க்குச் சுருக்கம் 300

ஏடுகள் : 40 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 37×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7—9 வரிகள் ஆசிரியர் : யாகூபு பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ரயிமாவின் பாதமலர் துதியே செய்து
நபிமாரை அனுதினமே போத்தி செய்து
கைகட்டி வணங்கியே சுண்ணங் காண்ட
கனிந்துமே அனுநூறு முன்னே பாடி

வையகத்தி லநு நூறு தனைக் குறுக்கி
வதையாக யிந்தநூல் முன்னூல் தன்னில்
மெய்யாக சுண்ணங்கள் வயித்தும் பாகம்
மேன்மை பெறப் யிடினேன் விருப்பாய்தானே —1

முடிவு :

படிப்சபர்கள் பலகலைநூல் பத்திறொம்ப
பரிவாக நிலையாக பத்தி செய்வார்
குடுப்பார்கள் ரசவாதத் தெர்ழிலைச் செய்வார்
குற்றமற இருப்பார்கள் கூடுவாரே! —297
கூடுவார் நபிமார்கள் வெகுபேர் தானும்
கூக்குரலாய் பேசார்கள் வாநந் நன்னை
தேடுவார் ...... ... ..............

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், வங்க செந்தூரம். காரீயம், வங்கம், காக்துண்டி, துத்த சினசுன்னம், சூதக்கட்டு, தங்கக் களங்கு, நாக செந்தூரம், சத்து செந்நூரம், நாகச்செம்பு, துருசுச் செம்பு, தாளகக் கட்டு, அப்பிரக நவனீதம் முதலான பல தலைப்புகள் உள்ளன.

———

வரிசை எண் : 3078 சுவடி எண் : 1584-a

## யாகோபு 300

ஏடுகள் : 56 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 39×3 செ.மீ.
பக்கத்திற்கு : 5—6 வரிகள் ஆசிரியர் : யாகூபு பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, சுவடி எண் 1583-a-ன் மறு பிரதியாகும்.

வரிசை எண் : 3079 சுவடி எண் : 1584-b

## யாகோபு சுண்ணம் 600-க்குச் சுருக்கம் - 300

ஏடுகள் : 56 கி. எண்ணிக்கை : 1500 அளவு: 39×3 செ.மீ

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : யாகூபு பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

குறிப்பு :

இது. சுவடி எண் 1583 - b- ன் மறு பிரதியாகும். அதே 'கூக்குரலாய்ப் பேசார்கள் வாதந்தன்னை, தேடுவார்' என்ற வரையிலுமே உள்ளது.

வரிசை எண் : 3080 சுவடி எண் : 1585

## சட்டை முனியார் சுன்னக் காண்டம்

ஏடுகள் : 50 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 30×2 செ.மீ

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : சட்டைமுனி பொருள் : மருத்துவம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம்
வேட்டதொரு ...... ...ல்லை யைத்தான்
வெண்காரக் கருவாலாட்டி
புகழாரக் காசுபோல வில்லை கட்டி
நீட்டவொரு கரியோட்டில் வைத்து ஊதி
நேராக வெளுப் போடிச் சுண்ணாம் பாகும்.

முடிவு :

தண்ணியிலே மூலிகையைக் கடந்து மேலோத்
தகமாரச் சத்தோடு சூதமுண்ணில்
பண்ணயிலே பயறோடு பலகாரம் பழங் கனி
பலபலவுந் தின்னலாம் பயமும் போச்சே ! — 183

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், இடையிடையே ஏடுகள் இல்லை, இதில் காயசித்தி, காகுத்த நாராயணர், பெண் கலை ஆகியவை உள்ளன.

வரிசை எண் : 3081 சுவடி எண் : 1586

# போகர்—708

ஏடுகள் : 108 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 29 × 2½ செ மீ

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : போகர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சவுக்காரவைப்பு

ஆனந்த மாய் நிறைந்த ஆயிபாதம்
அகண்டபரி......... அய்யர் பாதம்
வானந்த மாகிநின்ற கிணேசர் பாதம்
மருவியதோர் மூலத்தின் நந்தி பாதம்

முடிவு :

பழுப்பான கெருடனுட பழுப்புச் சாறு
பரிவான வெருக்கினுட கிழங்குச் சாறு
கொழுப்பான் வெள்ளாட்டு ரெத்தத் தோடு
கூறாக முசல் ......... 414

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 753/D-1503 போன்றது. முன்பகுதி சிதைந்துள்ளது.

வரிசை எண் : 3082 சுவடி எண்: 1587-a

# திருமூலர் செய்த சுந்தரானந்தர் சுருக்கம்

ஏடுகள் : 15 கி எண்ணிக்கை : 400 அளவு : $27 \times 2\frac{1}{2}$ செ மீ.

பக்கத்திற்கு : 6—7 வரிகள் ஆசிரியர் : திருமூலர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

திருமூலர் சுந்தரானந்தருக்கு உபதேசம் செய்தருளிய
சுந்தரானந்தர் சுருக்கம்

வெண்பா

அறிவுதரு ஞான ஆனந்த குமரன்
சுருதிமுடி வான சுருக்கமே—பருதி
மதியடியைப் போற்றி வந்தமிந்த முண்டு
கதியடைவார் பூரணமே காப்பு.

நூல்

அறிக்கி முதலெழுத்தைச் சுளியைப் பாரு
அதிலடங்கும் முனையடக்க முனையைப் ....... க்கும்

முடிவு :

சத்தியமாய் வருவாளாத்தாள்
தனக்கெட்டும் மாண்டுமடா யெய்தும் பாரு
வெத்தியடா வேதாந்தம் பார்த்துக் கொள்ள
வெகு சுருக்குக் கருமானம் சுருக்க முற்றே. —84

திருமூலர் சுந்தரானந்தருக்கு உபதேசம் செய்த
சுந்தரானந்த சுருக்கம் முற்றும்.
வாலை மனோன்மணி துணை
—யீசுபர...................

காலம் :

இல்லை

குறிப்பு :

செய்யுள்கள் சிறப்பாக உள்ளன. ஏட்டின் பின்பகுதி அரித்துளது.

வரிசை எண்: 3083 சுவடி எண்: 1587-b

# திருமூலர் தத்துவக் கட்டளை

ஏடுகள் : 11 கி. எண்ணிக்கை : 300 அளவு : 27 × 2½ சென்டி மீட்டர்
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : திருமூலர் பொருள் : தத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம்

பூதம்—5 பொறி—5 புள்ளி—5 கன்மவிந்திரியம்—5
கன்ம விடையம்—5 காணம்—4. அறிவு—1
ஆக முதல் தத்துவம்—30

முடிவு :

மனம் புத்தி ஆங்காரம் சித்தம் ஆக—4.
இந்தப் பதினாறு கருவிகளுடனே தன்னுடைய
அருளினாலே இராசாவும் படைகளும்
போலே நிற்கும் மென்றறியவும்.
திருமூலர் தத்துவக் கட்டளை முற்றும்.
முற்றிற்று.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், உடற்கூற்றுத் தத்துவம் பேசப்படுகிறது.

வரிசை எண் : 3084 சுவடி எண் : 1587-c

# அகத்தியர் வாகடம் - 100

ஏடுகள் : 24 கி. எண்ணிக்கை : 600 அளவு : 27 × 2½ செ. மீ
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பூரணமாய் சுழினை நடுக் கமல மீதில்
புகழ் பெரிய மூலகண பதியேகாப்பு
காரணமாய் எனையாண்ட பராபரனைப்போற்றி
கட்டாக வாதத்தில் லெட்சம்காப்பு

முடிவு :

மனம்வேரு தட்டுண்டால் யெல்லாம் போச்சு
மாய்கையத்துத் திரிந்தலைவான் மாள்வானய்யோ
மனம்வேரு சாதகமாய் சாஸ்த்திரம் பார்த்து
மனம்பிலக்கக் குருவினிடம் வணங்கி நின்றால்
மனம்வேறு வாராது சித்தி முத்தி
வாய்க்குமே சூஸ்த்திரந்தான் நூறு முற்றே —100

அகஸ்த்தியர் நூறும் முற்றுப் பெற்றது
துரைசாமி கையெழுத்து

காலம் :

இல்லை

குறிப்பு,

இதில், அம்மன்பூசைக்கு முறை, வாதத்திறவுகோல் அப்பிரகம், பெரியோர் வணக்கம், செயநீர், செந்தூரம், லிங்கம், கரியுப்புக்கட்ட வெடியுப்பு, முதலான தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3085 சுவடி எண் : 1587-ஞ

## கருவூரார் பூசாவிதி

ஏடுகள் : 8 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 27×2½ செ.மீ

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : கருவூரார் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக
ஆதியென்ற வாலையவ ளிருந்த வீடு
ஆச்சரியம் மெத்த மேத்த அதுதான்பாரு
சோதியென்ற நடுவீடு பீடமாக
சொகுசுபெற யினிதிருந்தாள் துரைப்பெண்ணாத்தாள்

முடிவு :

சுளிவதற்குச் சுளியிருந்த சுளியைச் சொன்னோம்
சொல்லாத மோனமுதல் கருவும் சொன்னோம்
ஒளிவதற்கு உறுதி சொன்னோம்
உற்பனமாய்ப் பார்த்தவர்க்குத் தெளிவு தானே! —30

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 484-C/D-934 போன்றது. பாட வேறுபாடுகள் மிகுந்து காணப்படுகின்றன.

வரிசை எண் : 3086 சுவடி எண் : 1587-e

## சட்டை முனியார் நிகண்டு

ஏடுகள் : 19 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 27×2½ செ.மீ.
பக்கத்திற்கு : 7 – 8 வரிகள் ஆசிரியர் : சட்டை முனியார் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம்
ஆதியந்த மில்லாத பூரணத்தைப் நோக்கி
அடுத்து நின்ற வுன்மனைத்தாய் பதத்தைப் போற்றி
பாதியந்த மாகிநின்ற யுமையாள் சொல்ல
பாங்கான சின்மயத்தின் கருணையாலே

முடிவு :

பந்தன் பரமன் பாயுறு கெற்பத்தோள்
சிந்தன் சீர்பந்தன் பாசாணனும்மே —167.
கொச்சம் உண்டு; எழுதவில்லை
குருபாதந் துணை.

காலம் :

இல்லை

குறிப்பு:

இது, எமது சுவடி எண் 820/D-1637 சட்டை முனியார் நிகண்டு 205 போன்றது.

இதன் பின்னர் ''மூலத்துக்கு முளைக்கரைய'' என்ற தலைப்பில் வைத்தியம் எழுதிய ஏடு ஒன்றுளது.

..........

வரிசை எண் : 3087 சுவடி எண் : 1587-F

# திருமூலர் தண்டகம் 100

ஏடுகள் : 23 கி எண்ணிக்கை : 600 அளவு : 27 × 2½ செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : திருமூலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுள்ளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம்

பூமகள் கயிலை மேவும் பூரிணமான தொன்றை
ஆகம வேத ஞானம் சுருதியுமான தொன்றை
நாகவா பரணம் பூண்ட தந்திதண் டக்க மோத
தேகமா மகத்தி னந்தி விநாயகன் காப்ப தாமே! —1

முடிவு :

தாமப்பா அவனொருவன் கோடி சித்து மாட
நாமப்பா நந்திகுரு வான் மூலம்
நான்கண்ட தண்டக்கம் நலமா முற்றே. —100

முற்றும்
குருவே துணை.

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 258-d/D-461 திருமூலர் தண்டகம் போன்றது. பாட வேறுபாடுகள் மிகுதி

---

வரிசை எண் : 3088 வரிசை எண் : 1587-g

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 100 அளவு : 27×2½ செ.மீ

பக்கத்திற்கு : 5—6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம்

முழங்கால் கரப்பானுக்கு

காற்த்தி..............ஒட்டரையும் நேர்வாளம்

யிது ........... குடோரியாடி யிந்தமருந்தைத்

தடவப் பிடிக்கவும்

முடிவு :

கெந்தகம் பலம்—5

இதையெல்லாம் தனித்தனியே

சுத்திசெய்து கொண்டு

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், பிறவினோக்க், பருவுக்கு, மூலத்துக்கு கிஷாயம் மூலத்துக்கு நெய், காரியபற்பம், குன்மத்துக்கெல்லாம், குக்கில் சூரணம், ஆகியவை உள்ளன.

வரிசை எண் : 3089 சுவடி எண் : 1587-h

## சுப்பிரமணியசுவாமி பேரில் சஷ்டிகவசம்

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 60 அளவு : 27 × 2½ செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : தேவராயன் பொருள் : இலக்கியம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து தமிழ்.

தொடக்கம் :

ஓம் சஷ்டியை நோக்க சரவணை பவனார்
சிஷ்டர்க் குதவுஞ் செங்கதிர் வேலோன்

முடிவு.

பனைத்துடை ரெண்டும் பருவேல் கார்க்க
கணைக்கால் முழுங்கால் கதிர்வே ல் காற்க.

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, அச்சானநூல்

வரிசை எண் : 3090 சுவடி எண் : 158

## மூதண்டம் - 300

ஏடுகள் : 53 கி எண்ணிக்கை : 3000 அளவு : 38 × 3½ செ.மீ
பக்கத்திற்கு : 7—8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் ? பொருள் : மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்,

தொடக்கம் :

.................சப்பாபே ரதி மூலயாச்சு
பேரான ஊமையென்றும் உயிருமாச்சு
கிாச்சப்பா கருவுருவாய் பிண்டமாச்சு
..........க்கு ளமுர்த் மென்றுஞ் சழந்தா னிாச்சு
வாச்சப்பா அமுர்த மென்ற பனினீராச்சு
மகத்தான சுத்த சில மதுக்குப் பேரே ! — 6

முடிவு :

வாறான முன்னூறு பலித சித்தி
    மகத்தான நாதாக்கள் குருவின் பீடம்
ஆறான ஆயிரத்து அறுநூறு சொச்சம்
    ஆகதுகை முன்னூத்தி லடங்கிப் போச்சு
நாறான ராமனிட அமுர்த வாக்கியம்
    நவரசத்தின் னால்வேதம் முழுதுஞ் சொன்னேன்
மூறான மூக்கருவாஞ் சூட்சா சூட்சம்
    முகிஞ்சுதப்பா மூதண்ட முன்னூற் முற்றே — 334

மீனாட்சியம்மன் துணையுண்டாவதாகவும்
வேலவர் துணையுண்டாவதாகவும்
ஸ்ரீ ராமர் ஜெயம். எந்நாளும் லெட்சுமி முன்னிற்கவும்
சரஸ்பதி முன்னிற்கவும். தம்பிரான் துணை செய்யவும்.
ஸ்ரீ ராமர் துணை.

காலம் :

1853 - வருஷத்தில் எழுதி முகிந்தது
இப்படிக்கி மகாலிங்கம் பிள்ளை

குறிப்பு :

இது. எமது சுவடி எண் 276-b/D-493. '(காயகற்பம்) மூதண்ட லேகியம் முதலியன' வின் வேறாயது இதில் முதலில் ஏடுகள் இல்லை. முதல் 5 செய்யுட்கள் இல்லை கடைசி ஏட்டில் அட்டவணை உள்ளது.

வரிசை எண் : 3091 சுவடி எண் : 1589

## கெவுமதி நன்னூல் — 428

ஏடுகள் : 107 கி. எண்ணிக்கை : 3600 அளவு : 38×2½ செ மீ
பக்கத்திற்கு : 4—5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் . மருத்துவம் நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்:

தொடக்கம் :

எல்லாஞ் சிவன்செய லென்பா ரறிவிலார்
சொல்வே . பொதுச்சொல் சூட்ச மறிந்திலார்
…………யந்த வேதம் பார்த்துழைத்தோர்க்கு
யெல்லாஞ் சிவன்செய லென்னவு மாமே !

நூல்

சிவகிருபை பாதமது போற்றி யானுந்
தெரிந்தெடுத்துப் பதினெண்பேர் மறைத்தல் பார்த்து
தம்பெறவே கெவுமதிநூல் பாடல் நூத்தில்
சாத்தினோம் வைத்தியங்கள் ஞான யோகம்

முடிவு :

சூஷ்ச்ச மப்பா கெவுமதிநூல் நானூர் வீசும்
சுருக்கமதாய்ப் பதினாறு கதைக்குள் பாசம்
மாச்சலப்பா ஒன்றுமில்லை வெளியாய்ச் சொன்னோம்
மைந்தனே உலகமதில் வாதமேது
காச்சப்பா யெரிந்துவிடும் பெரிதோ அல்லால்
அவ்வறியின் மோர்வு னீதியனுன் குன்ளே
மூச்சப்பா கடிகையொன்றில் முடிந்து போச்சு
முற்றுமப்பா கௌமதிநூ லிவைதான் முற்றே. —428

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 752-a/D-1501 கௌமதி நன்னூல் போன்றது.

வரிசை எண் : 3092 சுவடி எண் : 159

## வைத்திய சாத்திரம்

ஏடுகள் : 95 கி. எண்ணிக்கை : 4000 அளவு : $39 \times 2\frac{1}{2}$ செ.மீ.
பக்கத்திற்கு : 5—6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள்: மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக
.........யித்திய .........த்திரம் ........... ணி

ஓமெனுமோ விநாயகன் நன் பாதங் காப்பு
ஒளியான போத்தி குரு கிடாட்சத் தாலே
னாமேனிமே சிரோமணி ........... சாத்திரம்
நவிலுகுரோம் சஞ்சீவியிதுக்கொப் பாகும்

முடிவு :

முட்டியோடு பேராமுட்டி முத்தக் காசு
முக்கியமாந் தூதுவளை கண்டங்கத்திரி
தட்டியமாம் பாண்டத்தில் வேடு சாத்தி
தவுடதுபோ லிடித்தெடுத்துப் பிட்டுக் கட்டி
மாட்டியெறி புட்டெடுத்துப் பிளிந்து கொண்டு
மாறியிடு திப்பிலிதே னிட்டுக் கொள்ளு
காட்டியமாம் பழஞ்சுரங்கள் அகதி வேகம்
சாறாது குடிலங்கள் அகன்று போமே. — 506.

காலம் :

இல்லை

குறிப்பு :

தலைப்பு ஒடிந்து பாதியாக உள்ளதால் தலைப்பு காண இயலவில்லை. இதில் சலரோக செந்தூரம், லிங்கக் கட்டு, பீனசத்தயிலம், சண்டரச செந்தூரம், சோகைக்கு, கணச்சூட்டுக்கு, சுரங்களுக்கு, கிரந்தி சல பிரமியத்துக்கு, கருவங்க பற்பம் முதலான பல தலைப்புகள் உள்ளன.

இதன் பின்னர் மந்திரம், மருந்துகள் எழுதிய ஏடுகள் 5 உள்ளன.

வரிசை எண்: 3093 சுவடி எண்: 1591

# (அகத்தியர் பெருநூல்) மூன்றாங் காண்டம் இந்திரசாலம்

ஏடுகள் : 55 கி. எண்ணிக்கை : 1600 அளவு : $28 \times 2\frac{1}{2}$ செண்டி மீட்டர்

பக்கத்திற்கு : 7—9 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

காரண மெஞ்ஞான வெளி கடந்து நின்ற
கற்பகமே விற்பனமே கருணை மேவும்
பூரணமே பஞ்சகற்தா ரூபியான
புண்ணியமே நிண்ணயமே பொருளே வேத

முடிவு :

கூட்டிய மையஞ்சனத்தை யெந்தனாணை
குருவாணை பிதாவாணை மாதா வாணை
காட்டியபேர் நகரமதிற் புகுவா ரப்பா
காட்டாமல்க் கையிலிடக் கனகங் கொண்டு
கோட்டுமத வாரணத்தை யுரித்தோன் சொன்ன
கொடுமையிது கூறாதே யொருமா னாணே
வீட்டிமை யாய் ... ......... — 298

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 747-c/D—1489 ''அகத்தியர் பெருநூல் மூன்றாங் காண்டம்'' போன்றது. சுவடியில் ''மூன்றாங்காண்டம் இந்திரசாலம'' என்று மட்டுமே உளது. இந்த ஒப்புமைச் சுவடி தலைப்பு கொண்டு இதற்கும் 'அகத்தியர் பெருநூல்' என்று தலைப்பிடப்பட்டது.

வரிசை எண் : 3094 சுவடி எண் : 1592-a

# அகத்தியர் புன சுருட்டு

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 200 அளவு : 25½×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மாந்திரீகம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம்

சீருலவும் அஷ்டகற்மம் யெட்டுவகை தொழிலும்
தெரிந்தெடுத்து புனசுருட்டைத் தெளிவாய்க் காட்ட
காருலவும் ஐங்கரன் குஞ்சரக் குமரன்
கெங்கையாம் அவளுடைய சிவன்மாலுங் காப்பு

முடிவு :

கத்தியென்ன முனைதானே செயித்தா லாகுமென்று
காசினியில்க் கருவோடே செயிதால்தானே பலிக்கும்
யெத்தொழிலும் மாடுமிது புனசுருட்டு சூஸ்த்திரம்
யின்னூலே மெய்யாமென்று சத்தியஞ் சொன்னேன் முற்றே —18

நாஷனான் (சக்கரங்கள் 2 இருக்கின்றன)

தம்பனம். நமசிவய யவசிமந. நமசிவய யவசிமந. நமசிவய.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், மாந்ரீகம் பேசப்படுகிறது.

வரிசை எண் : 3095 சுவடி எண் : 1592-b

# அகத்தியர் இருதலைக் கொள்ளி

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 150 அளவு : 25½×3 செ மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மாந்திரீகம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

வாலைமனோன் மணிநிதமும் வந்து விளையாடும்
மாந்திரீக வித்தையிலே ஆந்திரிக மாடும்
சாலமெல்லாம் தெளிந்தயிரு தலையாங் கொள்ளி
சத்துரு மித்துருவையும் வெற்றி கொள்ளும்

முடிவு :

புசபெலவான்...ருவான கருவதையுங் கொண்டு
பூட்டிவித்தால் தொழிலாடும் புவிதனிலே தானும்
(எ)ஜமான சற்குருவைக் காண அவர் சொல்வார்
தாரணியில் இதுநிசமாய் சந்தியந் தானே ! —11

ஹரி : ஓம்

காலம் :

இல்லை

குறிப்பு :

இதுவும் மாந்திரீகச் சுவடி

★ ★ ★

வரிசை எண் : 3096 சுவடி எண் : 1593-a

# திருமூலர் ஆறாதாரக் கட்டளை — திருமந்திரம்

ஏடுகள் : 11 கி. எண்ணிக்கை : 150 அளவு : 27×2½ செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : திருமூலர் பொருள் : தத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது. எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம்

திருமூல தேவர் திருமந்தி ரத்தை
ஒருமூல மாக உணரவல் லாரில்லை
ஒருமூல மாக உணரவல் லாற்கு
கருமாள வெந்திநந்நிக் கருணைபெற் றாரே!

முடிவு :

மன்றுகை வீச்சு மருவலனைப் பூமனந்து
கையும் கருகி மிதித்த கமலப்
பதமுங் கண்டு குருகுஞ் சிவாயந
மோவென வோதே அப்பாலேகும்
சீதனமாய் நிற்கும்
ஆறாதாரக் கட்டளை முற்றும்
குருவே துணை

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 838 o-/D.-1725 அகத்தியர் ஆறாதாரக் கட்டளை 8-ன் வேறாயது.

—★★—

வரிசை எண் : 3097 சுவடி எண் : 1593-b

# நாதாந்தத் திறவு கோல்

ஏடுகள் : 20 கி. எண்ணிக்கை : 400 அளவு : 22×2½ செ.மீ.

பக்கத்திற்கு : 5—6 வரிகள் ஆசிரியர் : திருவள்ளுவர் பொருள் : தத்துவம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து ; தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.
வெண்பா

எந்தவூ ரென்றீ ரென்னை
யிருந்தவூர் நீர்கேளீர்
யந்தரவூர்ச் சோதி யறியியே
யந்தவூர் முப்பாழும்

முடிவு :

காச்சென்றே தையிலமது வருச மூழ்கில்க்
கடல்புக்குமே கற்ற சாங்கத் தாலே
ஆச்சென்றுச் சிரமிட்ட காய மாச்சு
அரோசியங்க ளென்னாலும் அனுகர

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, யோக சித்தாந்த நூல். நாதத்தின் தத்துவாதீதமான ஈசுவர சொரூபம் முதலானவைகளைக் கூறுவது.

இது, எமது இலக்கியச் சுவடி எண் 1391/D-2084-ன் வேறாயது.

—★★—

வரிசை எண் : 3098 சுவடி எண் : 1594-a

# அகத்தியர் நாடிச் சுருக்கம்

ஏடுகள் : 15 கி. எண்ணிக்கை : 600 அளவு : 30×3 செ. மீ.
பக்கத்திற்கு : 6—8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக
நாடிச் சுருக்கம்

கரிமுக னடியை வாழ்த்தி கைதனில் நாடி பார்க்கில்
பெருவிர லங்குலத்திப் பிடித்தடி நடுவே தொட்டால்

முடிவு :

சித்தியாம் பின்னளித்த தாம்புலத்தாலே அய்யா
நித்தியிலு அன்னமிட்டு தாம்பூலம் யீந்தால்
நீங்காத கற்மமெல்லாம் நீங்கிப் போமே. —25

பாட்டு வயித்தியனாடி சுருக்கம் முற்றும்.

காலம் :

(தொடக்கத்தில்) விசைய வருஷம் ஆவணி மாதம் 10-ஆம் தேதி குரு வாரத்தில் அகத்தியர் நாடிச் சுருச்கம் எழுதத் துவக்கினது. குரு பாதமே துணை உண்டாக வேணும்.

(இறுதியில்) விஷய வருஷம் ஆவணி மாதம் 24-ந் தேதி கோவிந்தசாமி ஆசாரி யெழுதி முடிந்து 24. குருவே துணை, அந்ப்பது மேல் நகறம் அப்பு பத்தர் குமாரன் துரைசாமி பத்தர் மகன் கோவிந்தசாமி பத்தர்.

குறிப்பு :

இதில், 7-வது ஏடு இல்லை. அதனால் பாட்டெண்கள் மாறுபடுகின்றன. 13-வது ஏட்டில் 'அகத்தியர் நவசித்தாதி பாடல்' என்ற தலைப்பு உளது.

— ... — —

வரிசை எண் : 3099 சுவடி எண் : 1594 b

## அகத்தியர் குழம்பு

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 100 அளவு : 30×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

ஏடு பிரழ்ந்துளது). இது, எமது சுவடி எண் 594/D-1212 போன்றது.

— — —

வரிசை எண் : 3100 சுவடி எண் : 1594-c

## அகத்தியர் பலதிரட்டு

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 300 அளவு : 30×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

காரணமாய் மூலவடந் தன்னில் நிற்கும்
கணபதியும் வல்லபையுந் தேவர் காப்பு
பூரணமாம் பாற்பரையும் சிவனு நந்தி
பொருந்திநின்ற பஞ்சகர்த்தாள் கணங்கள் காப்பு

முடிவு :

வேணமதை யிடித்திடவே வகைதான் கேளு
விள்ளாதே மாத்தோலி லிட்டிரும் பாலேகுத்தி
தோன்றவே உள்ளிதின்று தயிரைக் கொள்ளு
சுகமாக முன்மேனி னிக்கித் துவாலை கேளே! —17

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், பலவிதமான மருந்துகள் பேசப்படுகின்றன.

---

வரிசை எண் : 3101 சுவடி எண் : 1595

# தெட்சணாமூர்த்தி பூரணம் - 1500

ஏடுகள் : 204 கி. எண்ணிக்கை : 10000 அளவு : 46×2½ செ.மீ
பக்கந்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : தெட்சணாமூர்த்தி பொருள்: மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம்:

ஹரி ஓம்

பூரணமாய் நிறைந்தபரி பூரணமே காப்பு
போதமய மானபூ ரணத்தைப் பாட
காரணமாய்க் கருவுருவாய் யெங்குந் தானாய்
கண்மணியி நடுவான கருணைதரும் பொருளை
ஆரண முக்கோணத் தடியில் நடுவாகி
அசையாத பொருளாகி அருவுருவு மாகி
வாரணமா மூலமதில் நந்தியெனும் புள்ளை
வாசியெனும் பூரண மனோன் மணி காப்பாமே! — 1.

முடிவு :

பாரப்பா தன் வசமாய் தன்னைக் காண
பதிவான பூதவகை அஞ்சும் பாரு
மேரப்பா ஞானமென்ற யிந்திரிய மஞ்சும்
நெரியான பெரி ......... நஞ்சுந்தான்
காரப்பா கற்ப மென்ற யிந்திரிய மஞ்சுங்
கருவான அந்தமென்ற கரணம் நூறு
தேரப்பா யிது வெல்லாம் ஆத்து மதத்துவ
............ ............ ............ — 1067.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், மருசலதும்பை, கலையறிய, பூரண மெழுகு, வியாதி வருங்குணப், அண்டபஸ்பம், தலைமுழுக நெய், பரகதி அறிய, பிரம்ம நிஷ்டை மகேசுர நிஷ்டை, சதாசிவத்தி, நிட்டை அம்பிகா தேவி மகிமை, பஞ்சபூத சரக்குவேதை, வித்துவேசனம யெட்டுக்கும் மந்திரம், அன்பத் தொன்றடைக்க, பொன்னாங்காணி நெய், கருவூரார் முறை, கொங்கணர் முறை, போகர் முறை, சட்டைமுனி கமலமுனி முறை மச்சமுனிமுறை திருமூலர்முறை நந்தீசர் முறை, சுந்தரானந்தர் முறை முதலான பல அரிய தலைப்புகள் உள்ளன.

— — —

வரிசை எண்: 3102 சுவடி எண்: 1596-a

## புலிப்பாணி பலதிரட்டு

ஏடுகள்: 28 கி. எண்ணிக்கை 700 அளவு : 43×2 செ.மீ
பக்கத்திற்கு: 4–5 வரிகள் ஆசிரியர் : புலிப்பாணி பொருள் : மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது (துண்டுகளாக உள்ளன) முழுமை: முற்றற்றது
எழுத்து : தமிழ்

தொடக்கம் :

............ வேதாந்தனாயகியே விமலிவேணி
வீரமாகா ...... ..... ....... ...... தேவி சக்தி
மூதாந்த மூர்த்திபராபரை ... ......
வல்லி — மாமுகத்தோன் பலதிரட்டு காப்புத்தானே.

முடிவு :

கொழுந்துபோ லுள்ளொளியை நோக்கிப் பாரு
கோபமொன்று மாகாது குணமே வேணும்
செழுந்தருவாம் போகருட கிடாட்சத்தாலே
சார்ந்த புலிப்பாணி பலதிரட்டு முற்றே! — 100
புலிப்பாணி பலதிரட்டு முற்றிற்று
ஸ்ரீ பரதேவதார்ப்பண மஸ்து.
ஹரி : ஓம் அவிக்ந மஸ்து.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், முதலில் சில ஏடுகள் இரண்டு துண்டாக முறிந்துள்ளன. இது, எமது சுவடி எண் 196-a/D 313 போன்றது.

வரிசை எண் : 3103 சுவடி எண் : 1596

# புலிப்பாணி ஜாலம் - 200

ஏடுகள் : 50 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 43×2 செ.மீ
பக்கத்திற்கு : 4-5 வரிகள் ஆசிரியர் : புலிப்பாணி பொருள் : ஜாலம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக அவிக்க மஸ்து.

காப்பு — பாயிரம்

சத்தியே தயாபரியே ஞான நூலி
சாம்பவியே மனோண்மணியே கபாலி சூலி
முத்தியே வேதாந்த பரையே யம்பாள்
முக்குணமே முச்சுடரே மாயா வீரி

முடிவு :

ஆமேநீ கெந்தியிட்டு சேந்தி ருந்தால்
அப்பனே நவகோணம் தன்னில் வேதை
வாமேநீ யிருநூறு இணரசாலம்
வளமான கண்ணாடி போலே தோத்தும்
தாமேனி நவரெத்தினங் கோத்தாப் போல
தாணிதனில் தான் விளங்கும் புலிப்பாணி தானும்
நாமேநீ போகருட கடாட்சம் பெற்றேன்
நலமான சாலமிரு ............ — 202

காலம் :

இல்லை

குறிப்பு:

இது, எமது சுவடி எண் 539/D 1142 போன்றது.

வரிசை எண் : 3104 சுவடி எண் : 1597-a

# வைத்திய வாகடம்

ஏடுகள் : 47 கி. எண்ணிக்கை : 800 அளவு : 30 × 2½ செ.மீ.
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள்: மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

ஹரி: ஓம்
தாதுவுக்கு

சந்தனம் இதுவகைக்குபலம் ........
தேத்தாங் கொட்டை தேங்காய்ப்பால்
பூமிச்சக்கரைக் கிழங்கு விட்டரைத்து .......
பூனைக்காலி வித்து நிடைசீனிச்சக்கரை
முருங்கைவேர்ப்பட்டை கூட்டிசட்டியில்

முடிவு :

ரசகற்பூரம்
பசு வெண்ணை ஊரல் இருக்காது
யிரண்டுமே
அசை போட்டால்

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 760-a/D-1528, எண் 830/D-1682 வைத்திய வாகடம் போன்றது.

முதலில் ஒரு ஏடு 'நவபாசாணத்தயிலம் - கைகண்டமுறை' என்றுளது.

வரிசை எண் : 3105 சுவடி எண் : 1597-b

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 50 அளவு : $30 \times 2\frac{1}{2}$ செ. மீ.
பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கஞமபு ரிணத்துக்கு
மனுஷ வெந்த யெலும்பு பலம் — 1
வெள்ளை குங்கிலியம் பலம் — 1
மிருதாரு சிங்கு பலம் — $\frac{1}{2}$
லிங்கம் பலம் — $\frac{1}{2}$

முடிவு :

உள்ளுக்கு ஒரு கரண்டி முட்டை அளவு
உள்ளுக்குக் குடுத்து பத்தியமா சாப்பிட்டு
மூணு காலமே அல்லது அஞ்சுனாள், யேழுநாள்
வியாதிக்கரு அறிந்து குடுத்து வரவும்
புளிதள்ளவும்

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், வீக்கம் வடிய, சதை வளத்திக்கி, பூமணி மாத்திரை காது கேளாதுக்கு ரசம் சுத்தி, முதலியன உள்ளன.

இதன் பின்னர் 'சித்தாதி எண்ணெய்' எழுதிய ஏடுகள் மூன்று உள்ளன.

வரிசை எண் : 3106 சுவடி எண் : 1567-c

## அகத்தியர் பூரணம்-16

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 100 அளவு : $30 \times 2\frac{1}{2}$ செ.மீ.
பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஆதியென்ற கணபதியெங் குருவைப் போற்றி
அமந்தரெண சூத்திரத்தின் விபரந் தன்னை
நீதியென்ற பலரிணங்கள் பிறந்த வாறும்
நேரான சாத்திய அசாத்தியக் கூறும்

முடிவு :

காரப்பா பெரியோர்க்குத் தொண்டு செய்தால்
காட்டுவார் பூரணத்தைக் கண்டு பாரு
சேரப்பா ரெணநூலின் வகையைச் சொன்னேன்
திரமான பதினாறு முகிந்து முற்றே. — 17

காலம் :

இல்லை

குறிப்பு.

இது, விரணங்களின் வகைகள், ஆற்றும் முறைகள் முதலானவற்றைக் கூறுகின்றது.

வரிசை எண் : 3107 சுவடி எண் : 1597-ஆ

# அகத்தியர் பச்சைவெட்டு — 16

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 100 அளவு : 30 × 2½ செ.மீ

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம்

அரிதாரம் பிரிதிவு மாகி நிற்கும்
ஆனதொரு சவ்வீரம் அப்பு வாகும்
பெரிதான கெவுரியது லிங்க மாகும்
பின்னையொரு வெள்ளையது வாயு வாகும்

முடிவு :

சொன்னதோர் சூஷ்த்திரத்தின் சூஷ்சமா யிந்த நூலின்
முன்னமே சொன்ன நோய்கள் சத்தியம் யிந்த நூல்தான்
அன்னமே பதினாறுக அடக்கினார் சாஷ்த்திரத்தே
யின்னமும் யிலைக்கிப் பாதியாகவு முரைசெய்தோமே ! — 16

குருவே துணை
சிவசுப்பிரமணியந் துணை

காலம் :

இல்லை

குறிப்பு :

இது எமது சுவடி எண் 308-c/D-552, எண் 185-b/D-292, எண் 513-a/D 1112 போன்றது.

கடைசி ஏட்டின் பின் பக்கத்தில் 'அண்டச் சுன்னம்' எழுதப்பட்டது.

வரிசை எண் : 3108 சுவடி எண்: 1597-

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 48 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 30 × 2½ செ.மீ

பக்கத்திற்கு : 4—6 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

வங்க உப்பு

திராஷ்ச சாராயக் காடி அல்லது வெனிகர்
ஒரு புட்டி வாங்கி வந்து அதை ஒரு புடி
புடிக்கும் படியான கலசத்தில் போட்டு
கல்லுப்பு ஒரு சிறங்கை அத்துடன் போட்டு

முடிவு :

கொளுத்தி விடவும் பஸ்பமாகும் அதை யெ..........
பசு வெண்ணையில் வைத்து மேக ரோகங்களுக்கு
கொடுக்கவும்.
பத்தியம் கடுகு நல்லெண்ணெய் நீக்கவும்

காலம் :

இல்லை

குறிப்பு !

இதில், திரிலோக பஸ்பம், சங்கத் திராவகம், கிரந்தி புண்ணுக்கு, சீதபேதி, ரத்த பேதி, திமை லவண செந்தூரம், தெய்வதாரி கற்பம், உருத்திர கற்பம் ரசக்கட்டு, முதலியன உள்ளன.

****

வரிசை எண் : 3109 சுவடி எண் : 1598-a

## ஞான வெட்டியான் வயித்திய கற்ப விதி

ஏடுகள் : 13 கி. எண்ணிக்கை : 600 அளவு : 37×3½ செ மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக.

வெற்றிதரும் ஞான வெட்டியான்
ஆயிரத்தின் மேலாக வயித்தியத்தை விளப்புவேன் நான்
சித்தமுள்ள காயசித்தி மாயசித்தி
திறமான வாதசித்தி வசியசித்தி.

முடிவு :

சொன்னபடி வசியமுடன் சேரவருள் பூணு
தீர்க்கமுள்ள செந்தணல்த் தாண்டியே பாரு
தீபவொளி வீசுமது திறமாகப்பாரு
மார்க்கமுடன் சொன்னேன் அறிந்து நீ கேளு
மனமில்லாப் பாவிக்கி ஞான மேது
கார்க்கசிலம் பொலி யோசையது காணுங்
கயிலாச மேகெதி காட்சி பெறலாமே!
யேலேலோ. — 66.

காலம் :

இல்லை:

குறிப்பு:

இது, எமது சுவடி எண் 933/D-1877. போன்ற தெனினும் மாறுபாடுகள் காணப்படுகின்றன.

இது காயசித்திபற்றிக் கூறுகிறது.

வரிசை எண் : 3110

சுவடி எண் : 1598-b

# அகத்தியர் —100

ஏடுகள் : 21 கி. எண்ணிக்கை : 800 அளவு : 37×3½ செ. மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

முடிவு :

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 466-d/D. 1036 அகத்தியர் 1200-ல் சூத்திரம் 100 போன்றது.

வரிசை எண்: 3111

சுவடி எண்: 1598-c

# மச்சமுனி மெய்சுருக்கம்

ஏடுகள் : 18 கி. எண்ணிக்கை: 300 அளவு: 37×3½ செ.மீ.

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர்: மச்சமுனி நிலைமை: மிக மிகப் பழுது

முழுமை: முற்றற்றது எழுத்து: தமிழ்

தொடக்கம் :

முடிவு:

காலம் :

கீலக வருடம், ஆடி மாதம், 19-ந் தேதி எழுதி முடிந்தது.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 833-a/D-1687 போன்றது. முதல் 2 ஏடுகள் இல்லை இறுதிப் பாடல் கொண்டு தலைப்பு காணப்பட்டது.

வரிசை எண் : 3112 சுவடி எண் : 1598-d

## இராமதேவர் வைத்தியம் — 81

ஏடுகள் : 21 கி. எண்ணிக்கை : 500 அளவு : 37 × 3½ செ. மீ.
பக்கத்திற்கு 5 வரிகள் ஆசிரியர் : இராமதேவர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஆதியிலே அமைத்தவிதி எழுத்தைக் காண
அருளான நந்திபதம் அன்பாய்க் கொண்டு
சோதியென நின்றிலங்கும் நாதரூபி
சுருதியுள்ள வாலைமனோன் மணியைப் போற்றி

முடிவு :

தானான கற்பமது ஒன்று கேளு
தரணிதனில் விள்ளாதே நாவாடாதே
ஊனான கமயினாங் காயந்தான் உன்
............ ............ ............ — 74

காலம் :

இல்லை

குறிப்பு:

இது, எமது சுவடி எண் 450-e/D-997 இராமதேவர் வைத்தியம் எண்பது போன்றது.

வரிசை எண் : 3113 சுவடி எண் : 1599

## போகநாதர்—800

ஏடுகள் . 165 கி. எண்ணிக்கை : 6000 அளவு : 29×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : போகர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

............ னவே சமாது தனில் வைத்தே னப்பா
நானென்ற ஆணுவத்தால் சித்தர்கூடி
நலமாக வந்தார்கள் நடுக்கந் தன்னில்
கோனென்ற யெனங் நடுவே பூரணமே அய்யா
கும்புமுனி சரணமென்று கூறினாரே. — 5

முடிவு :

ஞானமென்ற புருவமய்யாம் நந்தி பாரு
நந்தியொளி பிரகாசஞ் சே ............ — 780

காலம்:

இல்லை

குறிப்பு :

இதில், தொடக்க 2 ஏடுகள் இன்மையால் தலைப்பு தெரியவில்லை செய்யுள் அமைதிகொண்டு தலைப்பிடப்பட்டது.

இதில், கடுங்காரச் சுன்னம், சவுக்காரம் எண்ணெய் வாங்க, முப்புவின் பேர் காரக்கட்டு, அதிமுப்புச் சுன்னம், ஆதியந்த சவுக்காரம் முதலான பலதலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3114 சுவடி எண் : 1600-g

# சித்திராரூடம்

ஏடுகள் : 54 கி. எண்ணிக்கை : 2000 அளவு : $26 \times 2\frac{1}{2}$ செ.மீ

பக்கத்திற்கு : 6—7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.
வேதியன் கடை என்சாதி
விடத்தினா ல்த்துஞ்சு வோரை
ஓதிய மந்தரத்தால் மருந்துனா லாற்றுவார்கள்

முடிவு :

தரைமிசை ஒரு நூறு பருவமுஞ் சரிவரவே
யிருந்துதான் வாழ்ந்து
திருமகள் விளக்கம் பெற்றுப் பதினாறு
சிறுவனைப் பெற்று முத்தி சேர்வ தாமே!
சித்திராரூட நொண்டி ஏழுதி முகிந்தது.
முற்றும் சற்குருவே துணை செய்யவேணும்

காலம் :

சார்வரி வருஷம் கார்த்திகை மாதம் 7-ந் தேதி சுக்கிரவாரனாள் எழுதி நிறைந்தது முற்றும்.

இந்த சித்திராரூடம் வெங்கிட்டி னாயக்கர் குமாரன் நாறாயணசாமி நாயக்கன் சிவடி,

குறிப்பு :

இது, எமது சுவடி 613 D-1234, எண் 614/D-1235, 615/D-1236, எண் D-1825 போன்றது.

இதில், பாம்புகளின் வகை, அது கடித்தால் இடவேண்டிய மருந்து முதலியன உள்ளன.

கடைசி ஏடு இரண்டு உள்ளன. எழுத்து வரிகள் அழகாக உள்ளன.

வரிசை எண் : 3115 சுவடிஎண் : 1601

# அகத்தியர் வைதித்யம்?

ஏடுகள் : 74 கி. எண்ணிக்கை : 4000 அளவு : $20 \times 3\frac{1}{2}$ செ.மீ.

பக்கத்திற்கு : 8—9 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் ? பொருள்: மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை: முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

கேளப்பா புலத்தியனே சந்தான கற்ம
கெடியான வைத்தியந்தான் சொல்லக்கேளு
நளப்பா நிருகடுகு நாபி
நலமான பாச்சலொடு

நூல்

வேமப்பா சீந்தியுட கிஷாயந்தன்னால்
வெகுசுருக்கா யிருசாமம் அரைத்திடாயே — 34

முடிவு :

யெடுத்து யிடித்து ஆவின் பால் விட்டு
பிசைந்து வலதுபுறம் போட்டு யெடுக்குறது
மூன்றுநாள் குடுக்கத்தீரும். பத்தியம்
உப்பு புளி விட்டுவிடுகிறது.

காலம் :

இல்லை

குறிப்பு:

இதில், தொடக்கம் முடிவு இல்லாததால் தலைப்புகாண இயலவில்லை. பாட்டமைதி கொண்டு தலைப்பு இடப்பட்டது.

வரிசை எண் : 3116 சுவடி எண் : 1620-a

# புலிப்பாணி பலதிரட்டு

ஏடுகள் : 22 கி. எண்ணிக்கை : 500 அளவு : 20× 3செ.மீ.
பக்கத்திற்கு : 6—9 வரிகள் ஆசிரியர் : புலிப்பாணி பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

வேதாந்த நாயகியே விமலி வேணி
வீரமா காளியம்மா ருத்திர ரூபி
நாதாந்தத் துட்பொருளே அகோரி வீரி
நாரணியே தேவி சத்தி

முடிவு :

வாமேநீ குக்டிடத்தில் வங்க வெட்டை
வளமாகத் தாக்கமொன்று லிங்க மொன்று
காமேனி யுருக்கி யதைப் பின்னால் பாரு
கருவாசுச் செம்பேழு வெள்ளி மூன்றே! — 72.

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 196-a/D-313, எண் 637/D-1260 போன்றது. இதன் ன்னர் ஒடிந்த 2 ஏடுகள் உள்ளன.

வரிசை எண் : 3117 சுவடி எண் : 1602-b

# கணபதி தியானம்

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 100 அளவு : 20 × 3 செ மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது. எழுத்து : தமிழ்

தொடக்கம் :

உகந்து நின்ற வசீகரத்தின் சூட்சம் கேளு
உத்தமனே வடதிசையில் நோக்கி மைந்தா
அகந்தெளிய விபூதியுத்தளனமாய்ப் பூசி
ஆனகலை யாசனமே லிருந்து கொண்டு

முடிவு :

மேகனாதித் தயிலம் மேதினி யோர்தான்
பிளைக்கமுனி
யோகனாதிப் பேர்க்கு கந்து வேலை
மேகனாதித் தைலம்விண்டோமே!
அகவல் முற்றும்.

காலம் :

இல்லை

குறிப்பு:

இதில், முன்தியானம் மட்டுமன்றி மேகனாதி எண்ணெய் செய்முறை பேசப் படுகிறது.

வரிசை எண் : 3118 சுவடி எண் : 1602-c

# வைத்தியத் தரட்டு

ஏடுகள் : 10 கி. எண்ணிக்கை : 200 அளவு : 20×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7—8 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்,
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சந்தனாதித் தைலம்

மாதருட யோகம் வருந்தினால்
மானிடரே தாது கெடும் நீர்
நாவுதான் கண்ணும்
போதவே காந்த லெருத்துக் கனங்கனத்து
கஞ்சித் தண்ணீர் வாங்களுடன்

முடிவு :

வேப்பெண்ணை வடியதனில் நன்றாய்
அனலில் தான் காய்ச்சி
நலமாய்ப் பொங்கத் தான் கிண்டி
போன்ற கலையந் தனிலூத்தி
புறவலிப்புச் சன்னி பாதத்துக்குங்
கன்றேதையில் மேலிட்டு காய்ச்ச முருகக்
காணா தோடிப் போய்விடுமே! —2

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், தேங்காய் நெய், சன்னிக்கு நீலகண்டத் தைலம் ஆகியவை உள்ளன.

வரிசை எண் : 3119 சுவடி எண் : 1603-a

# தன்வந்திரி சூத்திரம்-25

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 500 அளவு : 21×3 செ.மீ.
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : தன்வந்திரி பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து: தமிழ்.

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 847/D-1818 போன்றது.

வரிசை எண் : 3120 சுவடி எண் : 1603-b

## மந்திர சாத்திரம்

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 60 அளவு : 21×3 செ. மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம் நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம்.

ஓம் பூமியைப் பூடமாகி புலிதனைச் சுருபமாகி
தானவன் ஞானயோகம் வடவும் பளிங்கும்
ஆதர யோகமாகி இப்படி இருக்கப் படா
தென்றவர்

முடிவு :

மூல மந்திரம்

அ. ஆ. இ. ஈ. உ. ஊ. எ. ஏ. ஐ. ஒ. ஓ. ஔ. ஓம்
சவ்வுங்கிலியும் நாலு லெட்சத்தி யெண்பத்
தீராயிரம் தேவதையும் என்வசமாகக்
குருவரியச் சிவா
யீசுபரனை நினைந்து உருச் செய்கிறது.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதன் பின் சக்கரம் இருக்கிறது

இதன் பின்னர் மருத்துவம் எழுதிய ஏடு ஒன்றுளது.

+++++

வரிசை எண் : 3121 சுவடி எண் : 1603-c

## சுந்தரானந்தர் சிதம்பர வாலை பட்சணி - 36

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 300 அளவு : 21×3 செ.மீ.
பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : சுந்தரானந்தர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக

சிவ சிவா குண்டலிதான் சிவமே போற்றி
சிவன் மகனே சுப்பிர மண்ணியர்.........ற்றி
சிவ சிவா வீரபத்திரர் பாதம் போற்றி
சிவனடியார் வயிரவனார் பாதம் போற்றி

முடிவு :

சத்திக்குப் பூசையிட்டு பெலியும் ஈந்தால்
சகலமுள்ள தேவதைகள் வசிய மாகும்
உ_த்தித்துத் திலதமிட்டுப் பார்க்கும் போது
உலகத்திப் புதைத்ததெல்லாம் வெளியாய்ப்போ......

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில் மாந்திரீகக் குறிப்புகளுடன் மருத்துவம் உளது.

—+ + +—

வரிசை எண் : 3122 சுவடி எண் : 1603-d

## அகத்தியர் கல் சுண்ணம்—16

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 300 அளவு: 21 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம்:

நன்றாக

ஆதியந்த நடுவான சோதி பாதம்
அனுதினமும் நெஞ்சில் வைத்து அருளைப் போற்றி
சோதிமயமானதொரு துரியம் பார்த்து
துரியத்தின் நடுநின்ற சிவனைப் போற்றி

முடிவு :

தேனென்ற மனோன்மணியை பூரணந்த னர் .........
சிவனொருங்கும் பராபரமே கருவ தாகும்
நானென்ற அகம்பிடித்தால் தலைதெரித்துப் போகும்
நல்லதொரு கல்ச்சுண்ணத் துப்பு முற்ரே! — 16.

தெட்சணாமூர்த்தி பாதமே நமஷ்த்து.
வைத்தியத் திருமலைதாசன் அஸ்த்தலிகிதம்
தேவிசகாயம்.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், கல்சுன்னம் செய்முறை பேசப்பட்டுள்ளது

வரிசை எண் : 3 23 சுவடி எண் : 1603-e

## கொங்கணர் வாக்கியம் - முப்பு

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 100 அளவு : 21×3 செ.மீ.

பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : கொங்கணர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக

சொல்லுகிறேன் மக்களே எல்லோருக்கும்
சுளுகான வழியொன்று சூட்டக் கேளும்
………… வெடியுப்புப் பலந்தான் பத்தும்
மருவிநின்ற புளிபத்துச் சார மொன்று

முடிவு :

இமுக்கான உப்பெல்லாமம். பழு ….. ண்ணும்
படுமுன்னேத் தாதுவெல்லாம் படுதீப் பத்தும்
கொளுக்காதே இதைக்கண்டுக் கெள் …… தேக்
கொள்ளாதே காமநோய் குடில மாமே ! —11

காலம் :

இல்லை

குறிப்பு:

இதில், முப்பு பற்றிப் பேசப்படுறது.

வரிசை எண் : 3124 சுவடி எண் : 1603-f

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 100 அளவு : 21×3 செ மீ.

பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

செம்முள்ளி ஆடா தோடை
சங்கு சங்கன் குப்பி திரிகடுகு,
யேலம் கண்டங் கத்திரி அரத்தை
கடுக்காய் கொடிவேலி

முடிவு :

தாது புஷ்டி லேகியம்

சாலாமிசிரி ரூபமி மிஸ்த்தகி டால்சின்னி
× × × × ×
உளுந்து இது பத்தியம் இதுக்கு தாது புஷ்டி .........
பளவும். சரீரம் தணியும். நரைதிறை மாறும்
கைகண்டது குருவே துணை செய்யவும்

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், கட்டுண்ட பாசாண மெழுகு மெழுகு பண்ண முதலான சில மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 3125 சுவடி எண் : 1603-g

# ஆனந்த லகரி

ஏடுகள் : 55 கி எண்ணிக்கை : 1000 அளவு ; 21×3 செ.மீ.
பக்கத்திற்கு : 5—6 வரிகள் ஆசிரியர் : கவிராச பண்டிதன் — விரையானாதர்.
பொருள் : இலக்கியம் நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது
எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக
முன் கைலாசகிரியிலே வரைந்து
சிவன் சோத்திரஞ் செய்த பராசத்தி புகழ்
ஆனந்த லகிரி

குருவே துணை.

திகடச்சக்ர செம்முக் மைந்துளான் ............ போற்றுவாம்.
வேகமா நெறிசேரும் ........... போற்றுவாம்

முடிவு :

வேதநின் பொருளாதி சுந்தரி வீறடங்கவும்
மோதவே யீதயர்ந்து விடாசொலுங் கவிராச
பண்டிதன் வீரையானனாத நஞ்சகிதாள்
போத்தி திருநாம மொன்பது நூறுமே யோதி முற்றும்

திருச்சிற்றம்பலம்

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், பாடல்கள் அதனதற்குரிய சக்கரங்களுடன் உள்ளன.

வரிசை எண் : 3126 சுவடி எண் 1603-h

## அபிராமிப் பாடல் - பாயிரம்

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை 50 அளவு : 21×3 செ.மீ.
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அபிராமிப்பட்டர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சிவகாமி அம்மன் துணை

மொழிந்த மரை நூலியற்று முகபடாமணிந்து
முதுஞானதான
மொழிந்து தனதினைமணி யென்றிரு சுடரும்
புனைகளிற்றைப் போற்றல் செய்வாம்.

முடிவு :

தடவரசு முன்பினுள் பலமத பிரபந்த மெனும்
அடுபகை துரந்தென் மணி .......
நடமிடும் பெருங்கவிதை மதகிரி யொடும் புவியை
நகரிவலம் வந்தது வேலி.........
இது முன்னீர்ப்பனுவலை வடமொழியால் வியந்து கூறியது
பாயிர முற்றும்

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, திருக்கடையூர் அபிராமி அம்மை மீது பாடப்பட்ட பாடலுக்குக் கூறிய பாயிரப் பாடலாகும். 6 பாடல்கள் உள்ளன.

★★★★

வரிசை எண் : 3127 சுவடி எண் : 1603-j

# பூசா விதி

ஏடுகள் : 19 கி எண்ணிக்கை : 500 அளவு : 21×3 செ.மீ

பக்கத்திற்கு : 5—6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் தோத்திரம் முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஓம் பச்சை நிறமும் பவளச் செவ்வாயும்

★ ★ ★ ★ ★

யோகாசனத்தில் வடிவுமாகிய ஏகாட்சர ரூபியே நம.

கிடத்துக்கு ஆவாகனம்

மயேசுவரி மகா புவனேசுவரி திரிபுராந்தகி
மகா வயிரவி வீரபத்திரி வீறேஸ்வரி மகா லெட்சுமி

முடிவு :

அக்கினியாய நம. யெமனாய நமா
நிருதியே நமா வருண னாய நமா
குபேராய நமா யீசானியாய நமா.

காலம் :

இதில், அம்பிகையைக் கலசத்தில் எழுந்தருளப் பண்ணி பூசிக்கின்ற முறையை யும், அதற்குக் காட்ட வேண்டிய முத்திரைகளின் வகைகளும் கூறப்பட்டுள்ளன.

வெவ்வேறு அம்பிகையைப் பூசிக்கும் முறையும் காணப்படுகிறது.

★ ★ ★

வரிசை எண் : 3128 சுவடி எண் : 1603-k

# வாலை பூசாவிதி

ஏடுகள் : 18 கி எண்ணிக்கை : 1000 அளவு : 21×3 செ.மீ

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : இலக்கியம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்,

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக
பாரப்பா வாலைதனைத் தியானஞ் செய்ய
பாங்கான நவகோண மிட்டுச் சூள
சேரப்பா யிருவனையும் வாசல் நாலு
சிறப்பாக ரீங்கார மிட்டு நன்றாய்

முடிவு:

அருமையுட வீருமலைகள் ரண்டும்
போதுகளியேறு மருமை கேளு பருமை ..........
காயத்தில் கனினேறே பாயுறுவாம் பாள்
அதியானார் காணே — 43
காணப்பா பணத்தைப் புரிந்து நண்ணாய்க
கைமுறையாய் .........

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், வாலை மனோன் மணியைப் பூசிக்கும் முறை கூறப்பட்டுளது. இது, எமது சுவடி எண் 710/D-140 3-ன் வேறாயது.

வரிசை எண் : 3129 சுவடி எண் : 1603-k

## சதுக்கோணமாலை

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை: 200 அளவு : 21 × 3 செ மீ
பக்கத்திற்கு: 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள்: இலக்கியம்
முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது இலக்கியச் சுவடி எண் 893-a/D-1148, எண் 759-e/D-1324 போன்றது.

வரிசை எண் : 3130 சுவடி எண் : 1603-l

# அடுக்குநிலை (போதகம்)

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 100 அளவு : 21×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : இலக்கியம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

குறிப்பு :

ஞானக்கண் கொண்டு நோக்கும் ஞானிகளே குரு என்பதனை அடுக்காகக் கூறுவது இது.

இது எமது சுவடி எண் 512-b/D-1111 மற்றும் இலக்கிய எண் 1419/D 2050 போன்றது.

வரிசை எண் : 3131 சுவடி எண் : 1603-m

# கோரக்கர் மூலி

ஏடுகள் : 3 கி.எண்ணிக்கை : 50 அளவு : 21×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : கோரக்கர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

கொள்ளவே கோரக்கர் மூலி தன்னை
குருவாகச் சொல்லுகிறேன் .........
சொல்லுவேன்ம் பலம் பத்து கோரக்கர் மூலி
...............த்திவரு யீறஞ்சு திரந்தான்

முடிவு

வேணுமென்ற பொருள்கள் தரு...மிகு ...............ன்
ஆமப்பா யெட்டேழுஞ் சித்தி யாகும்
ஆதிமெ ...............ணக் கிணத்தைக்கூட்டே

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, மருத்துவச் சுவடியின் பிற்பகுதி போலும்.

வரிசை எண் : 3132 சுவடி எண் : 1603-ந

## மாணிக்கவாசகர் ஞானத் தாழிசை

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 50 அளவு : 21×3 செ.மீ

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் மாணிக்கவாசகர் பொருள் : ஞானநூல்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை ; முற்றற்றது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது எமது சுவடி எண் 838- k D. 1721 போன்றது.

வரிசை எண் : 3133 சுவடி எண் ; 1603-ο

## முனிமொழி — 30

ஏடுகள் : 10 கி. எண்ணிக்கை : 200 அளவு : 21×3 செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : தத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளாது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஆதர வதனால் வந்த
வனுபூதித் ............ .. .........
......... .. ருளால மந்த உள்ளிரு
ளகத்தினாலே ...... ...
விளக்கம்ந் தன்னை

முடிவு :

ம பிறக்கும் அத்தனுரை ... ... ....
ரையத்த சத்தமே சத்தம் ... .........
மொன்றில்லாச் சித்தமேச் சுத் ..... ......
சியம். முனி மொழி முப்பது
முற்றும்

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, ஆறாதாரம் முதலின தத்துவங்களை விளக்குவது

வரிசை எண் : 3134 சுவடி எண் : 1603-p

# பஞ்சாச்சரம்

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 50 அளவு : 21×3 செ. மீ·
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : தத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பூமியில் வானை வைக்கப்
பொருந்திய விஷங்கள் தீரும்
பூமியில் காலைவைக்கப்
பொருந்தும் தம்பனம தாகும்
பூமியில் தீயை வைக்கப்
பொருந்தும் உச்சாடணம தாகும்
பூமியில் நீரை வைக்கப்
பொருந்திய வசிய மாமே ! —1

முடிவு :

வானிலே தீயை வைக்க
வல்லினை மிகவு முண்டாம்
வானிலே நீரை வைக்க
மருவும்வங் கணம தாகும்
வானிலே பூவை வைக்க
வசியமும் மிகவும் உண்டாம் — 5

பஞ்சாஷ்சரக் கோர்வை 5-ம்

முற்றிற்று

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, ஐம்பூதங்களின் சேர்க்கையினால் உண்டாகும் நிலையைக் கூறுகிறது. பஞ்சாட்சரம் என்றதனால் ஐந்து எழுத்துக்களைக் கூறவில்லை.

வரிசை எண் : 3135 சுவடி எண் : 1603-ஓ

## நந்தீசர் திருமந்திரம்

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 100 அளவு : 21×3 செ.மீ
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : நந்தீசர் பொருள் : தத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

நந்தி உரைத்ததோர் ஞான உபதேசம்
அந்தித்த அக்கரம் ஐமூன்ற தாய்விடும்
பாதித்தச் சத்திகள் பத்தும் தரக்குளே
உத்தி யுலகத்தி லுரைத்திட வாகாதே! — 1

முடிவு :

யிணையடி யிரண்டு போற்றி பனி............
கதிரோன் போலும் பாவங்கள் நீங்கி நிற்கும்
